ஆவரங்கால் மத்தி, இந்து இளைஞர்

பக். 23

# உதயன்

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 203 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 3, செவ்வாய் 17.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


28°C
தெளிவான வானிலை

## பள்ளிகளுள் சிறைப்பட்டிருக்கும் முஸ்லிம்கள்

### அளுத்கம கலவரத்தில் 3 பேர் சாவு; 80க்கும் மேற்பட்டோர் காயம்



கொழும்பு, ஜூன் 17
பேருவளை, தர்ஹா நகர் மற்றும் அளுத்கம ஆகிய இடங்களில் தொடரும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக அந்தப் பகுதி முஸ்லிம்கள் அனைவரும் எங்கும் வெளியேற முடியாதவாறு பள்ளிவாசல்களில் சிறைப்பட்டுக் கிடக் கின்றனர். தமக்கு இதுவரை பூரண பாதுகாப்போ உணவு உள்ளிட்ட அத்தியாவசியத்தேவைகளோ செய்து தரப்படவில்லை என்றும், எந்நேரமும் எதுவும்

20 ஆம் பக்கம் பார்க்க



## அமெரிக்கா கண்டனம்

கொழும்பு, ஜூன் 17
அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அமெரிக்கா கண்டித்துள்ளது. இந்தச் சம்பவங்களைக் கண்டித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க

## இன வன்முறை குறித்து நவிப்பிள்ளை எச்சரிக்கை



ஜெனிவா, ஜூன் 17
களுத்துறை மாவட்டத்தில், அளுத்கம பிரதேசத்தில் பொதுபல சேனா நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து முஸ்லிம் - சிங்கள மக்களிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து தான் ஆழ்ந்த கவலை அடைகின்றார் எனறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அரசுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.
"இந்த வன்முறையைத் தடுத்து நிறுத்துவதற்கு முடிந்தளவு அரசு உடனடியாகச் செயற்பட வேண்டும். வன்முறையைத் தூண்டும் வகையில் வெறுப்பேற்றும் செயற்பாடுகளிலும், நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபடுவதைத்தடுத்து அனைத்து

20 ஆம் பக்கம் பார்க்க

# எமது நிலம் எமது உரிமை

## சொந்த இடத்தில் எம்மை வாழ விடுங்கள்; கோப்பாயில் திரண்டு மக்கள் போராட்டம்



சொந்த நிலத்துக்காக திரண்ட மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
ஆக்கிரமித்து வைத்திருக்கும் தமிழர் நிலங்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் எனும் கோஷத்துடன் வளலாய் மக்களால் நேற்றுக் கோப்பாய் பிரதேச செயலக அலுவலகம் முன்பாகப் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்றுக்

20 ஆம் பக்கம் பார்க்க

## குடியமர்த்துவதற்கு மறுத்தால் வெள்ளைக் கொடியுடன் புகுவோம்

### அந்த நாள் வெகுதூரமில்லை என்கிறார் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வலி.வடக்கில் எம்மைக் மீளக் குடியமர்த்த மறுத்தால் நாம் வெள்ளைக் கொடியுடன் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புகும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று எச்சரித்துள்ளார் வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம்.
வளலாய் மக்கள் தம்மை சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு

20 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் தெருவில் நிற்க சிங்களவருக்கு உறுதிகள்

### தமிழ்த் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
தமிழ் மக்களின் உறுதிக் காணிகளில் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு மறுக்கும் இலங்கை அரசு யாழ்ப்பாணத்துடன் தொடர்பேயில்லாத சிங்கள ஆக்கிரமிப்பு குடியேற்ற வாசிகளுக்கு உறுதி வழங்கி அவர்களின் சட்டவிரோத குடியேற்றத்தை சட்டரீதியான தாக்க முயல்கின்றது என்று தமிழ்த் தலைவர்கள் பலரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.
நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் குருநகரில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து காணி உறுதி வழங்கியிருந்தார். நேற்று கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் தலைவர் க்ள் அதுகுறித்துக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் இதுகுறித்துக் கூறும் போது;
"நாவற்குழியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை ஏற்படுத்தி விட்டு, சட்டத்துக்குப் புறம்பாக - அத்துமீறி குடியேறிய ஆக்கிரமிப்பாளர்களான அவர்க்ளுக்கு இலங்கை அரசின் அமைச்சர் ஒருவரே வந்து சட்டரீதியான அங்கீகாரம் வழங்கி விட்டுச் சென்றுள்ளார். குறித்த சிங்களக் குடியேற்றம் அகற்றப்பட வேண்டும்.
வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் குந்தியிருக்க நிலமின்றி அந்தரித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் எங்கிருந்தோ கொண்டுவரப்பட்ட சிங்கள

20 ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவிலில் வாள்வெட்டு

### ஒருவர் சாவு; இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
கோண்டாவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கு அரசடிப்பிள்ளையர் கோயிலடியைச் சேர்ந்த ரவீந்திரன் சுகிர்தன் (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்தவரா வார்.
மாலைவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட குழுவால் உயிரிழந்த இளைஞரின் வீடு மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் அவரது சகோதரிக்கு

20 ஆம் பக்கம் பார்க்க

## இடம்பெயர்ந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படுமாம்

### சொந்தக்காணி வழங்கப்படுமா? என்றால் மழுப்புகின்றது இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
இடம்பெயர்ந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படும் என்று தெரிவித்த படை அதிகாரிகள் அவர்களுக்குச் சொந்தக் காணிகள் வழங்கப்படுமா? எனக் கேட்டபோது உரிய பதில் வழங்காது மழுப்பினர்.
யாழ்.பலாலி படைத்தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டு நாளைமறுதினம் 18 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் அதனை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகள் குறித்து அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு நடை

20 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சந்தேகநபர் நிரபராதியென விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 17

கைக்குண்டு வைத்திருந்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி எட்டு வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் யாழ்.மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணையில் இருந்து வந்தது. நேற்று இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தொடுநர் தரப்பால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதனால் அவரை விடுதலை செய்வதாக நீதிமன்று அறிவித்தது.

மாதகலில் 2006 ஆம் ஆண்டு தீங்கு விளைவிக்கக்கூடிய வலுவான கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு குறித்த நபர் கைது செய்யப்பட்டார். (ஐ-4)

# நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி எங்கள் காணிகளை மீட்டுத் தாருங்கள்

## ஜனாதிபதிக்கு வளலாய் மக்கள் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வளலாயில் உள்ள எமது பூர்வீகக் காணிகளில் நாம் மீள்குடியமர்வதற்கு தடையாகவுள்ள காரணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீக்கித்தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் பாதிக்கப்பட்டுள்ள மக்கள்.

நேற்று தமது காணிகளை தம்மிடம் ஒப்படைக்கக் கோரி வளலாய் மக்கள் கோப்பாய் பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்ட முடிவில் பிரதேச செயலாளர் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். அந்தக் கடிதத்திலேயே பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

25 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த நாம் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றோம். போர் முடிந்து 5 ஆண்டுகள் ஆகியும் எமது வாழ்வில் எந்த மாற்றமும் வரவில்லை. வளலாய் வடக்கு கிராம சேவகர் பிரிவு முழுமையாகவும்; வளலாய் மேற்கின் ஒரு பகுதியும் இன்னமும் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

272 குடும்பங்களைச் சேர்ந்த 920 பேர் இங்கு மீளக்குடியமர வேண்டியவர்களாகவுள்ளோம். இதில் 224 குடும்பத்தினருக்கு காணி உள்ளது. அத்துடன் 234 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்தக் காணியும் கூட இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு விட்டதாக முன்னர் கூறப்பட்டது. இதன் உண்மைத் தன்மை பற்றி நாம் அறிந்திருக்க வில்லை. இப்பொழுது இந்தக் காணிகளை வலி.வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டோரில் ஒரு பகுதியினருக்கு பிரித்துக் கொடுக்க இருப்பதாக அறிகின்றோம்.

சொந்தக் காணி இருந்தும் நாம் கடந்த 25 வருடங்களாக அகதிகளாக இருப்பிடமின்றி அலையும் போது, எமது வீடுகளையும் காணிகளையும் இராணுவம் சுவீகரிப்பதோ அல்லது அவற்றை வேறு நபர்களுக்கு கையளிப்பதோ எமக்கு விளைவிக்கும் அநீதி மட்டுமன்றி மோசமான மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமை மீறல்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

எமது காணிகளை இராணுவத் தேவைக்காக தாங்கள் கையகப்படுத்துவதையோ அல்லது அவற்றை வேறு நபர்களுக்கு பிரித்து வழங்குவதையோ நாம் உறுதியாக நிராகரிக்கின்றோம். எனவே தங்களுக்கு இருக்கும் நிறைவேற்றதிகாரத்தை பயன்படுத்தி எமது காணிகளுக்கே நாம் மீண்டும் செல்வதற்கு தடையாக உள்ள காரணிகளை நீக்கி, எம்மை எமது காணிகளுக்கு அனுப்பும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கனத்த இதயத்துடன் வேண்டிக் கொள்கின்றோம். - என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ-5)

## தன்னார்வ நிபுணர் விவரம் விரைவில் அறிவிக்கப்படும்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்காக நியமிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவில் இடம்பெறும் இரு தன்னார்வ நிபுணர்களின் விவரம் விரைவில் இலங்கைக்கு அறிவிக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த ஐ.நா.மனித உரிமைகள்ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் ரவினா சாம்தாசனி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தன்னார்வ நிபுணர் பதவிக்கு இதுவரை யாரும் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படவில்லை. ஆயினும் ஒருவர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். அவர் பற்றிய விவரங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் இலங்கை அரசுக்கு அறிவிப்பார். முழுமையான விசாரணைக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள நிலையில், நியமனங்கள் அடுத்த சில வாரங்களுக்குள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று கூறியுள்ளார் அவர்.

> “மூத்த வெளியக நிபுணர்கள், விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குவார்கள். ஆனால் குழுவுக்குத் தலைமைதாங்க மாட்டார்கள்.

மூத்த வெளியக நிபுணர்கள், விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குவார்கள். ஆனால் குழுவுக்குத் தலைமை தாங்க மாட்டார்கள். இது சுதந்திரமான விசாரணைக் குழு அல்ல. ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகம் மேற்கொள்ளும் விசாரணை. அவர்கள் நிபுணத்துவ வழிகாட்டல்களை வழங்கி, விசாரணைகள் சுதந்திரமாக நடைபெறுகின்றனவா என்பது குறித்துக் கண்காணிப்பார்கள்.

தன்னார்வ நிபுணர்களில் ஒருவராக, டேம் சில்வியா கார்ட்ரைட் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியான போதும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் இன்னமும், அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)



வளலாய் மக்கள் தமது காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்தி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை கோப்பாய் பிரதேச செயலரிடம் கையளித்தனர்.

## முஸ்லிம்அமைச்சர்கள் முடிவெடுக்கும் காலமிது

### மனோ கணேசன் கருத்து

கொழும்பு,ஜூன் 17

பொதுபல சேனாவின் பொது செயலர் ஞானசார தேரரை திட்டி தீர்ப்பதில் பயனில்லை. அரசுக்குள்ளே குடியிருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் இந்த அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று நடத்திய விசேட ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தான் என்ன செய்ய போகின்றேன் என்பதை பற்றி முன்னறிவித்தல் கொடுத்துதான் அனைத்தையும் செய்கிறார் ஞானசார தேரர். அவரை குறை சொல்லமுடியாது. நடந்துள்ள அட்டூழியங்களுக்கு, தட்டிக் கொடுத்து, யாமிருக்க பயமேன் என்று சொல்லி, இந்த பொதுபல சேனாவை ஊட்டி வளர்க்கும் அரசுதான் பிரச்சினைக்குப் பொறுப்பேற்க வேண்டும். இதை முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

இன்று இந்த அரசில் இருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசுடன் ஏன் இருக்கின்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. உள்ளே இருந்தபடி சில காரியங்கள் ஆற்றலாம் என்ற நிலைமை கடந்து விட்டது. இந்த அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. இதன் மூலம்தான் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதிகளை அடக்க முடியும் - என்றார். (ஐ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த புகையிலை தமிழகத்தில் மீட்பு

இராமநாதபுரம், ஜூன் 17

பாம்பனில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த 20 லட்சம் ரூபா மதிப்பிலான புகையிலையுடன் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு படகு மூலம் போதைப் பொருள் கடத்த இருப்பதாக இராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் மாலை இரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் உள்ளிட்ட கடலோரப் பகுதியில் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தனர். இதன் போது அக்காள் மடம் கடற்கரைப் பகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில் வந்த படகைக் கரைக்கு வரவழைத்துச் சோதனை செய்தனர். அதன் போது படகில் தடைசெய்யப்பட்ட போதை புகையிலை பொதிகள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து புகையிலை பார்சல்களைப் பறிமுதல் செய்து கடத்தலுக்கு பயன்படுத்திய நாட்டுப்படகு மற்றும் வாகனம் என்பவற்றைப் பறிமுதல் செய்த பொலிஸார், கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட பாம்பன் பகுதியைச் சேர்ந்த 5 பேரை கைது செய்துள்ளனர். (ஐ-14)

கனடா
இன்றுவரை வந்தவற்றில் இது வித்தியாசமானதுதான்
3 வருட விசா படிக்க, மாதம் 8 இலட்சம் வரை உழைக்க
பொன்னான சந்தர்ப்பம்
எண்ணி 3 பேருக்கே 3 நாள்களுக்கே இந்த வாய்ப்பு
தெளிவான காலவரையறை சட்ட ஒப்பந்தம் (யாவும் நிபந்தனைக்குட்பட்டது)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2219 016, 021 568 9090
(49090)(10.6)

## வரணி மத்திய கல்லூரியில் கட்டடங்கள் திறப்பு

தென்மராட்சி, ஜூன் 17
வரணி மத்திய கல்லூரி வளாகத்தில் இரண்டாம்தரப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழா நாளை மு.ப.11.30 மணிக்கு இடம்பெறும்.
கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும், சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

# சட்டவிரோத ஆயுதம், வெடிபொருள்கள் ஒப்படைக்குமாறு துண்டுப்பிரசுரங்கள்

## வடமராட்சியில் பல பகுதிகளிலும்

கரணவாய், ஜூன் 17
சட்டவிரோதமான முறையில் வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை படையினரிடம் ஒப்படைக்குமாறு கோரும் துண்டுப்பிரசுரம் வடமராட்சியிலுள்ள பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.
அவ்வாறான வெடி பொருள்களை ஒப்படைப்பவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
படையினர் என உரிமை கோரும் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் அபாயகரமான வெடி பொருள்கள், ஆயுதங்களை வைத்திருப்பது ஆபத்தானது என்று தலைப்பிட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
துப்பாக்கிகளையோ, அதற்குரிய உதிரிப்பாகங்கள் மற்றும் பிற ஆயுத உபகரணங்கள், வெடி பொருள்கள் முதலியவற்றை வைத்திருப்பது சட்டவிரோதமாகும். அவ்வாறு எவரேனும் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் பிணையில் வரமுடியாதவாறு தடுப்பில் தடுத்து வைக்கப்பட நேரிடும்.
இத்தகைய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற விதத்தில் ஒருவர் கைதுசெய்யப் பட்டால் அவரது குடும்பம், குழந்தைகள் வாழ்வதற்கு வழியற்றுத் தவிக்கும் நிலை ஏற்படும்.
எனவே, நீங்கள் கண்டெடுத்த துப்பாக்கிகளோ அல்லது ஏதேனும் ஆயுத உபகரணங்களோ வெடிபொருள்களோ உங்கள் வசமிருப்பின் அல்லது உங்கள் வதிவிடங்களில் எங்காவது இருப்பதைக் கண்டால் தயக்கமின்றி அருகிலுள்ள பாதுகாப்புப்படையினரின் முகாமுக்கோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தெரியப்படுத்தி அதற்குரிய வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
துப்பாக்கிகள் அல்லது பிற ஆயுதங்கள், வெடி பொருள்கள், கொட்டான் துவக்குகள் இராணுவ உபயோகத்துக்குரிய ஏதேனும் பொருள்கள் எவராவது வைத்திருப்பது தெரியவந்தால் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறும்,
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.
இதற்கான வெகுமதிகள் தொடர்பான விவரங்களும் அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (வ-108)

## கொலைச் சம்பவத்தில் மேலும் ஒருவர் கைது

பளை, ஜூன் 17
பளை, தம்பகாமம் பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று தொடர்பாக பளைப் பொலிஸார் நேற்று முன்தினம் சஞ்சீவி காட்டுக்குள் மறைந்திருந்த மற்றொரு சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்.
பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையால் கடந்த வாரம் முத்தையா திலீபன் என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே இருவரைப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியதன் பேரில் எதிர்வரும் 25ஆம் திகதி வரை அவ்விருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தக் கொலையுடன் நால்வர் தொடர்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதால் ஏனைய இருவரையும் பொலிஸார் தேடி வந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து சஞ்சீவி காட்டில் மறைந்திருந்த மற்றொரு சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கற்கள் குவிக்கப்பட்டும் திருத்தப்படாத நிலையில் வீதி



*கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி திருத்தியமைக்கப்படவுள்ளது. குறித்த வீதி பல வருடங்களாக செப்பனிடப்படாத நிலையில் பள்ளம் திட்டியாகக் காணப்படுவதால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த வீதியைச் செப்பனிடுவதற்காக வீதியின் இருமருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. கற்கள் குவிக்கப்பட்டு பல மாதங்கள் சென்றுள்ள போதிலும் இந்த வீதி இன்னமும் திருத்தியமைக்கப்படவில்லை. (வ-51)*

## முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி

### சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில்

தென்மராட்சி, ஜூன் 17
முள்ளிவாய்க்காலில் இன்னுயிர் நீத்த உறவுகளுக்கான நினைவு நிகழ்வு, சாவகச்சேரி நகர சபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டத்தில் இடம் பெற்றது.
பதவியேற்று மூன்று வருடங்களாகியும் முள்ளிவாய்க்காலில் இன்னுயிரை நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தக் கால தாமதம் ஏற்பட்டாலும் எமது அஞ்சலியை நிறைவேற்ற வேண்டும் என்று தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்த கருத்தை சபை ஏற்று இரண்டு நிமிட நேர மௌன பிரார்த்தனை மேற்கொண்ட பின்னர் கூட்டம் ஆரம்பமாகியது. (வ-9)

## நடமாடும் பாண் விற்பனை பேக்கரி உரிமையாளர் பாதிப்பு

தென்மராட்சி, ஜூன் 17
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நடமாடும் பேக்கரி உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யும் வாகனங்கள் அதிகரித்துள்ளதால் தமது தொழில் பாதிப்படைவதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**நடமாடும் சேவையில் ஈடுபடும் பேக்கரி உற்பத்திப் பொருள்கள் விற்பனை வாகனங்கள் நகரசபையில் அனுமதி பெறவேண்டும்**

இதனைக் கருத்தில்கொண்டு சபை எல்லைக்குள் நடமாடும் சேவையில் ஈடுபடும் பேக்கரி உற்பத்திப் பொருள்கள் விற்பனை வாகனங்கள் நகரசபையில் அனுமதி பெறவேண்டும். இல்லையேல் அந்த வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.
இவ்வாறு நேற்று சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்ஸன் தனியார் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார். இதனை உறுப்பினர் சி.சிறிதரன் வழிமொழிந்து உரையாற்றியதாகவும் பிரேரணையை சபை ஏற்றுக் கொண்டதாகவும் தலைவர் இ.தேவசகாய ம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## சாவகச்சேரி நீதிமன்றில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்குச் சீருடை

தென்மராட்சி, ஜூன் 17
சாவகச்சேரி நீதிமன்றில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்கள் நேற்றுத் தொடக்கம் பிரதி திங்கட்கிழமைகளில் சீருடையில் கடமைக்குச் சமூகமளிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்ற பெண் உத்தியோகத்தர்கள் நாவல் நிற சேலையும் சட்டையும் அணிந்து கடமைக்குச் சமூகமளிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
நீதிமன்றில் பணியாற்றும் ஆண் உத்தியோகத்தர்கள் கடந்த இரு வருடங்களாக தினமும் கறுப்பு நிற நீளக் காற் சட்டையும், வெள்ளை நிற சேர்ட்டும் அணிந்து கடமைக்கு வருவது குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் நேற்று நீதிமன்ற பெண் உத்தியோகத்தர்கள் சீருடை அணிந்து வருகை தந்திருந்தனர். (வ-9)

# வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உப தவிசாளரை நியமிக்குக

## *யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை*

வலி.தென்மேற்கு.ஜூன் 17
வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக உப தவிசாளர் பதவி நிரப்பப்படாமல் இருப்பதாக யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் ஆணையாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ள பிரதேச சபைச் செயலாளர் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.
16 உறுப்பினர்களைக் கொண்ட வலி.தென்மேற்கு பிரதேச சபையில் ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் எதிரணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.
வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் அ.ஜெபநேசன் தவிசாளராகவும், எஸ்.சிவகுமார் உப தவிசாளராகவும் தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டனர்.
ஆரம்ப காலத்திலிருந்து இரு வருடங்களுக்கு மேலாக தவிசாளராகக் கடமையாற்றி வந்த அ.ஜெபநேசன் சக உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டாலும் ஒற்றுமையின்மையாலும் தொடர்ந்து செயற்பட முடியாமல் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி தமது தவிசாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.
அவரது பதவி விலகலைத் தொடர்ந்து உப தவிசாளராக இருந்த எஸ்.சிவகுமாரை பதில் தவிசாளராகக் கடமையாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களால் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர் கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக பதில் தவிசாளராகச் செயற்பட்டு வந்தார்.
இந்த நிலையில் த.தே.கூட்டமைப்பின் அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் ஆணையாளர் பதில் தவிசாளராகக் கடமையாற்றி வரும் எஸ்.சிவகுமாரைத் தவிசாளராக நியமித்துள்ளார்.
அதை அடுத்து கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக நிரப்பப்படாமலிருக்கும் உப தவிசாளர் பதவி குறித்து தேர்தல் உதவி ஆணையாளருக்கு அறிவித்துள்ள செயலாளர் இந்த வெற்றிடத்தை விரைவாக நிரப்புமாறு கோரியுள்ளார். (வ-115)

## முகமாலையில் விபத்து; 7 பேர் காயம்

பளை, ஜூன் 17
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் பயணித்த ஹயெஸ் வாகனமொன்றும் 'புடி' ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரு வாகனங்களின் சாரதிகள் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு பளை கச்சார் வெளிச் சந்தியில் இடம் பெற்றது.
காயமடைந்தவர்கள் பளை மருத்துவமனை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஆறு பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
வாகனச் சாரதியான நீர்கொழும்பைச் சேர்ந்த யோகதாசன் (வயது-50), பயணிகளான உரும்பிராயைச் சேர்ந்த இராமநாதன் விக்னேஸ்வரி (வயது-70), வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசேந்திரம் (வயது-67), அவரது மனைவியான இராசேந்திரம் ஸ்ரீநந்தலாதேவி (வயது-65), குஞ்சுக்குளத்தைச் சேர்ந்த நிமல் செல்ரன் (வயது-49), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் முத்தலிப் (வயது-53) ஆகியோர் யாழ்.போதனா மருத்து வமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மற்றொரு சாரதியான தங்கராசா சுகிர்தன் (வயது-30) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9-18)



இதுவரை காலமும் தம்மால் பயன்படுத்தப்பட்ட தங்கூசி வலைகளைத் தாமே தீயிட்டு எரித்து ஏனைய மீனவர்களுக்கு முன்னுதாரமாகியுள்ளனர் மண்டைதீவு மீனவர்கள். தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும் மீனவரிடையே தற்போதும் அவ்வாறான வலைகள் பவனையில் உள்ளன. இந்தநிலையில் மண்டைதீவைச் சேர்ந்த மீனவர்கள், யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளை மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்துக்கு அழைத்து, அவர்களுக்கு முன்பாகவே தம்வசமிருந்த தங்கூசி வலைகளைத் தீயிட்டு எரித்தனர். எரிக்கப்பட்ட வலைகளின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாவாகும். (ற-20.14)

# கணக்கெடுத்து பல மாதங்கள் சொத்திழப்பு அறிக்கை இல்லை

## இன்னமும் மூன்று வாரங்களாகும் என்கிறது புள்ளி விவரவியல் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சொத்திழப்பு மற்றும் உயிரிழப்பு தொடர்பிலான கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்து 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அதன் விவரங்கள் இன்னமும் புள்ளி விவரவியல் திணைக்களத்தால் வெளியிடப்படவில்லை.

கடந்த 25ஆவது ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இது தொடர்பிலான அறிக்கை சமர்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், அந்த அமர்வில் அறிக்கை சமர்பிக்கப்படவில்லை என்பதுடன், இதுவரையில் குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவுமில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக, 1983ஆம் ஆண்டிலிருந்து இறுதிப் போர் நடைபெற்ற காலப் பகுதி வரையில் சொத்திழப்புக்கள் மற்றும் உயிரிழப்புக்கள், அங்கவீனம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

புள்ளி விவரவியல் திணைக்களமும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து இந்த நடவடிக்கையை, கடந்த டிசெம்பர் மாதம் முன்னெடுத்திருந்தனர். மிகக் குறுகிய காலத்தில் இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கடந்த ஐ.நா. அமர்வில் இது தொடர்பிலான அறிக்கை சமர்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஐ.நா. கூட்டத் தொடரில் எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் மேற்படி கணக்கெடுப்பு நடவடிக்கைகள் முடிவடைந்தது 6 மாதங்களாகியும் எந்தவொரு புள்ளி விவரங்களும் வெளியிடப்படவுமில்லை.

இது தொடர்பில் புள்ளி விவரவியல் திணைக்களத்தினரிடம் கேட்டபோது, இன்னும் மூன்று வாரங்களில் இது தொடர்பிலான அறிக்கை ஜனாதிப்தியிடம் கையளிக்கப்படும் என்று தெரிவித்தனர். (ற-5)

# 12 கிலோ தங்கத்துடன் மாட்டினர் இருவர்



இராமநாதபுரம், ஜூன் 17

இலங்கையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானைக்கு கடத்தி வரப்பட்ட 12 கிலோ தங்கத்தை இந்திய மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு கைப்பற்றியுள்ளது. தங்கம் கடத்திய சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரத்துக்குத் தங்கம் கடத்தி வரப்படுகின்றது என்று வருவாய் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அவர்கள் விசேட சோதனை நடவடிக்கையை முடுக்கிவிட்டிருந்தனர். அதன்போதே குறித்த இருவரும் தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தங்கம் இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்படுகின்றது. இதுகுறித்த விசாரணைகளை தொண்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# அளுத்கம வன்முறையில் 2 பேர் சாவாம்

கொழும்பு, ஜூன் 17

அளுத்கம பகுதியில் ஏற்பட்ட வன்முறைகளில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் பொலிஸ்மா அதிபர் என்.கே இளங்ககோன்.

அதேவேளை, இந்த வன்முறை சம்பவத்தின் போது பௌத்த பிக்கு ஒருவர் உயிரிழந்ததாக வெளியான தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் அது வெறும் வதந்தி எனவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# திட்டமிட்டு நடத்தப்பட்டது முஸ்லிம் மீதான தாக்குதல்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

அளுத்கம தர்கா நகரிலும் பேருவளையிலும் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டவை முற்கூட்டியே திட்டமிடப்பட்டு, வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகவே தோன்றுகின்றன. எனவே அந்தத் தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் இத்தகைய சம்பவங்கள் திரும்பவும் இடம்பெறாமல் இருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசைக் கோரியிருக்கின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கோரியிருக்கின்றார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

அளுத்கம தர்காநகரிலும் பேருவளையிலும் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் மிகுந்த கவலைக்குரியவை; மனதை சஞ்சலத்துக்கு உட்படுத்துபவை. முஸ்லிம் சமூகத்தின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், பள்ளிவாசல்கள் என்பன தாக்குதல்களுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்திருக்கின்றன. முஸ்லிம் சமூகத்தவர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களுள் மூவர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. பெரும்பான்மை இனத்தவர்களின் தீவிரப் போக்குடைய இரு இயக்கங்கள் கூட்டம் நடத்திவிட்டு வீதி வழியாக ஊர்வலம் போன சமயம் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் முன்னரே திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்டதாகத் தோன்றுகின்றது. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்த போதிலும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாயினும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் அவர்களால் தடுக்க முடியவில்லை.

இது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் விழிப்பில்லாத நிலையில் இருந்துள்ளனர் என்பதையே காட்டுகின்றது. கடந்த காலத்திலும் முழு நாட்டுக்கும் தீங்கை ஏற்படுத்தக் கூடிய இது போன்ற சம்பவங்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. தவறிழைத்தவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் இத்தகைய சம்பவங்கள் மீள இடம்பெறாமல் இருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காக வேறு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசைக் கோருகின்றது. - என்று உள்ளது. (ஐ)

# கருணாநிதியை விட்டு பறந்தோடுகிறார் குஷ்பு



சென்னை, ஜூன் 17

தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் நிலையில் இருந்து விலகுவதாக நடிகை குஷ்பு நேற்று திடீரென்று அறிவித்தார். அது தொடர்பில் கட்சியின் தலைவர் கருணாநிதிக்கும் அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

"என் அர்ப்பணிப்பும், உழைப்பும் ஒருவழிப் பாதையாகவே தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலை கழகத்தில் உள்ளபோது நான் தேர்ந்தெடுத்த பாதையும் பயணமும் தாங்க இயலாத மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தும், அதன் அடிப்படை உறுப்பினர் என்ற நிலையில் இருந்தும் விலகுவது என்ற முடிவை கனத்த இதயத்துடன் மேற்கொள்கிறேன்"- என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின்போது நடிகை குஷ்பு தி.மு.கவுக்காக தீவிர பரப்புரையில் ஈடுபட்டிருந்தார். ஆயினும் தி.மு.க. வரலாறு காணாத தோல்வியைச் சந்தித்திருந்தது. (ற)

# இன அழிப்புப் போர் நடத்தப்பட்டதை ஒப்புக்கொள்கிறார் விமல் வீரவன்ஸ

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

சத்திர சிகிச்சை செய்தால் இரத்தம் சிந்தும்தான் என்று இனவாத அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருப்பதன் மூலம், இங்கு நடைபெற்றது தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புப் போர்தான் என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, வளலாய் மக்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் முடிவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சொந்த உறுதியுடன் இருக்கின்ற வளலாய் மக்களின் காணிகளை பறித்திருக்கின்றார்கள். சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் மனங்களை மௌனமாக்கி அவர்களை ஒரு சிதைந்த நிலைக்குள் வைத்துக் கொண்டு தங்களுடைய ஆக்கிரமிப்பு வார்த்தைகளாலும், இனவாத கருத்துகளாலும் தமிழர்களை நிரந்தர மௌன நிலைக்குத் தள்ள முயன்று கொண்டிருக்கின்றார்கள்.

இனவாத அமைச்சர் விமல் வீரவன்ஸ், சத்திர சிகிச்சை செய்தால் இரத்தம் சிந்ததான் வேண்டும் என்று சொல்கின்றார். இதன் மூலம் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது இன அழிப்பு போர்தான் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார். இது சத்திர சிகிச்சையல்ல. ஒரு இனத்தை அழிப்பதற்காக சத்திரசிகிச்சையைப் பயன்படுத்திப் பார்த்திருக்கின்றார்கள்.

தமிழர்களின் தாயக நிலப் பரப்பான வடக்கு - கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்திப் பாருங்கள். தமிழர்கள் சிங்களவர்களோடு சேர்ந்து வாழத் தயாரில்லை என்பதைச் சொல்வார்கள்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் சி.பாஸ்கரா,

"வாழ்வாதார அரசியல் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வும், மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு உச்சகட்ட தீர்வை முன்வைத்தால் தான் சர்வதேச விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

அரசு கூறிக்கொண்டிருக்கின்றது இந்த சர்வதேச விசாரணை என்பது ஒரு கானல் நீர் என்று. ஒருபோதும் அது கானல் நீர் அல்ல. அது அரசு காணும் பகல் கனவு. நிச்சியமாக அரசு சர்வதேச விசாரணைகளுக்கு முகம் கொடுத்துதான் ஆகவேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-5)

# அரசு மீது மக்கள் ஆவேசம் - ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 17

வன்செயல்கள் ஏற்படும் வகையில் மேடை அமைத்து கொடுத்த அரசு மீது மக்கள் மிக ஆவேசத்துடன் இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கிம். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹாரிஸ், அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கான முடிவை எடுப்பதற்கான அதிகாரங்களை கட்சியின் உயர்பீடம் கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கிமுக்கு வழங்கியுள்ளது என்று கூறினார். (ற)

# நாம் இணைந்து செயற்படுவோம்

## கியூபா ஜனாதிபதி மஹிந்தவிடம் வேண்டுகோள்

கொழும்பு.ஜூன் 17
பொலிவியாவில் நடைபெற்ற ஜி-77 உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த கியூபா நாட்டு ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ. தன்னை விரும்பும் தலைவர்களுடன் இணைந்து செயற்பட தான் விரும்புவதாகத் தெரிவித்தார்.

எமக்கு எம்மை விரும்பும் தலைவர்களுடன் இணைந்து செயற்பட விருப்பம். நீங்கள் எங்களது நண்பர்கள் என்று கியூபா ஜனாதிபதி. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

சர்வதேச கலந்துரையாடல்களின்

> சர்வதேச கலந்துரையாடல்களின் போது கியூபா எப்போதும் இலங்கைக்கு துணையாக இருக்கும்.

போது கியூபா எப்போதும் இலங்கைக்கு துணையாக இருக்கும் என்று கியூபா நாட்டு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ச)



கியூபா ஜனாதிபதி மஹிந்தவுடன் உரையாடியபோது...

# சூடானின் நிலைமை நாட்டுக்கு ஏற்படலாம்

## ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைக்காவிட்டால்

கொழும்பு.ஜூன் 17
இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்துவதற்கு ஒத்துழைக்காவிட்டால். சூடானில் ஏற்பட்ட நிலைமையே இலங்கையிலும் ஏற்பட அரசு வழியேற்படுத்தி வைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.



லக்ஸ்மன் கிரியெல்ல

இலங்கை அரசு உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவதாக அனைத்துலகத்துக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததால் இலங்கை தொடர்பில் அனைத்துலக விசாரணை நடத்தப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்நாட்டு விசாரணையை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை மூன்றாண்டு காலம் அவகாசம் கொடுத்திருந்தது. ஆனால் அந்த உள்நாட்டு விசாரணை நடத்தப்படவில்லை.

அதில் அடிப்படைத் தவறு இழைத்தது இலங்கை அரசு தான்.

கடந்த ஆண்டுகளில் இலங்கை தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபை பல தீர்மானங்களைக் கொண்டுவந்தது. அந்தக் காலத்தில் நாடாளுமன்றத்திடம் எதுவும் கேட்கப்படவில்லை.

அப்போதெல்லாம் நாடாளுமன்றத்துக்கு வெளியில்தான் முடிவுகளை அரசு எடுத்திருந்தது.

சூடான் உள்நாட்டுப் போரின் போது. விசாரணை நடத்துமாறு ஐ.நா. சூடானிடம் கேட்டுக் கொண்டது.

ஆனால் சூடான் அதனைச் செய்யவில்லை. அதனால் இந்த இரண்டு இனங்களும் ஒன்றாக வாழ முடியாது என்று ஐ.நாவில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இறுதியில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தி நாட்டைப் பிரித்தார்கள்-என்றார். (ச)

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை

## சஜித் பிரேமதாச எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு.ஜூன் 17
இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வீரகெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் விசாரணைகள் நடத்தப்பட்டு. வருகின்றன. இந்த விசாரணை முடிவில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகளினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் சந்தை வாய்ப்புக்கள் முடக்கப்பட்டால் நெருக்கடி நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை காணப்படுகிறது.

போர் நிறைவின் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஆளும்கட்சிமுனைப்புக் காட்டத் தவறியுள்ளது.



சஜித் பிரேமதாச

போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக தீர்மாணம் நிறைவேற்றப்பட்டமைக்கு அரசே பொறுப்பு.

போர் நிறைவின் பின்னர் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று அரசு சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி அளித்த போதிலும். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை - என்றார். (ச)

# பொலிஸார் அச்சத்தில்

## அஜித் ரோஹண தகவல்



கொழும்பு.ஜூன் 17
பொலிஸார் பீதியடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இரவு நேரங்களில் வீதிச் சோதனைச் சாவடிகளில் கடமையாற்றி வரும் பொலிஸார் பீதியடைந்துள்ளனர்.

ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் மற்றும் குற்றவாளிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று பொலிஸார் அச்சமடைந்துள்ளனர்.

பொலிஸாரின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் அவர்களுக்கு கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்துவது எந்தெந்த நேரங்களில் தற்பாதுகாப்பு அடிப்படையில் ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது-என்றார். (ச)

# ஓய்வுபெற்ற அரசியல்வாதிகளை யாரும் கண்டுகொள்வதில்லை

## குமார வெல்கம கூறுகிறார்

கொழும்பு.ஜூன் 17
அரசியல்வாதி ஒருவர் ஓய்வுபெற்று விட்டால், அவரை எவரும் கண்டு கொள்வதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

மத்துகமவில் வாராந்த சந்தை கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். ஓய்வுபெறும் முன்னர் தமது கிராமம் மற்றும் நாட்டுக்குத் தேவையான வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

தொடர்ந்தும் எம்மால் அரசியலில் நீடித்து இருக்க



குமார வெல்கம

முடியாது. புதிய தலைமுறைகளுக்கு ஏற்ற வகையிலும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஈடாகவும் புதியவைகளை நாம் செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# பொலிஸாரிடம் இராட்சத பல்லி

சுமார் 4 அங்குல நீளமான இராட்சத முதலைப் பல்லியொன்று புத்தளம் பொலிஸார் வீடொன்றில் வைத்து கைப்பற்றியுள்ளனர். இந்த இராட்சதப் பல்லிக்கு வெளிநாடுகளில் அதிக பெறுமதி இருக்கிறது.

இந்தப் பல்லி சுமார் 3 ல்ட்சம் ரூபா முதல் 4 லட்சம்ரூபாவரை விலை போகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இராட்சத பல்லியுடன் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (ச)

# விசாரணைகளுக்கு ஆதரவளிப்பதில்லை

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 17
ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளையால் இலங்கை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அனுமதியளிக்க முடியாது என்று அவர் கூறினார்.

விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசு ஆதரவளிக்கக்கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு புறச்சக்திகளின் தலையீடு அவசியமற்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அரசின் ஆசீர்வாதங்களுடனேயே பொதுபல சேனாவின் செயற்பாடு

## மேல் மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு. ஜூன் 17
அரசின் ஆசீர்வாதத்துடனேயே பொதுபல சேனாவின் செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றன. அரசுக்கு நாட்டில் வன்முறையொன்றை உருவாக்கி அரசியல் நடத்தும் தேவை இருக்கின்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசின் ஆசீர்வாதத்துடனேயே பொதுபலசேனாவின் செயற்பாடுகள் அனைத்தும் அரங்கேற்றப்படுகின்றன. அரசுக்கு நாட்டில் வன்முறையொன்றை உருவாக்கி அரசியல் நடத்தும்

> பல்கலைக்கழக மாணவர்களும் தொழிற்சங்கங்களும் நடத்தும் போராட்டங்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் அரசு தடை செய்கின்றது.

தேவை உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களும் தொழிற்சங்கங்களும் நடத்தும் போராட்டங்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் அரசு தடை செய்கின்றது. எனினும் இன முறுகலை ஏற்படுத்தும் பொதுபலசேனாவின் செயற்பாடுகளை அரசு கட்டுப்படுத்தாமல் இருக்கின்றது-என்றார். (ச-10)

# அரசுக்கு அழுத்தங்களை மு.கா. விடுக்க வேண்டும்

## ஐ.நா. விசாரணைக் குழுவை அனுமதிக்க

மட்டக்களப்பு.ஜூன் 17

முஸ்லிம் அரசியல்வாதிகள். அமைச்சர்கள் அரசுக்கு துதி பாடுவதைவிடுத்து இலங் கைக்கு விசாரணைக்கு வர வுள்ள ஐ.நா.விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்குமாறு அரசுக்கு அழுத்தங்களை விடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அளுத்கமவில் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. முஸ்லிம் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் இந்த வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் பொது பல சேனா மட்டும் செயற்பட்டிருக்கவில்லை. அது அரசின் முழு ஆசியுடனேயே நடத்தப்பட்டுள்ளது.'

இந்தச் சம்பவம் சிறுபான்மை மக்கள் நாட்டில் சுதந்திரமாக வாழமுடியாது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

> ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்குமாறு அரசுக்கு அழுத்தங்களை வழங்க வேண்டும்.

அரசுக்குத் துதிபாடும் முஸ்லிம் அரசியல் வாதிகள் தங்கள் நிலையில் இருந்து மாறி நாட் டில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசு மேற்கொண்டு வரும் உரிமை மீறல் களை விசாரணை செய்ய இலங் கைக்கு வரத் திட்டமிட்டுள்ள ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்குமாறு அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

எங்களுக்கான ஒரு பலம் அமையும்போதே எங்களை இன்னொருவர் அச்சுறுத்தும் நிலையை நாங்கள் இல்லாமல் செய்யமுடியும். கடந்த காலத்தில் நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவ்வாறு நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அரசுக்கு வக்காளத்து வாங்கும் முஸ்லிம் அரசியல் வாதிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்- என்றார். (ச)



போராட்டத்தில் சட்டத்தரணிகள்

# சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில்

திருகோணமலை.ஜூன் 17

கொழும்பின் புறநகர் பகுதியான அளுத்கமையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை திருகோணமலை நீதிமன்றம் முன்பாக இடம்பெற்றது.

இது போன்ற சம்பவங்கள் வடக்கிலோ, கிழக்கிலோ மற்றும் சிறுபான்மை இன மக்கள் வாழ்கின்ற மற்றைய இடங்களிலும் இனிமேலாவது ஏற்படாத வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# ரூ.20 மில்லியன் செலவில் வாவிக்கரை பூங்கா திறப்பு

மட்டக்களப்பு.ஜூன் 17

நகர அபிவிருத்தி அமைச்சால் மட்டக்களப்பு நகர அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வாவிக் கரைப் பூங்கா நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ், 20 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பூங்கா புனரமைக்கப்பட்டது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ். எம். சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர அபிவிருத்தியில் இது ஒரு மைல் கல் ஆகும் என்றும் அவர் கூறினார். (ச)

# தேன் எடுக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு.ஜூன் 17

மட்டக்களப்பு. கோரவெளி காட் டுப் பகுதிக்குத் தேன் எடுப்பதற்குச் சென்ற சித்தாண்டி, மாவடி வேம்பு கிராமத்தைச் சேர்ந்த 54 வயது மதிக்கத்தக்க நபரொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கம் போல தேன் எடுக் கும் தொழிலுக்கு சனிக்கிழமை காலை சென்ற அவர், மறு நாளாகியும் வீடு வந்து சேராததால் அவரை உறவினர்கள் தேடியுள்ளனர்.

அதன்போது குறித்த காட்டுப் பகுதியில் அவரது சடலத்தைக் கண்ட மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்ட இளைஞர் கள், அருகிலுள்ள இராணுவத்தினருக்குத் தகவல் வழங் கிய நிலையில், அவர்கள் வாழைச்சேனை பொலிஸா ருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட இந்த நபர் மாரடைப்பால் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

# புதையல் தோண்ட முயற்சித்த 4 பேர் கைது

மட்டக்களப்பு.ஜூன் 17

மட்டக்களப்பு.கரடியனாறு பொலிஸ் பிரிவில் உள்ள வேப்பவெட்டுவான் காடுகளில் புதையல் தோண்ட முயற்சித்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

10 பேர் கொண்ட ஒரு குழுவினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட ஆயத்தமானபோது படையினர் அவர்களைக் கைதுசெய்ய முயற்சித்துள்ளனர். அவ்வேளை அவர்களில் ஆறு பேர் தப்பியோடிவிட்டதாகவும் நான்கு பேரைக் கைதுசெய்த இராணுவத்தினர் அவர்களை கரடியனாறு பொலி ஸாரிடம் ஒப்படைத் துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனை
முதல் தரமான BAIRAHA இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு. ஒரு குஞ்சின் விலை ரூபா 90/= மற்றும் PRIMA இறைச்சிக் குஞ்சின் விலை ரூபா 90/= பிரதி சனிக்கிழமை தோறும் கோண்டாவில் மற்றும் நெல்லியடியில் ஓடர்கள் பெற்றுக்கொள்ளப்படும்.
(45576) (12.5.6)
தொடர்பு: 077 995 9382

கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல். கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

விசேட தள்ளுபடியுடனான விற்பனை
அனைத்து வகையான புத்தகங்களுக்கும் இன்றிலிருந்து அதிரடி விலைக்கழிவாக 20% கழிவு வழங்கப்படுகிறது.
இச்சலுகை மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே. மற்றும் எம்மிடம்
*ஸ்ரேசனரிப் பொருள்கள்
*விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள்
*வைற்போட், மக்னற்போட், கிறீன்போட், பிலிப்சாட் போட் வகைகள்
*OVER HEAD PROJECTOR, O.H.P Screen வகைகள்
*மகசீன் கோட்டர், பொக்ஸ்பைல் மற்றும் பிளாஸ்ரிக் பைல் வகைகள்
*இசைக்கருவிகள்
உட்பட அனைத்து கல்வித்துறைசார் உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (சி/14792) (4.3.6)
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 5542/021 567 1527


வண்ணை திருவருள் மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாள்
வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா
18.06.2014
நாளை (18.06.2014) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அகில இலங்கை புகழ் பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன்
கொடியேற்றப் பெருந்திருவிழா
மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலை அலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்தில் கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற வாரீர் வாரீர்.
கொடியேற்ற பெருந்திருவிழா உபயகாரர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திருமதி நவமணி சந்திரசேகரம் (SLPS-I) அவர்கள்
எமது பாடசாலையில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி பாடசாலையின்



கல்வி அபிவிருத்தி பௌதிக வள அபிவிருத்தி என்பவற்றில் பற்பல உயர்வுகளை அடைய உழைத்தவர் 16.06.2014 தொடக்கம் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றமையையிட்டு எமது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றோம்.
பாடசாலைச்சமூகம்,
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்
வல்வெட்டித்துறை.

## வைத்திய அதிகாரிகள் கிழக்கில் இடமாற்றம்

மட்டக்களப்பு.ஜூன் 17
மட்டக்களப்பில் சுகாதார வைத்திய அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய இடங்களில் அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு வைத்திய அதிகாரியாக பணியாற்றிய கலையரசி துரைராஜசிங்கம் நேற்று திங்கட்கிழமை ஏறாவூர சுகாதார வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார்.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய எம்.எச்.எம். தாரிக் நேற்று திங்கட்கிழமை ஏறாவூர் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய எஸ்.ஏ. சி.எம்.பளீல் செங்கலடி பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாகவும் கடமையேற்றுள்ளனர். (ச)



மருதானை அசோக வித்தியாலயத்தின் நிர்வாகத்துக்கு எதிராக மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## நுரைச்சோலை அறிக்கை ரணிலிடம் ஒப்படைப்பு

கொழும்பு.ஜூன் 17
நுரைச்சோலைக்கான பயணத்தை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தயாரித்துள்ள அறிக்கை அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் காணப்படும் ஊழல், தரம் என்ற அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

> நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் காணப்படும் ஊழல், தரம் என்ற அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டது

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்குச் சென்றிருந்தபோது பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றச்சாட்டுக்களை விசாரிக்க உள்ளக விசாரணை தேவை

### ஐ.தே.க. திருத்தம் இன்று கையளிப்பு

கொழும்பு.ஜூன் 17
ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையை எதிர்ப்பதாக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு, ஐ.தே.க. திருத்தமொன்றைக் கொண்டுவரவுள்ளது. இந்தத் திருத்தத்தில் மனித உரிமை குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஓர் உள்ளக விசாரணை வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தம் நாடாளுமன்ற செயலர் தம்மிக திஸா நாயக்கவிடம் இன்று செவ்வாய்கிழமை கையளிக்கப்படும் என்று எதிர்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அரசு அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை நீக்கம் செய்து, 17 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்ற திருத்தங்களையும் கட்சி சேர்த்துள்ளது என்று அவர் கூறினார்.

17 ஆவது திருத்தத்தையும் நாகரிக விழுமியங்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சியையும் மீளக் கொண்டுவருவதாக அரசு உறுதியளித்தால் ஜனநாயக ஆளுகைக்கான நிறுவனங்களை மீளக் கொண்டுவருவதற்காக அரசுக்கு ஆதரவளிக்க நாம் தயாராக இருப்பதாக ஐ.தே.க. வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கியப்பட்ட, ஜனநாயக, சுதந்திரமான ஓர் இலங்கையை ஐ.தே.க. வேண்டுகின்றது. இலங்கை சர்வதேச அரங்கில் ஒதுக்கப்பட்ட, பின் தள்ளப்பட்ட ஒரு நாடு என்றாவதை நாம் விரும்பவில்லை. ஒரு காலத்தில் நாம் நாகரிகமடைந்த நாடுகளுள் ஒன்றாக இருந்தோம் என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- ஒரு சில வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்குவதல்ல பிரதான பிரச்சினை. அவர்கள் இலங்கைக்குள் வந்தாலென்ன, வராவிட்டாலென்ன அது விசாரணை நடைபெறுமா? இல்லையா என்பதில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

இந்த விசாரணை நடந்தே தீரும். சர்வதேச விசாரணை ஒன்றைத் தடுப்பது அவசியமாகும். இதையே நாம் செய்ய வேண்டும். இதைத் தான் ஐ.தே.க. பல காலமாக வலியுறுத்தி வந்தது.

ஆளும் குடும்பக் கூட்டினால் மேற்கொள்ளப்பட்ட அலட்சியப் போக்கும், செயலின்மை மற்றும் இமாலய தவறுகள் காரணமாகவே நாம் இப்போது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளோம் என்பதில் விவாதத்துக்கு இடமில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆசிரிய அபிவிருத்தி நிலையம் நாட்டில் அமைக்க இணக்கம்

### ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு.ஜூன் 17
இலங்கையின் வேண்டுகோளை அடுத்து, இலங்கையும் யுனெஸ்கோவும் இணைந்து மீப்பே பிரதேசத்தில், தென் ஆசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையமொன்றை அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவியின் கீழ் செயற்படும் நிலையமாக இது செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையத்தின் முழுமையான நேக்கம் ஆசிரியர்களின் அறிவு மற்றும் பயிற்சியை தரமுயர்த்துவதாகும்.

கொள்கை அபிவிருத்தி, தரமான ஆசிரியர் அலையை கட்டியெழுப்புவதில் மாற்றத்தை கொண்டுவருதல் மற்றும் ஆராய்ச்சிகளை விரிவாக்கல் என்பவற்றுக்கு ஆதரவு வழங்குவதற்கான தலைமைத்துவம் அளித்தல் என்பவை மூலம் தென் ஆசிய பிராந்தியத்தின் ஆசிரியர் அபிவிருத்தி செயன்முறையை மாற்றியமைத்தலில் இந்த நிலையம் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கும்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் இரினா பொக்கோவா, கல்வி அமைச்சின் செயலர் அனுர திசாநாயக்க ஆகியோர் இந்த நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

கல்வியில், யுனெஸ்கோவின் பலத்த ஈடுபாட்டுக்கு இந்த மையம் சாட்சியாகும். நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான அவசர தேவை காணப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிலையம் அமைவது வரப்பிரசாதமாகும். தற்போது 250 மில்லியன் மக்கள் அடிப்படை விடயங்களைக்கூடக் கற்க வசதியின்றி உள்ளனர் என்று பொக்கோவா கூறினார். (ச)



எரிக்கப்பட்ட மருந்தகம்

## அளுத்கமையின் எதிரொலி மருந்தகத்துக்குத் தீ வைப்பு

கொழும்பு.ஜூன் 17
தெஹிவளை சந்திக்கு அருகாமையில் ஸ்டேஷன் வீதியில் அமைந்துள்ள ஹார்கோட்ஸ் எனப்படும் வியாபார நிலையம் மீது தீவைப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வியாபார நிலையத்தின் உரிமையாளர் விரைந்து செயற்பட்டமையால், தீயணைப்பு படையினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

முஸ்லிம் நபரொருவருக்குச் சொந்தமான பிரபல மருந்தகமே இவ்வாறு தீயிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அளுத்கமையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தையடுத்து இந்த தாக்குதலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ரவூப் ஹக்கீம் இராஜினாமா?



ரவூப் ஹ

கொழும்பு.ஜூன்17
பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிவியாவில் நடைபெறும் ஜீ 77 நாடுகளில் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமைச்சர் ஹக்கீம் இது சம்பந்தமாக பேசியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ள அமைச்சர், தொடர்ந்தும் அரசில் அமைச்சராக பதவி வகிக்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த மூன்று தினங்களில் ஹக்கீம் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## போலி நாணயத்தாள் குறித்து அவதானம் செலுத்துக

போலி நாணயத்தாள்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

அளுத்கம, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

5000 ரூபா போலி நாணயத்தாள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அளுத்கம எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 5000 ரூபா போலி நாணயத்தாளொன்றைக் கொடுத்து 500 ரூபாவுக்கு எரிபொருள் நிரப்ப மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் முயற்சித்துள்ளார்.

போலி நாணயத்தாள் பற்றி எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர் குறிப்பிட்டதை அடுத்து குறித்த நபர், தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். போலி நாணயத்தாள்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஜூன் 17

குடும்பப் பெண்ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மறவன்புலோவில் இடம்பெற்றது.

வீடு கட்டுவதற்காக பெற்ற கடனை குறித்த காலப் பகுதியில் திருப்பிச் செலுத்த இயலாததால் மனமுடைந்த குடும்பப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரை மாய்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டே இவ்வாறு உயிரை மாய்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மறவன்புலோவைச் சேர்ந்த கனகலிங்கம் நிரஞ்சனாதேவி (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் உறவினர்களால் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

# முறையற்ற இடமாற்றங்களை இனிமேலாவது நிறுத்துக

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

முறையற்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி கடந்த காலங்களில் ஏராளமான அதிபர்களின் நியமனங்களும், இடமாற்றங்களும், ஆசிரிய இடமாற்றங்களும் நடைபெற்று முடிவடைந்துள்ளன. எதிர்காலத்தில் அவ் வாறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டாம். அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

பல இடமாற்றங்களும், நியமனங்களும் இன்னமும் நீதிமன்ற விசாரணைகளில் இருப்பதை பலரும் அறிவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் மகளிர் கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பான பிணக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்று முறையான தீர்ப்பு வழங்கப்படும் என்ற நம்பிக்கையைப் பலருக்கும் கொடுத்திருக்கின்றது. இது போன்ற வழிமுறைகளை அதிபர்கள், ஆசிரியர்கள் நாடாதிருக்க தேசிய கல்விக் கொள்கைகள், தேசிய இடமாற்றக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு பல தடவைகள் நாம் அறிவுறுத்தியுள்ளோம்.

வட மாகாணத்துக்கென புதிய மாகாண சபை உருவாகிய பின்னர் அதிபர்களின் இடமாற்றம் தொடர்பான சுற்றறிக்கை தயாரிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு அது இடைநடுவில் கைவிடப்பட்டமையும், வட மாகாணத்துக்கென கல்விக்கொள்கைகள் தயாரிப்பதற்காக நடைபெற்ற கல்வி மாநாட்டில் மத்திய கல்வி அமைச்சில் இருந்து வருகைதந்த அதிகாரிகள் பல தடைகளை ஏற்படுத்திச் சென்றிருப்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

குறிப்பாக ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இன்னமும் சீர்செய்யப்படாத நிலையில் ஆசிரிய இடமாற்ற சபைகளால் எடுக்கப்படும் ஏகோபித்த தீர்மானங்களைப் புறந்தள்ளி தன்னிச்சையாக எடுக்கப்படும் எந்தவொரு முடிவுகளையும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதிலும் தமிழர் ஆசிரியர்கள் செறிவாகவுள்ள பிரதேசங்களில் அநாவசிமான தலையீடுகளை ஏற்படுத்தி பிள்ளைகளின் கல்வியில் திட்டமிட்ட பின்னடைவை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொள்வதை பொறுத்துக்கொள்ள முடியாது. தமது குடும்ப உறுப்பினர்களுக்காகவும், தமக்காகவும் ஒருசிலர் அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்படுவதை பகிரங்கமாகப் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தவுள்ளோம்.

கல்வித்துறைக்கென இருக்கின்ற கொள்கைகளைச் சரியாகப் பின்பற்றி எமது பிரதேசங்களின் கல்வியை மேம்பாடடையச் செய்வது தான் அக்கறையுள்ள கல்வியாளர்களின் கடமையாகும். இந்த விடயங்களில் தன்னிச்சையான முடிவுகளை எவரும் எடுக்கமுடியாது. உரியவர்களுக்கு உரியமுறையில் உரியகால அவகாசங்களில் அறிவித்தல் கொடுத்து சரியான முறையில் திட்டமிட்டு இடமாற்றங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபிரச்சினைகளை இலங்கை ஆசிரியர் சங்கமும் ஏற்கனவே கண்டித்துள்ளதோடு உரிய முறையில் இடமாற்றங்களை முன்னெடுக்குமாறும் வற்புறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-4)

## கடமைகளைப் பொறுப்பேற்றார் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக திருமதி நவமணி சந்திரசேகரன் நேற்று திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். காலை 7.45 மணிக்கு பாடசாலை சம்பவத்திரட்டில் தனது வருகையைப் பதிவுசெய்து அவர் கடமையேற்றுக்கொண்டார்.

நியமனக் கடிதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாக அதிகாரியால் திருமதி சந்திரசேகரனின் வீட்டில் கையளிக்கப்பட்டது. நியமனக் கடிதத்தில் யாழ். மேல் நீதிமன்றத்தின் தடை உத்தரவு, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மே 5 ஆம் திகதிய தீர்ப்பு, ஜூன் 13 ஆம் திகதிய தீர்ப்பு ஆகியவற்றை குறிப்பிட்டு திருமதி சந்திரசேகரன் ஜூலை 26 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெறும் வரை கல்லூரி அதிபராக கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனின் கையொப்பத்தோடு கூடிய நியமனக் கடிதம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாக அதிகாரியால் கையளிக்கப்பட்டது. (வ-11-108)



வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் குழு நுவரெலியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் தொடர்பாக நேரில் கண்டறிய அண்மையில் நுவரெலியாவுக்கு பயணம் செய்தனர். அம்பகவே பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் சமூக பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் பற்றி பிரதேச செயலர் உரை யாற்றுவதையும் கலந்து கொண்ட உத்தியோகத்தர் குழுவினரையும் படத்தில் காணலாம். (வ-9)

## அறநெறி விழாவும் குருபூசையும்

வவுனியா, ஜூன் 17

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத்தினரும் அறநெறிப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் அறநெறி விழாவும் திருஞானசம்பந்த சுவாமிகளது குருபூசையும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா சிந்தாமணி கலாசார மண்டபத்தில் சிந்தாமணி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாளர் ஆ.கோடீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், வவுனியா மாவட்டச் செயலகத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரபா செல்வரூபன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்வார்கள். (க-421)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன் 17

வடமராட்சி கீழ்கரவை கிழவிதோட்டம் விக்கின விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று தொடக்கம் தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை தேர் உற்சவமும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. உற்சவ கிரியைகளை சிவப்பிரம்மஸ்ரீ பிரபாகரக் குருக்கள் நடத்தி வைப்பார். (க-421)

◆◆◆

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

வேட்டைத் திருவிழா 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும், சப்பரத் திருவிழா மறுநாள் புதன் கிழமையும் இடம்பெறவுள்ளன. தேர்த்திருவிழா 26 ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறும். (க)

◆◆◆

யாழ்.வண்ணை அங்குச பாச பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) ஆலய அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 7 மணிக்கு நடைபெறும் வசந்தமண்டபப்பூசையை அடுத்து சுவாமி உள் வீதியுலா வருதல் நிகழும். விசேட நிகழ்வாக தினமும் மாலை 6.30 மணிக்கு இரா.செல்வவடிவேல் மற்றும் அவரது மாணவர்களதும் 'சொற்பொழிவு' இடம்பெறும்.

## கண்காட்சி

கரணவாய், ஜூன் 17

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் எஸ். கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (வ-108)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



அமரர்
புஸ்பராணி பாலசுந்தரம்

அம்மா பெற்றதே எம்மை
அம்மாவைப் பெற்றதே மேன்மை
அம்மா தந்ததே எல்லாம்
அம்மாவே எமக்கு எல்லாம்

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மலர்மாலைஅணிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்தோருக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 08.02.1943 — மறைவு 18.05.2014

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பச்சவிதி, அளவெட்டி. குடும்பத்தினர்.

நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
இராசரத்தினம் ஜெயரத்தினசீலன்
(செயம்)
(மருதங்கேணி வடக்கு)

கடந்த 05.05.2014 சிவபதமடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாளை (18.06.2014) புதன்கிழமை மதியம் எமது இல்லத்தில் நடை பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தெணி ஒழுங்கை,
கடற்கரை வீதி, பருத்தித்துறை.
குடும்பத்தினர்

(45573)(7 6.3)

## மது, மாதுவுடன் பூசகர் ஆலயத்துக்குள் சல்லாபம்

வலி. வடக்கு. ஜூன் 17

மது, மாதுவுடன் ஆலயத்தில் சல்லாபம் புரிந்த இந்து பூசகர் ஒருவர் பொது மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

அராலி வடக்கு மயிலியதனை கந்தசுவாமி ஆலயத்தினுள் ஞாயிறு காலையில் குறிப்பிட்ட ஆலயத்தின் பூசகர் பெண் ஒருவருடன் செல்வதை பொது மக்கள் அவதானித்துள்ளனர்.

அன்றைய தினம் பிற்பகலிலும் பூசகர் ஆலய சுற்றாடலில் காணப்பட்ட நிலையில் சந்தேகம் கொண்ட இளைஞர்கள் ஆலய பூசகரின் நடத்தையில் சந்தேகம் கொண்டு ஆல யத்தினுள் சென்றுள்ளார்கள்.

அங்கு குறித்த பூசகர் குறித்த பெண்ணுடன் நெருக்கமான நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து பெண்ணையும் பூசகரையும் அது குறித்து விசாரித்தனர். குறிப்பிட்ட பெண் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும், அவர் சிவில் பாதுகாப்பு படைப்பிரிவில் கடமையாற்றுபவர் என்றும் பூசகர் தெரி வித்துள்ளார்.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டபோது குறித்த பெண்ணை விடுவிக்குமாறு இராணுவத்தினர் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து குறிப்பிட்ட பெண்ணை விடுவித்ததுடன் பூசகருக்கு இளைஞர்கள் உரிய பாடமும் புகட்டியுள்ளார்கள்.

அத்துடன் கோயில் உட்புறத்தில் இருந்து சாராயப் போத் தல்கள் மற்றும் பியர் ரின்களையும் கண்டெடுத்த இளைஞர்கள் அவற்றை பொது மக்களது பார்வைக்கும் சமர்ப்பித்தனர். (வ-86)

## யாழில் அழிவடையும் கேணிகள்; தண்ணீருக்கு அலையும் கால்நடைகள்

வலி. வடக்கு. ஜூன் 17

யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வறட்சியைத் தொடர்ந்து தமது தாகத்தைத் தணிப்பதற்காக கால் நடைகள் தண்ணீர்தேடி அலைந்து திரியும் நிலை கடந்த பல ஆண்டுகளாகக் காணப்படுகின்றது. எமது முன்னோர்கள் இத்தகைய நிலைமையைத் தவிர்க்கும் வகையில் யாழ் .மாவட்டத்தில் நிர்மாணித்த கேணிகளில் பல இன்று அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றன.

இந்த வகையில் வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலகம், பிரதேச சபைகளின் எல்லைகளுக்கு உட்பட்ட அராலி கிழக்கு அம்மன் கோயிலடிக்கு அண்மையாக இருந்து வந்த கேணி பழுதடைந்து அழியும் நிலையில் காணப்படுகின்றது. குறித்த கேணி அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து வந்ததுடன், அயல் பகுதியில் காணப்பட்ட நல்ல தண்ணீர் கிணற்றுக்கு நல்ல நீர் கிடைப்பதற்கும் காரணமாக உள்ளது.



தூர்ந்த நிலையில் கேணி

தற்போது முற்றுமுழுதாக அழிவடையும் நிலைமையில் அந்தக் கேணி காணப்படுவதால் அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகள் குடி தண்ணீர் அருந்த முடியாத நிலை காணப்படுவதுடன் கிணறுகளும்கூட உவர்த் தன்மைக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த கேணியை பிரதேச சபையோ அன்றி பிரதேச செயலகமோ திருத்தி அமைக்க முன்வந்தால், மழை காலத்தில் அதில் கணிசமான அளவு நீர் தேங்குவதுடன் கால்நடைகளும் பொது மக்களும்கூட பயனடைய முடியும் என்று அந்தப் பகுதியில் உள்ள முதியவர்கள் மற்றும் மக்கள் கூறுகின்றனர். (வ- 86)

## கைதடியில் வாள் வீச்சு குடும்பஸ்தர்கள் காயம்

தென்மராட்சி, ஜூன் 17

தலைக் கவசமணிந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் கைதடிச் சந்தியில் நின்றவர்கள் மீது துரத்தித் துரத்தி வாள் வீச்சு நடத்திவிட்டுத் தப்பியோடினர். சம்பவத்தில் இரு குடும்பஸ்தர்கள் காயமடைந்தனர்.

இதையடுத்து கைதடிச் சந்தி சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கைதடிச் சந்தியில் இடம்பெற்றது.

வாள்வெட்டுக்கு இலக்கான கைதடியைச் சேர்ந்த கோகுலநாதன் கோமளன் (வயது-34), சுந்தரலிங்கம் சுகிர்தராஜ் (வயது-34) ஆகியோர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9-288)

## வலி.தென்மேற்கில் வர்த்தக சங்கம்

### விரைவில் அமைக்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 17

வர்த்தகர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து, வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புக் கருதியும், அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் நீடித்து செயற்படக்கூடிய பலம் வாய்ந்த வர்த்தக சங்கமொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவகுமார் மேற்கொண்டுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பல தரப்பட்ட வர்த்தக நிலையங்கள் இயங்குகின்ற போதிலும், அவற்றுக்கென வர்த்தக சங்கமொன்று இல்லாததால் வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருப்பதுடன் அவற்றில் கடமையாற்றும் ஊழியர்களின் கடமை நேரங்களும் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாடின்றிக் கடைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

ஏற்கனவே மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய 5 கிராமங்களை உள்ளடக்கி மானிப்பாய் கோவில்பற்று என்ற பெயரில் வர்த்தக சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. சங்கத்தில் அங்கம் வகிக்கும் சில உறுப்பினர்கள் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படாமல் செயற்பட்டதால் சங்கம் தொடர்ந்து இயங்க முடியாமல் செயலிழந்துள்ளது.

மேற்படி சங்கத்தின் நிலைப்பாடு குறித்து விரக்தியடைந்துள்ள பெரும்பாலான வர்த்தகர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள திருட்டுக்கள் போன்ற குற்றச் சம்பவங்களை அடுத்து வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புக் கருதி வர்த்தக சங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளரைக் கோரியுள்ளனர்.

அவர்களின் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தவிசாளர், பொலிஸாரின் ஆலோசனையுடனும், வர்த்தகர்களின் ஆதரவுடனும் நிலைத்து நின்று செயற்படக் கூடிய பலம் வாய்ந்த சங்கமொன்றை அமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (வ-115)

## பாஷையூரில் இன்று நாட்டுக் கூத்து

கொழும்புத்துறை, ஜூன் 17

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவையொட்டி தென்மோடி நாட்டுக் கூத்து நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பாஷையூர் கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

அண்ணாவியார் யூல்ஸ் கொலின்ஸின் நெறியாள்கையில் உருவான "வீரபாண்டிய கட்ட பொம்மன்" நாட்டுக்கூத்து நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு இடம்பெறும்.

குறித்த நாடகம் யாழ்.மாவட்ட மாகாண மட்டங்களில் பல பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-135)

## உண்டியல் திருடியவருக்கு மறியல்

பளை, ஜூன் 17

இயக்கச்சி முகாவில் திரியாய் அம்பாள் ஆலய உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடியதான குற்றச்சாட்டில் ஆழியவளையைச் சேர்ந்த இளைஞரொருவரை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி ஆலய உண்டியல் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆழியவளைப் பகுதியில் பெண்ணொருவருக்கு திடீரென கலையாடி அருள்வாக்கு சொன்னபோது மேற்குறிப்பிட்ட இளைஞனே உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடியதாகத் தெரிவித்ததையடுத்து உண்டியல் அங்கு நின்ற மக்கள் குறிப்பிட்ட இளைஞரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த இளைஞனைப் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது சந்தேக நபரான குறித்த இளைஞரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## கல்விக் கண்காட்சி

வலி. வடக்கு, ஜூன் 17

உடுவில் மகளிர் கல்லூரியின் 191ஆவது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரி மாணவிகளின் கல்விக் கண்காட்சி நாளை புதன்கிழமை தொடக்கம் 3 தினங்கள் தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்தக் கல்விக் கண்காட்சியில் மொழியியல், கலை, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூக விஞ்ஞானம், சமயம், புவியியல், வரலாறு உட்பட 18 துறைகளில் காட்சிக் கூடங்கள் அமையவுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வரை விஸ்தரிக்கப்படவுள்ள ரயில் சேவை குறித்த பொது மக்களின் ஆவலைத் தூண்டும் வகையில் ரயிலும்கூட காட்சிப்படுத்தப்படவுள்ளது. முழுமையாக மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களையும் முயற்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்தக் கல்விக் கண்காட்சி கல்லூரி ஆசிரியர்களின் பல நாள் வழிகாட்டலின் கீழ் அதிபரின் நேரடி மேற்பார்வையில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

## ஆயுள்வேத மருந்தகம் எழுதுமட்டுவாழில்

தென்மராட்சி, ஜூன் 17

எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை வளாகத்தில் 7 லட்சம் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சபைத் தலை வர் சி.துரைராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மருந்தகக் கட்டடத்தைத் திறந்து வைத்ததுடன் மருந்தகச் சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.



மருந்தக பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்தபோது...

மருந்தக பெயர்ப் பலகையை கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் சோ.கனகசுந்தரம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.கயிலைநாதன், பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை, கிராம அலுவலர் க.ஜெனகன், எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா, வித்தியாலய அதிபர் நரேந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

## தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணிக்குப் பின் இயங்கத் தடை

### வலி.தென்மேற்கில்

வலி.தென்மேற்கு, ஜூன் 17

குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கலாசாரச் சீர்கேடுகளிலிருந்து மாணவர்களைக் காப்பாற்ற முன்வந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை மாலை 6 மணிக்குப் பின்பு தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதற்குத் தடை விதித்துள்ளது.

இதற்கான தீர்மானம் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மே மாதத்துக்கான தொடர் கூட்டம் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சுழிபுரம் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குடாநாட்டில் வயது வேறுபாடின்றி பெண்கள் மீது துணிகரமான முறையில் இடம்பெற்று வரும் பாலியல் வன்புணர்வு போன்ற குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் பெற்றோர் மத்தியில் கவலையும் பீதியும் ஏற்பட்டுள்ளதுடன் வெளியில் செல்லும் பெண் பிள்ளைகளின் வரவை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையும் தோன்றியுள்ளது.

எனவே தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணிக்குப் பின் இயங்குவதைத் தடை செய்ய வேண்டும் என்று தவிசாளர் கருத்துத் தெரிவித்த போது, இரு உறுப்பினர்கள் தவிசாளரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதிலும் ஏனைய உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதால் இதற்கான தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (வ-115)

# 6 கிராமங்களுக்கு பஸ் சேவை இல்லை

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அவலம்

முல்லைத்தீவு.ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சுமார் ஆறு கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் கிடைக்காததால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, ஆலங்குளம், தேறாங் கண்டல், ஐயன்கன்குளம், மருதன்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய ஆறு கிராமங்களையும் உள்ளடக்கிய வகையில் மல்லாவி, ஆலங்குளத்தில் இருந்து ஏ-9 வீதி கொக்காவில் சந்தி வரை செல்லும் வீதியூடாக எந்தவித போக்குவரத்து வசதிகளும் இடம்பெறுவதில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோது அவர்கள் வீதி சீரின்மையால் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து தற்போது குறித்த வீதி கொக்காவில் சந்தியில் இருந்து மருதன்குளம் வரைக்குமான 10 கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய 12 கிலோ மீற்றர் தூர வீதி மாத்திரம் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது என்று மக்கள் கூறினர்.

> கொக்காவில் சந்தியில் இருந்து மருதன்குளம் வரைக்குமான 10 கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி கொக்காவில் சந்தியில் இருந்து மருதன்குளம் வரைக்குமான 10 கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டும் அதனூடாக போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவதில்லை என்று மக்கள் குறிப்பிட்டனர்.

அதனால் நாம் தினமும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று மக்கள் கூறினர்.

எனவே இந்த வீதியில் தினமும் ஒரு பஸ்ஸையாவது போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தித்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

## யானைத் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும்

### முல்லை மக்கள் கோரிக்கை




முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் யானைகள் அடிக்கடி பயிர்களையும் அழித்து வீடுகளுக்கும் சேதம் ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் அந்தப் பகுதிகளில் வசிக்கும்பொதுமக்கள்தாம்பயப் பீதியுடன் வாழ்ந்து வரவேண்டியுள்ளது என்று கூறினர்.

யானைத்தாக்குதல் குறித்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர். எனவே யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)

## முல்லையில் சிறு குளங்கள் சேதம் அடைந்த நிலையில்

முல்லைத்தீவு.ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் 227 இற்கும் மேற்பட்ட சிறு குளங்கள் சேதமடைந்துள்ளன என்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தக் குளங்கள் கமநல சேவை நிலையங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இதில் 45 குளங்கள் உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்று அவர் கூறினார்.

நிதி உதவி கிடைத்ததும் குளங்கள் விரைவில் புனரமைக்கப்பட உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். • (ச-55)

## பொதுக் கிணறு அமைத்த காணி அபகரிப்பு

கிளிநொச்சி.ஜூன் 17

கிளிநொச்சி, புதுமுறிப்பு கிராமத்தில் தனி நபர் ஒருவர் பொதுக் கிணறு அமைந்துள்ள காணியை அடாத்தாக அபகரித்துள்ளார்.

இதனால் 60க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்தோடு குடி தண்ணீர் தேடி நீண்ட தூரம் அலையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவும் கடும் வறட்சியால் குடிதண்ணீர் நெருக்கடி நிலவும் நிலையில் குறித்த நபரின் செயற்பாடு மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே குறித்த நபர் பொதுக் கிணறு அமைந்த இடத்தை அபகரிப்பதை தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)



இந்திய வீட்டுத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில். முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பான மேன் முறையீட்டுக் கூட்டம் கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட முகாமையாளர், பொறியியலாளர் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## நிரந்தர வைத்தியர் எவரும் இல்லை

### நட்டாங்கண்டல் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு.ஜூன் 17

முல்லைத்தீவு, நட்டாங் கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதனால் இந்த வைத்தியசாலையை நம்பி வாழும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கான அடிப்படை மருத்துவத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் இதுவரை வைத்தியர் எவரும் நியமிக்கப்பட வில்லை.

இந்த வைத்தியசாலையில் இருபதுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதும் வைத்தியர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை என்று மக்கள் கூறினர்.

பிரசவ விடுதியுடன் கூடிய வைத்தியசாலையாக உள்ள போதிலும், பொது மக்களுக்கு பயன் கிடைக்கக் கூடிய வகையில் இந்த வைத்தியசாலை இல்லை. இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மல்லாவி வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று மக்கள் கூறினர்.

எனவே இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்துத்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

## எந்தவித அபிவிருத்திகளும் இல்லாது இயங்கும் பாடசாலை

### அதிபர் பிரான்சிஸ் சேவியர் கவலை

மன்னார்.ஜூன் 17

மன்னார், மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாப்பாமோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எவ்வித அபிவிருத்தியையும் காணாத நிலையில் உள்ளது என்று பாடசாலை அதிபர் பிரான் சிஸ் சேவியர் கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பாடசாலையில் தற்போது பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. தற்போது குறித்த பாடசாலையில் இரண்டு கட்டடங்கள் மாத்திரமே உள்ளன. ஒரு கட்டடம் நிரந்தரக் கட்டடமாக உள்ளது. மற்றைய கட்டடம் தற்காலிக ஓலைக் கொட்டிலாகக் காணப்படுகின்றது.

நிரந்தரக் கட்டடத்தில் தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற் கின்றனர். தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் ஓலைக்கொட்டிலால் அமைக்கப்பட்ட வகுப்பறையில் கல்வி கற்று வருகின்றனர். இந்த ஓலைக்கொட்டில் தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளது. அதனால் மாணவர்கள் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று வருகின்றனர்.

> 4 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பற்றைக் காடுகள் அழிக்கப்பட வேண்டியுள்ளன.



அடிப்படை வசதிகள் இன்றிய பாடசாலை

சேதமடைந்த வகுப்பறையைத் திருத்தித் தருமாறு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றிடம் உதவி கோரியுள்ளேன்.

இந்தப் பாடசாலையைச் சுற்றி அடர்ந்த பற்றைகள் காணப்படுகின்றன. அதனால் மாணவர்களுக்கு பலவித இடர்பாடுகள் ஏற்படும் என்ற நோக்கத்தில் அவை தற்போது துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இன்னமும் 4 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பற்றைக் காடுகள் அழிக்கப்பட வேண்டியுள்ளன. இந்தப் பாடசாலையில் தரம் 9 வரை மட்டுமே கற்றல் நடைபெற்று வருகின்றது. அதனால் பாப்பா மோட்டை கிராமத்தில் இருந்து உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்பதற்கு மாணவர்கள் அடம் பன் மகா வித்தியாலயத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு குறித்த நேரத்துக்கு அரச, தனியார் பஸ்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்மாணவர்கள்பாடசாலைக்கு தாமதமாகவே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நான் உரிய அமைப்புக்களிடம் முறையிட்டுள்ளேன். அவை தீர்க்கப்படும் பட்சத்தில் மாணவர்கள் எவ்வித தடைகளும் இன்றி கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பம் உருவாகும்-என்றார். (ச-56)

# தொழில்நுட்ப தொழில்சார் கல்வி தொடர்பான மாநாடு கொழும்பில்




தொழில்நுட்ப தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான மாநாடு அடுத்த மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக பாரா ளுமன்ற உறுப்பினரும் இளைஞர் மற்றும் திறன் அபிவிருத்திபிரதியமைச்சருமான மொஹான்லால் கிரேரு தெரிவித்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், சமூக ஒருங்கிணைப்பு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி என்ற தொனிப் பொருளின் கீழ் திறன் அபிவிருத்தி இளைஞர் விவகார அமைச்சு, ஜேர்மனி அபிவிருத்தி உதவி நிறுவனமான ஜி.ஐ.இசற் உடன் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்கின்றது.

ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டிருக்கும் தேசிய திறன்கள் தினத்துடன் ஜேர்மனி அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச கொரிய முகவர கம், சர்வதேச தொழில் ஸ்தாபனம், ஆஸ்திரேலிய அரசின் வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சு என்பன இம்மாநாட்டுக்கு அனு சரணை வழங்குகின்றன.

இந்த மாநாடு இலங்கை வரலாற்றில் பொருத்தமான நேரத்தில் இடம்பெறுகிறது. இலங்கையில் இன்று பல்வேறு அனுபவங்களையும் மாதிரிகளையும் தொழில்சார் கல்வித்துறை பெற்றுள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்களை எடுத்துக் காட்டி ஒரு மேடையை உருவாக்குவதன் மூலம் அனைவரும் பயனடைய முடியுமென அவர் தெரிவித்தார். (த)

# இலங்கையிலிருந்து வெளியேறுகிறது ஏ.ஐ.ஜி.

சர்வதேச ரீதியில் காப்புறுதிச் சேவைகளை வழங்குவதில் புகழ்பெற்ற நிறுவனமான ஏ.ஐ.ஜி. இலங்கையிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது.

இலங்கையின் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் தமது காப்புறுதித் தீர்வுகள் அமைந்திராத காரணமாகவும், சர்வதேச ரீதியில் தமது வர்த்தக செயற்பாடுகளை மீளாய்வு செய்கின்றமையாலும் இந்தத் தீர்மானத்தை தாம் மேற்கொள்ள நேரிட்டதாக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கொழும்பில் பி.ஓ.சி. மேர்ச்சன்ட் டவரில் கொண்டிருந்த தனது அலுவலகத்தையும் மூடத் தீர்மானித்துள்ளதுடன், அதில் பணியாற்றிய ஊழியர்களுக்கு நட்ட ஈட்டுடன் கூடிய கொடுப்பனவை வழங்கத் தாம் முன் வந்துள்ளதாக காப்புறுதி சபையின் தலைவர் இந்திராணிசுகததாசவுடன் மேற்கொண்ட சந்திப்பில் நிறுவனம் குறிப்பிட்டிருந்தது.

130 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தனது செயற்பாடுகளை கொண்டுள்ள ஏ.ஐ.ஜி. . 2000ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஹேலீஸ் லிமிட்ரெட் உடன் பங்காண்மை அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. 2005 ஆம் ஆண்டில் ஹேலீஸ் ஏ.ஐ.ஜி. தனது ஆயுள் காப்புறுதி மற்றும் நீண்ட கால காப்புறுதித் திட்டங்களை வழங்குவதை இடை நிறுத்தியிருந்தது.

நிறுவனத்தின் இந்தத் தீர் மானம் குறித்து வாய்மூல அறிவித்தல் புதன்கிழமை வெளியாகியிருந்த போதிலும், எழுத்து மூலமான அறிவித்தல் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

# மொபிடெல்லின் புதிய பரிமாணம்

தேசிய கையடக்கத் தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் மொபிடெல், தனது எம் ஓட்டோமேற்றிவ் செயற்றிட்டத்துக்கு அமைவாக அல்ற்றாசொனிக் பியூவல் சென்சர் அறிமுகம் செய்துள்ளது.

இதற்கமைவாக இலங்கையில் முதல் தடவை யாக மோட்டார் வாகனங்களில் எரிபொருள் பாவனை குறித்த கண்காணிப்பை உறுதியான வகையிலும், சிக்கனமான முறையிலும் கண்டறியும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அல்ற்றாசொனிக் பியூவல் சென்சர் இல் காணப்படும் தொடுகையற்ற அல்ராசொனிக் (ultrasonic) அளவீட்டு தொழில்நுட்பத்தின் காரணமாக, உயர் அளவீட்டுதுல்லியமானகணிப்பீட்டை உறுதி செய்யும்.

எரிபொருள் பாவனையை பாரம்பரியமாக அளவிடுவதற்கு பயன்படுத்தும் முறையில் எரிபொருள் செல்லும் கட்டமைப்பில் துளைகளை ஏற்படுத்த வேண்டிய நிலை அல்லது எரிபொருள் தாங்கியினுள் விசேட அளவிடும் சாதனங்களை செலுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. இதன் காரணமாக துளையிடும் சாதனங்களைக் கொண்டு துளையிட வேண்டிய நிலை காணப்பட்டது. இது மிகவும் அபாயகரமானது. அல்ராசொனிக் (ultrasonic) முறையில் துளையிடும் தேவைகள் எதுவும் இல்லை.

எனவே, இது பாதுகாப்பானதாக கருதப்படுகிறது. அத்துடன், மிகவும் துல்லியமானது. கார் கள், வான்கள், பஸ்கள், பிரைம் மூவர்கள் போன்ற சகல விதமான வாகனங்களுக்கும் பொருத்தமானதாக அமைந்துள்ளது. இந்த முறையின் மூலம், வாகனத்தின் எரிபொருள் மீள் நிரப்பும் அளவு, காணப்படும் எரிபொருளின் அளவு போன்றன டிஜிற்றல் முறையில் பதிவு செய்யப்படும். இதன் மூலம் எரிபொருள் திருட்டை குறைத்துக் கொள்ளவும் முடியும். இந்த முறையின் மூலம் அநாவசிய விர யங்கள் தவிர்க்கப்படுவதுடன், சிக்கனத்தை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. மொபிடெல் எம் ஓட்டோமேற்றிவ் இன் அல்ற்ரா சொனிக் பியூவல் சென்சர் கொண்டுள்ள பல சிறப்பம்சங்கள் மற்றும் அனுகூலங்களில், ஜி.பி.எஸ். சாதனங் களுடன் இயங்கக்கூடிய திறன் கொண்டுள்ளது. இதன் வடிவமைப்பு, சந்தையில் காணப்படும்மிகவும்பாதுகாப்பான மற்றும் சூழலுக்கு நட்புறவான எரிபொருள் உணரி வகையாக திகழச் செய்துள்ளது. புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொழில் நுட்பமானது, நிறுவனங்கள் தமது வாகன போக்குவரத்து செயற்பாடுகளைக் கையாள்வதில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை சமாளிக் கும் வகையில் அமைந்துள்ளது.வாகனங்களை பராமரிப்பது மற்றும் எரி பொருள் செலவீனம் போன் றவை அதிகரித்துள்ள நிலை யில், எரிபொருள் பாவனையை கணிப்பது மற்றும் மேற்பார்வை செய்யும் தொழில்நுட்பம் ஒன்றை நிறுவனங்கள் நாடிய வண்ணமுள்ளன. (த)

# இலங்கையில் விநியோக நிலையத்தை ஆரம்பித்தது 'போட்' மோட்டர் கம்பனி



கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட தனது விநியோக காட்சியறை, விற்பனை மற்றும் சேவை நிலையத்தை 'போட்' மோட்டர் கம்பனி அண்மையில் ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற நிறுவனத்தின் உள் நாட்டு பிரசன்னத்தை மேலும் உறுதி செய்துள்ளது.

புதிய 6000 சதுர அடிப் பரப்பில் அமைந்த இந்த காட்சியறையானது, 12 வாகனங்களை காட்சிப்படுத்தக்கூடிய காட்சியறை மற்றும் 14 வாகனங்களைச் சேவைக்குட்படுத்தக்கூடிய சேவைப் பிரிவு ஆகியவற்றை வாடிக்கையாளர்களின்வெவ்வேறுதேவைகளைநிவர்த்தி செய்யும் வகையில் கொண்டுள்ளது.

முழுமையான சேவை வசதி என்பது வாடிக்கையாளரை கவனத்தில் கொண்டும், இலங்கையின் வளர்ச்சியடைந்து வரும் வாகன சந்தையையும் கருத்தில்கொண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

போட்- கொழும்பு காட்சியறை என்பது டென்சில் கொப் பேகடுவ மாவத்தை, பத்தர முல்லை என்ற பகுதியில் அமைந் துள்ளது.

போட்- மோட்டர் கம்பனியின் ஆசிய பசுபிக் வளர்ந்து வரும் சந்தைகளுக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் வெஸ்டர்மன் இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில்;

"எமது பங்காளரான ஃபியுச்சர் ஒடொமொபைல்ஸ் உடன் இணைந்து, இந்தப் புதிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த போட்- வாடிக்கையாளர்களுக்கு உலகத்தரம்வாய்ந்தசேவைகளை வழங்க முடியும்" என்றார்.

இந்த நிலையத்தின் ஒவ்வொரு குறிக்கோள் என்பதும், ஒப்பற்ற வாடிக்கையாளர் மற்றும் உரிமையாண்மை அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளதுடன், வசதி, சௌகரியம், சிக்கனம் ஆகியவற்றை வழங்கும் வகையில் அமைந்துள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்புக்கு வெளியேயும் தனது சேவை வலையமைப்பை விஸ்தரிக்க போட்- திட்டமிட்டுள்ளது. இதற்காக நான்கு மேலதிக சேவை நிலையங்களை நிறுவ போட்- திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் போட்- வாகன உரிமையாளர்களுக்கு நாடு முழுவதும் சேவைகளை இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தவுள்ளது.

மேலதிகமாக, போட்- தற்போது 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதிவு செய்யும் அதிகளவான விஸ்தரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்த வண்ணமுள்ளது. 2020 ஆம் ஆண்ட ளவில் 60 - 70 வீத வளர்ச்சியை ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பதிவு செய்யும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (வ)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமைச்சரின் அச்சுறுத்தலும் ஜனநாயக விழுமியங்களும்

சர்வதேச விசாரணை ஒன்று நிச்சயம் இடம்பெறப் போகின்றமை உறுதியாகிவிட்டது. அந்த விசாரணைக்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் நாட்டுக்குள் வருவதற்கு இடம்தரப் போவதில்லை என்று அரசு வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது. அதற்குப் பக்கபலமாக நாடாளுமன்றத்தின் அனுசரணையைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில்தான் விசாரணைகளில் எவரும் அரசுக்கெதிராக சாட்சியமளிக்கலாகாது. அப்படி அளித்தால் அதற்கான கடும் பின்விளைவுகளைச் சந்திக்க நேரும். அவ்வாறானவர்கள் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள் என்று அரச தரப்பில் பேசவல்ல ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விசாரணை நடத்த வந்த ஒருவர் குற்றம் புரிந்தவராகக் குறிக்கப்பட்டவர் பக்கமாக ஆள்காட்டி விரலை நீட்டி இந்தக் குற்றங்களை நீதான் புரிந்தாயா என்று கேட்டால் சம்பந்தப்பட்டவர் மறுக்கலாம், தனது குற்றமற்ற தன்மையைக் காட்டுவதற்கு தனது தரப்பிலான சாட்சியங்களையும் ஆவணங்களையும் முன் வைத்து வாதிடலாம்- ஆனால் எனக்கு எதிராக எவராவது சாட்சியம் அளித்தீர்களோ, தொலைந்தீர்கள் என்று அச்சுறுத்துவது நியாயமா? தர்மம், நீதிக்கு இது அடுக்குமா? இவ்வாறுதான் அரசின் எச்சரிக்கை இருக்கிறது.

மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் சபையின் தீர்மானத்துக்கேற்ப நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் சாட்சியமளிப்பவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும்படியும் பணியகம் பல முறையும் வலியுறுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாது, இலங்கையில் குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியமளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டங்களை இயற்றும்படியும் மனித உரிமைகள் ஆணையாளர் கோரிக்கை விடுத்திருந்தார். அப்படியான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி பொதுநலவாய மாநாடு கொழும்பில் நடைபெறுவதற்கு சற்று முன்னதாக அமைச்சரவையால் ஆலோசனைக்கு எடுக்கப்பட்ட நிலையில் கிடப்பில் போடப்பட்டு விட்டது. ஒரு ஜனநாயக நாடு என்று கூறிக் கொள்வதற்கு இம் மாதிரிச் சட்டங்கள் நடைமுறையில் இருப்பது அவசியம் அல்லவா? அது இருக்குமானால் அமைச்சர் இவ்விதம் அரசுக்கு எதிராக சாட்சியமளிக்க முன்வரக் கூடியவர்களை அச்சுறுத்தத் துணிந்திருக்கமாட்டார்.

உள்ளக விசாரணை போதுமானது; சர்வதேச விசாரணை தேவையில்லை என்று அடிக்கடி அரசு தரப்பில் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அதற்கான முன் முயற்சி எதுவும் வெளிப்படையாக காணப்படவில்லை. அவ்வாறு நடைபெற்றாலும் அதன் முடிவுகள் அல்லது பரிந்துரைகள் நடைமுறைக்கு வருவது சாத்தியமாகும் என்று தோன்றவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான குழுவின் பரிந்துரைகளே பலவாறும் இழுபறிப்பட்டதின் பின்னர் மனித உரிமை சபையின் தீர்மான வலியுறுத்தல்களை அடுத்து ஒருவாறு அவற்றில் ஒரு சிலவற்றை மனமில்லாமலே செயற்படுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் உள்ளக விசாரணை எப்படியிருக்கும் என்பதைப் பற்றி எண்ணுவது கஷ்டமாகவிருக்கிறது.

அவ்வாறு உள்ளக விசாரணை ஒன்றை அரசு ஆரம்பித்தாலும் அங்கேயும் சாட்சியமளிப்பவர்கள்- அதுவும் அரசுக்கெதிராக சாட்சியமளிப்பவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைக் குழுவிலும்கூட அனேகர் சாட்சியமளிக்கத் தயங்குவதாகத் தெரிகிறது. அதனால்தான் அப்படியானவர்களுக்கு இரகசியமாக சாட்சியமளிக்க ஏற்பாடு செய்து தரலாம் என்று அந்தக் குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விசாரணையானால் என்ன, உள்ளக விசாரணையானால் என்ன, ஏன், குற்றவியல் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளானாலும்கூட பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியமளிப்பவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான சட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையெனில் அரசுத் தரப்பு அமைச்சர்கள் மட்டுமல்ல கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற குற்றங்களைப் புரிபவர்களும்கூட பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களுக்காக சாட்சியமளிப்பவர்களையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கத்தான் செய்வார்கள். அவ்வாறான நிலையில் இங்கு ஜனநாயகம் நிலவுகின்றது என்று எங்ஙனம் கூறிக்கொள்ள முடியும்?

சத்திரசிகிச்சை மேற்கொண்டு மருந்து கட்டியதால் நோயாளி குணப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறும் அமைச்சர் இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் திரும்பவும் உயிர்பெற்று நடமாடுகின்றனர் என்பதையா குறிப்பிடுகின்றார் என்பதை அறிவதில் தமிழ் மக்கள் ஆவலுடன் உள்ளனர். அவ்வாறாயின் உயிர்த்தெழுந்தவர்களை அமைச்சரால் காட்ட முடியுமா என்றும் அவர்கள் வினாத் தொடுக்கின்றனர்.



### இனவாதத்தின் மற்றொரு வெளிப்பாடு

# நாவற்குழி சிங்களக் குடியேற்றம்

■ சேரலாதன்

## கொலைகளை சத்திர சிகிச்சையுடன் ஒப்பிட்ட அமைச்சர்

சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் போது இரத்தம் வழிந்தோடவே செய்யும். இலங்கையிலே கூட சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் போரைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இதனால்தான் சத்திரசிகிச்சை போன்று போர் நடத்தப்பட்டது. அதன்போது இரத்தம் வழியவே செய்தது. தற்போது காயத்துக்கு மருந்து போட்டு மூடி மறைத்துள்ளார்கள். இப்போது நோயாளி குணப்படுத்தப்பட்டுவிட்டார். இவ்வாறு எவருமே இதுவரை அறிந்திராத அரிய கருத்துக்களை உதிர்த்து விட்டுள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கான காணி உறுதிகளை வழங்கி யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்பாக நன்கறிந்தவர்களுக்கு அவரது கருத்துக்கள் எவ்வித ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி விடாது. ஏனென்றால் காலத்துக்குக் காலம் வெவ்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிப்பது, அதிரடியான செயல்களைப் புரிகின்றேன் எனக் கூறி நகைப்புக்கிடமான காரியங்களைச் செய்து மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கு உள்ளாவது அவரது வழக்கமாகும். உண்ணாவிரதம், எதிர்ப்புப் போராட்டம், கண்டன அறிக்கை வெளியிடுதல் என் பன அவரது வாடிக்கையான நடவடிக்கைகளாகும். தற்போதுகூட தாம் ஜனாதிபதியுடன் முரண்படுவது போன்றதொரு பாவனையைக் காட்டியதுடன் அமைச்சரவைக் கூட்டங்களையும் புறக்கணித்து வருகின்றார். ஆனால் இவரது இத்தகைய நடவடிக்கைகளை எவரும் கணக்கில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இவரையொரு அரசியல் கோமாளியென்றே மற்றவர்கள் மதிக்கின்றனர்.

ஜே.வி.பியில் பரப்புரைச் செயலாளர் என்ற உயர்ந்த இடத்தை வகித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ தமது சுயநலனுக்காகவும், தமது இயல்புக்கு ஏற்றதான ஆடம்பர வாழ்க்கையை வாழ்வதற்காகவும் ஜனாதிபதியுடன் தம்மை ஐக்கியமாக்கிக் கொண்டார். அதற்குப் பிறகு ஜனாதிபதிக்கும் அரசின் முக்கியஸ்தர்களுக்கும் துதி செய்வதே அவரது முக்கிய செயற்பாடாக மாறியுள்ளது.

இத்தகைய ஒருவர்தான் இறுதிப் போரின்போது கொல்லப்பட்ட மற்றும் படுகாயப்படுத்தப்பட்டு அங்கவீனர்களாக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் தொடர்பான ஒரு சிறிய உதாரணத்தைக் கூறி விடயத்தை அப்படியே விட்டுவிட முயற்சிக்கின்றார். அப்படியாயின் இறுதிப்போரின்போது மக்கள் எவருக்கும் ஒரு சிறிய பாதிப்புக்கூட ஏற்படவில்லையென்ற முன்னைய அரசின் அறிவிப்பு பொய்யென அமைச்சர் கூற வருகின்றாரா என்ற கேள்வி தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது.

சத்திரசிகிச்சை மேற்கொண்டு மருந்து கட்டியதால் நோயாளி குணப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறும் அமைச்சர் இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் திரும்பவும் உயிர்பெற்று நடமாடுகின்றனர் என்பதையா குறிப்பிடுகின்றார் என்பதை அறிவதில் தமிழ் மக்கள் ஆவலுடன் உள்ளனர். அவ்வாறாயின் உயிர்த்தெழுந்தவர்களை அமைச்சரால் காட்ட முடியுமா என்றும் அவர்கள் வினாத் தொடுக்கின்றனர். விமல் போன்ற இனவாதிகளுக்கு தமிழர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் நிச்சயமாக வேதனையை ஏற்படுத்தியிருக்கமாட்டாது. போரின்போது இடம்பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இடங்களில் வாழக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படாது தமிழ் மக்கள் அலைந்து திரியும் இந்த வேளையில் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் சிங்களக் குடியேற்றமொன்றை அமைச்சர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார். இந்த நிகழ்வில் எம்மவர்களும் கலந்து கொண்டமைதான் இதயத்தைப் பிழிகின்றது.

திருகோணமலை நகரின் நுழைவாயில்களிலும் இவ்வாறுதான் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. நகரில் வாழும் தமிழர்கள் வெளியிடங்களுக்குச் சென்று வர வேண்டுமென்றால் சிங்களக் குடியிருப்புக்களைத் தாண்டியே ஆக வேண்டும். மோதல்கள் அங்கு ஏற்படும்போது இந்தப் பகுதிகளில் வைத்தே தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றமை அங்கு வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன. இவ்வாறானதொரு நிலைமை யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இப்போதே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து இடம் பெயர்ந்து சென்ற சிங்கள மக்களை அவர்களின் முன்னைய வாழ்விடங்களில் குடியமர்த்துவது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

இடம்பெயர்ந்து சென்றவர்கள் தாம் இங்கு வாழ்ந்ததற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும்போது அதற்கு உரிய வகையில் நடவடிக்கை எடுப்பது அதிகாரிகளின் கடமையாகும். இந்த நடை முறைகள்தான் இடம்பெயர்ந்த தமிழர் களின் விடயத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆனால் பெரும்பான்மையின மக்கள் என்ற வகையில் சலுகைகளை வழங்கி காணிக் கச்சேரி எதுவும் நடத்தாமல் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியை வழங்கி குடியேற்றத்தை ஏற்படுத்துவதென்பது இந்த நாட்டின் ஜனநாயகம் எந்த நிலையில் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. நாவற்குழியில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் இருந்தால் அவர்களுக்குரிய காணிகளில் அவர்களைக் குடியமர்த்துவது தவறெனக் கூற முடியாது. ஆனால் இங்கு இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்.குடாநாட்டின் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சுமார் 14 ஆயிரத்து 500 குடும்பங்களுக்குக் காணி தேவையென காணி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அநுராதபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நாவற்குழியில் காணிகள் வழங்கப்பட்டமை எந்த வகையில் நியாயமென்பது தெரியவில்லை.

நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்வதற்கும் எவருக்கும் உரிமையுண்டு எனக் கூறப்பட்டாலும் அதற்கும் விதிமுறைகள் உள்ளன. மேலும் இனக்கலவரங்களின் போது தமது வர்த்தக நிலையங்களையும், வீடுகளையும் விட்டு இடம்பெயர்ந்த தமிழர்கள் அங்கு முழுமையாகத் திரும்பிச் செல்லவில்லை. ஏனென்றால் பல்வேறு அச்சுறுத்தல்களை அவர்கள் எதிர்கொண்டதால் அங்கு செல்ல அவர்கள் விரும்பவில்லை.

இந்த நிலையில் இறுதிப் போரில் தமிழர்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தி ஒரு நாட்டின் அமைச்சர் பகிரங்கமாக உரையாற்றுவதும், நீதிக்குப் புறம்பான வகையில் தமிழர் பகுதியொன்றில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதும் இந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களின் இன்றைய அவல நிலைமையையே எடுத்துக் காட்டுகின்றது.

# மன அழுத்தம்

## சில தீர்வுகள்

திருமதி. தனேஸ்வரி ரவீந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மனிதவள முகாமைத்துவத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(மறைந்த பேராசிரியர்
என்.பாலகிருஷ்ணன்
அவர்களின் நினைவாக
இக்கட்டுரை பிரசுரமாகிறது)

(நேற்றைய தொடர்ச்சி...)

அவன் ஏன் இவ்வாறு தவறு செய்கிறான்? எனக்கு என்ன நடக்கப்போகிறது? இதை எப்படித் தாங்கப்போகிறேன்? போன்ற எண்ணங்கள் எம்முள் ஆரோக்கியமில்லாத தன்மையை ஏற்டுத்தி அதன் மூலம் மேலும் எமது மன அழுத்தம் அதிகமாவதை அறியலாம். இப்படித்தவறான எண்ணங்களை விலக்கி சாதகமானவற்றை எண்ண வேண்டும் அமைதி நம்பிக்கை தெய்வத்திருகாமை, உணர்வுகளைக் கட்டுப்படுத்தல் போன்றவை நல்ல பலனைத் தரும். நம்முடைய எண்ணங்களே நாமாகிறோம் என்று பெரியோர் கூறுவர்.

**சந்தோசமான சம்பவங்களும் மன அழுத்தத்தை ஏற்படுத்துமா?**

மன அழுத்தம் நல்ல செயல்களில் கூட வரும் என்கின்றன ஆய்வுகள். திருமணம் போன்ற நிகழ்வுகள், பதவி உயர்வு, இவையெல்லாம் ஒரு வகையில் மன அழுத்தத்தை அதிகரிக்கும் என்றும் அதைச் சரியர்ன விதத்தில் கையாள்வதில் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும் கூறப்படுகிறது. மன அழுத்தத்தை உண்டாக்கும் காரணிகளை ஒழிப்பது என்பது இயலாத காரியம். ஆனால் நம்முடைய மனதைத் திறமையாகக் கையாள்வதன் மூலமாக மன அழுத்தத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க முடியும். மன அழுத்தத்தைக் கையாள்வதற்கு நம்முடைய மனதின் சிந்தனைகளை தூய்மைப்படுத்த வேண்டும். எதிர்மறைச் சிந்தனைகள் பெரும்பாலும் மன அழுத்தத்தையே ஏற்படுத்துகின்றன. எனவே நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் மன அழுத்தத்தைக் கையாள முடியும்.

**மன. அழுத்தத்தின் வெளிப்பாடுகள்**

**மன/உள ரீதியானவை**

கவனக் குறைவு, முடிவுகள் எடுப்பதில் சிக்கல், ஞாபக மறதி, குழப்பம், எதிர்மறைச் சிந்தனைகள், தெளிவற்ற சிந்தனைகள், தவறான முடிவுகள், தப்பித்தல் முயற்சிகள் என அழுத்தமாக மனதைப் பாதிக்கும் செயல்களைப் பட்டியலிடலாம்.

**உடல் ரீதியானவை**

தலைவலி, அஜீரணக் குறைபாடுகள், தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, உடல் வலி, நெஞ்சு வலி, சீரற்ற இதயத் துடிப்பு, உயர் இரத்த அழுத்தம், உடல் எடை அதிகரித்தல்/குறைதல், ஆஸ்த்மா, மூச்சுத் திணறல், தோல் நோய்கள், தாம்பத்தியக் குறைபாடுகள், புற்றுநோய், அல்சர், சலரோக நோய் என மன அழுத்தம் தரும் உடல் நோய்களும் ஏராளம்.

**நடத்தை ரீதியானவை**

மன அழுத்தப் பாதிப்புகளினால் தன்னம்பிக்கைக் குறைபாடு, கோபம், எரிச்சல், சீரற்ற உணவுப் பழக்கம் (அளவுக்கு அதிகமாக, குறைவாக உண்ணுதல்), சீரற்ற தூக்கம், தனிமையை விரும்புதல், கடமைகளைத் தவிர்த்தல், பதட்டம் போன்ற பாதகமான செயல்களுக்கும் தள்ளப் பட்டு விடுகிறோம்.

**மன அழுத்தத்தின் வகைகள்**

மன அழுத்தத்தை மருத்துவம் பல விதமாகப் பிரிக்கிறது. திடீரென நிகழும் ஒரு நிகழ்வினால் ஏற்படும் ஒரு மன அழுத்தத்தை அற்பமான மன அழுத்தம் (acute stress) என்கிறார்கள். இதன் காரணம் நமக்கு தெரிந்ததாகவே இருக்கும். இது விரைவிலேயே காணாமற் போய்விடுகிறது. தொடர் நிகழ்வுகளினால் ஏற்படும் மன அழுத்தத்தை முடிவில்லாத/தொடர் மன அழுத்தம் (episodic acute stress) என்கிறார்கள்: அதிகப்படியான வேலை, தினமும் தாமதமாய் வருவ தால் வரும் பிரச்சினை, அவசரம் போன்றதொடர் காரணிகளால் வருவது இது. இயல்பிலேயே வறுமை, நீண்டகால வேலையின்மை, குடும்பச் சூழல், அவஸ்தையில் மாட்டிக்கொண்டதுபோன்றசூழல் இவையெல்லாம்தரும் மனஅழுத்தத்தைக் கொடூரமான மனஅழுத்தம் (chronic stress) என்று அழைக்கிறார்கள். அதிர்ச்சி மன அழுத்தம் (traumatic stress) என்பது இன்னொரு வகை. ஏதோ ஒரு அதிர்ச்சியால் பாதிக்கப் பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு வராமல் இருக்கும் நிலையே இப்படி அழைக்கப்படுகிறது.

**அலுவலகத்தில் மன அழுத்தத்தைக் குறைக்க சில வழிகள்**

சரியான திட்டமிடுதல்.

நேரத்தை உரியமுறையில் முகாமை செய்தல், நேர முகாமைத்துவம், இடையிடையே ஓய்வு எடுத்தல், மனதைத் தளர்வாக வைத்திருத்தல், நேர சிந்தனையை விருத்தி செய்தல்

ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டும் செய்தல்

முக்கியமான பணிகளை முதலில் முடித்தல்

பகிர்ந்து கொள்ள ஒரு சில நண்பரைக் கொண்டிருத்தல்

பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்து விடுதல். அப்போது தான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.

**அளவாகக் கதைத்தல் (speak adequately) -**

நீங்கள் அளவுக்கதிகமாக கதைப்பவரானால் பிரச்சினைகளையும் எதிர்ப்புக்களையும் விலை கொடுத்து வாங்குபவரா அல்லது மற்றவர்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குபவராக இருப்பீர்கள். நீங்கள் மிகக்குறைவாகக் கதைப்பவரானால், மன அழுத்தத்துக்குள்ளாகுவது அல்லது மன அழுத்தத்தை கோபம், எரிச்சல் போன்றவற்றினூடாக வெளிப்படுத்தும் சாத்தியம் அதிகமாக இருக்கும். அதுமட்டுமன்றி மற்றவர்களால் இலகுவில் மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுபவராகவும் இருப்பீர்கள்.

**நல்ல உறவுகளை வளர்த்தல் -**

வேலைத்தலத்தில் சக ஊழியர்களுடனும் மேலதிகாரிகளுடனும் சிறந்த உறவுகளைப் பேணுவது மன அழுத்தத்தைக் குறைக்க சிறந்த வழி ஆகும். ஒரு சிறந்த வேலைக்குழுவில் ஒற்றுமையாக வேலை செய்தல் ஒரு உன்னத ஸ்ட்ரெஸ் ரொணிக் (stress tonic) எனலாம்.

**இறுக்கம் தளர்த்துதல் -**

காலையில் அலுவலகத்தினுள் நுழைந்ததும் மற்றவர்களுக்கு ஒரு ஹாய்! வணக்கம் போன்ற வார்த்தைகளை மிகவும் உற்சாகமான குரலில் வெளிப்படுத்தும்போதும் மனம்விட்டு சில கருத்துக்களைக் (positive comments) கூறும் போதும் மனதிலுள்ள இறுக்கம் தளர்ந்து மனம் இலேசாகுவதை உணர்வீர்கள்.

உதாரணமாக:

இந்த உடையில் நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள்.

நேற்றைய விடுமுறையை எவ்வாறு கழித்தீர்கள்?

**மற்றவர்களுக்கு உதவுதல் -**

உங்கள் துறையிலுள்ள ஒரு நபர் அல்லது நண்பர் மன அழுத்தத்திலிருப்பதாகத் தோன்றினால் அவர் அதிலிருந்து விடுபட உங்களால் செய்யக்கூடியதைச் செய்யுங்கள். நீங்கள் கூறும் சில ஆறுதல் வார்த்தைகள் அல்லது மன ரீதியான ஆதரவுகூட அந்நபருக்கு இலவசமாகக் கொடுக்கும் ஸ்ட்ரெஸ் ரொணிக் தான் (stress tonic). மாறாக அவருக்கு அழுத்தத்தைக் கூட்டிவிடும் ஸ்ட்ரெஸ் ரொக்சின் (stress toxin) ஆக இருந்துவிடாதீர்கள். மேலும், மற்றவர்களுக்கு உதவுவதன்மூலம் உங்களுக்கு வரக் கூடிய ஒரு மன அழுத்த நிலைமை யின் போது அதேவிதமாக ஸ்ட்ரெஸ் ரொணிக் உங் களுக்கு கிடைக்கும் வாய்ப்பு உண்டு. (சில வேளை அந்த நபரே உங்களுக்கு ஸ்ட்ரெஸ் ரொக்சின் தரக்கூடுமென்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்)

**எதிர்மறை எண்ணங்களை தடுத்தல்**

எம்மிடம் நாமே பேசிக்கொள்வது எமது எண்ணங்களையும் மனநிலையையும் பாதிக்கும். எதிர்மறை எண்ணங்களில் ஈடுபடுபவர்கள் வெகு எளிதில் கவலைக்கும் சோர்வுக்கும் ஆளாவார்கள். உதாரணமாக இரண்டு மனிதர்கள் தத்தமது அலுவலகங்களுக்குள் வருகிறார்கள். அவர்களது மேலதிகாரி அவர்களைக் கோபத்துடன் பார்க்கிறார்.

ஒருவர் உடனே குற்ற உணர்வுடன் தனக்குத் தானே நான் நேற்று ஏதோ தவறு செய்திருப்பேன் போலுள்ளது என்று கூறிக்கொள்கிறார். அவர் அதைப் பற்றியே கவலைப்படத்தொடங்கி பணியில் சரிவர ஈடுபட முடியாமற் போகிறார். மற்றவரோ அந்தச் சூழ்நிலையைப் புறக்கணித்து விட்டு பணியில் ஈடுபடத்தொடங்குகிறார். அவர் தனக்குள்தானே, இன்று காலையில் மேலதிகாரி ஏதோ பாதகமான மனநிலையில் உள்ளார் போலுள்ளது. ஏதோ ஒன்று அவரது மனதைப் பாதித்திருக்க வேண்டும். அவர் மகிழ்ச்சியுறுமாறு நான் ஏதாவது செய்ய முடியுமா? என்று கூறிக் கொள்கிறார். இருவரும் இருந்தது ஒரே சூழ்நிலை. ஆனால் அவர்களது எண்ணங் களும், செயல்களும் முற்றிலும் ஒன்றுக்கொன்று மாறானவை.

**மன அழுத்தத்தைக் குறைக்க பொதுவான சில வழிமுறைகள்:**

அதிகாலையில் எழுந்து வேலைகளைச் செய்தல்.

எங்கேயாவது செல்ல வேண்டியிருந்தால் அதற்குரிய ஆடைகள், பொருள்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளுதல். *(தொடரும்)*



# ஈழ நாட்டில் சித்தர் மரபு

ப.பத்மநிருபன், சங்கானை.

இந்தியாவின் தமிழ் நாட்டில் சித்த மரபொன்று நெடுங்காலமா இருந்து வருகின்றது. அறுபத்து மூன்று நாய மார்கள் என்பது போன்று சித்தர்களை பதினெண்மராகக் கூறுவது மரபு. ஆயிர பதினெட்டுப் பேருக்கு மேல் பலர் இருந் கிறார்கள் என்பது வெளிப்படை. சமீப க திலும் பாரதநாட்டிலும் ஈழத்திலும் சித்த பலர் இருந்திருக்கிறார்கள்.

சித்துக்களிலும் அருட் செயல்களிலும் வ வர்களே சித்தர்கள் என்று மக்கள் பொதுவ கருதுகிறார்கள். சித்தர்கள் அட்டமாசித்தி கைவரப் பெற்றவர்கள். யோக மார்க்கத்தி ஞான நெறி வழி நின்று வல்லவர்களான சித்தர்கள் அந்நெறிநின்று பல சித்துக்களை செய்யும் ஆற்றல்களைப் பெற்றனர். சித்தர் கைக் கொண்ட யோகமார்க்கம் வாசி யோகம் எனப்படும். வாசி என்பது சுவாசம். சுவாசத்தை அடக்கி ஆண்டவர்கள் வாசியோகிகளான சித்தர்களாவர்.

சித்தர்கள் சாதி, சமய, ஆசார கட்டுக் கோப்புக்களுக்கு அப்பாற்பட்டவர்கள். சில சித்தர்கள் இவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். மேலும் உடலைத் திடமாக வைத்திருக்கவும், நோய் வராது பாதுகாக்கவும் நோயைக் குணப்படுத்தவும் சித்தர்கள் கண்ட வைத்திய முறை சித்த வைத்தியம் எனப்படும்.

ஈழவளநாட்டின் சித்தர் பரம்பரையைப் பொறுத்தவரையில் அது தமிழ் நாட்டிலிருந்தே தொடர்ச்சியாக வந்ததாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் கடையிற் சுவாமிகள் தென்னிந்தியாவிலே சஞ்சாரம் செய்து கொண்டு இருந்தவேளை வண்ணை வயிரமுத்து செட்டியார் என்பவரின் அழைப்பின் பேரில் இலங்கை வந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈழப்பகுதியில் கடையிற் சுவாமி கள், ஆனைக் குட்டி சுவாமிகள், பரமகுரு சுவாமி என மூன்று சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கடையிற் சுவாமிகளின் பூர்வீக வரலாற்றைத் திடமாகக் கூற முடியவில்லை. வேறு சிலர் கடையிற் சுவாமிகள் பெங்களூரில் நீதிபதியாக இருந்து குற்ற வாளிகளுக்கு மரண தண்டனை வழங்கியதால் மனம் பொறுக்காமல் அதனைத் துறந்து விட்டு ஈழம் வந்ததாகவும் கூறுவர். எவ்வாறாயினும் இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்கள் இங்கு சித்தர் பரம்பரை உருவாகவும் காரணமாயினர்.

ஈழத்து ஞானியாம் சிவயோக சுவாமிகள் தாம் சிறுவயதில் கடையிற் சுவாமிகளைப் பார்த்ததாகக் கூறியுள்ளார். "கடையிற் சுவாமிகள் சிவபோகத் தைப் புசித்தவர். அவரோடு ஒப்பிடும் போது நாமெல்லாம் எங்கே? கிருஷ்ண் பரமாத்மா போல அவர் பல லீலைகள் புரிந்துள்ளார். அவர் நன்மை தீமைக்கு அப்பாற்பட்டவர். அவர் என்ன செய்தாலும் அவரைக் குறை சொன்னவர்கள் கிடையாது'' என்று கூறியுள்ளார். கடையிற் சுவாமிகளுக்கு சார்ஷன் சுவாமிகள், வைரமுத்து செட்டியார் சுவாமிகள், நன்னியார், குழந்தை வேலுச்சாமி கடைவரதர்,செல்லப்பா சுவாமிகள் போன்ற பலதரப்பட்ட சீடர்கள் இருந்தனர். சார்ஷன் சுவாமிகளே கந்தர்மடம் வேதாந்த மடத்தை ஸ்தாபித்தார். நல்லூர் வீதியில் சஞ்சரித்து உலகப்புகழ் பெற்றவர் செல்லப்பா சுவாமிகள். யோகர் சுவாமிகளுக்கு ஞான உபதேசம் செய்து ஞான குருவாய்த் திகழ்ந்தார். இலங்கையின் தெற்குப் பகுதிகளிலும் மலையுகப் பகுதிகளிலும் பல சித்தர்கள் நடமாடி அருளாட்சி புரிந்திருக்கிறார்கள். அந்த வகையில் ஆனைக் குட்டி சுவாமிகள், குமரகுரு சுவாமிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஈழத்து சித்தர் வரிசையில் எல்லோராலும் அறியப்பட்டவராக, அருள் பிரவாகத்துடன், சிவப் பொலிவோடு உலாவிய தவமுனிவன் சிவயோக சுவாமிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றார். கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து ஆன்மிகப் பணியாற்றி யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு செங்கலடியிலும் சிவ தொண்டன் நிலையம் அமைத்து அரும்பணியாற்றி சிவ தொண்டன் என்ற அறிவு சார் மாத இதழையும் இவ் உலகுக்கு நல்கி நல்வழிகாட்டியவர்.

1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் மாவிட்ட புரத்தில் பிறந்து. அருள் ஞான சித்தராகி 1964 ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் மகா சமாதி கூடிய அடியார் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். சித்தர் மரபும் வேதாகம மரபும் சுவாமிகளிடத்தில் சங்கமமாயின.

சித்தர்கள் எமது நாட்டில் வாழையடி வாழையாக வாழ்ந்து அருள் ஞான ஊற்றை பெருக்கி சித்தர் மரபு வாழ வைத்திருப்பதுடன் எமது நமது ஆன்ம ஈடேற்றத்துக்கும் வழி காட்டியுள்ளனர்.

# இந்தியா வளர்ச்சி பெற்றால் அயல்நாடுகளுக்கு நன்மை

## பிரதமர் நரேந்திர மோடி கூறுகின்றார்

திம்பு, ஜூன் 17

வலுவான மற்றும் வழமையான இந்தியாவால், அயல் நாடுகள் பயனடையும் என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி. பிரதமராகப் பதவியேற்ற பின்னர் முதல் வெளிநாட்டுப் பயணமாக பூட்டான் சென்றுள்ள மோடி, அங்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"அயல் நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது. இந்தியாவில் ஏற்படும் ஆட்சி மாற்றம் இந்தியா - பூட்டான் உறவில் மாற்றத்தை ஏற்படுத்திவிடாது. வலுவான மற்றும் வழமையான இந்தியாவால் பூட்டான் உள்ளிட்ட அயல் நாடுகள் பயனடையும்.

ஜனநாயகத்தின் மீது பூட்டான் வைத்துள்ளநம்பிக்கைபெருமை அளிக்கிறது. ஜனநாயகத்தின் மதிப்பை உணர்ந்து மன்னர் குடும்பம் செயற்படுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது பூட்டானில் அடித்தட்டு மக்களின் நலனை மன்னர் குடும்பம் பேணிக் காக்கிறது.

இந்தியா வலிமையான நாடாக இருக்க வேண்டியது அவசியம். வலிமையான இந்தியாவால் மட்டுமே, அயல் நாடுகளுக்கு உதவ முடியும். அந்த நாடுகளுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் சமாளிக்க முடியும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஊடுருவலை நிறுத்தினால் பேச்சுகளைத் தொடரலாம்

## பாகிஸ்தானுக்கு இந்தியா தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 17

இரு தரப்பு பேச்சுக்கள் தொடர எல்லையில் அத்துமீறல்களை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண் ஜெட்லி.

அருண் ஜெட்லி இருநாள் பயணமாகக் கடந்த சனிக்கிழமை ஜம்மு காஷ்மீர் சென்றார். அங்கு பல்வேறு பகுதிகளுக்கும் சென்று ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஊடுருவல் மற்றும் அத்துமீறல்கள் தொடர்ந்தால் பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை தொடருமா எனக் கேட்கிறீர்கள். அது இயலாது. பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு, எல்லையில் அத்துமீறல்களை பாகிஸ்தான் நிறுத்தவேண்டும்.

எல்லையைப் பாதுகாக்கும் வீரர்களுடனும் இராணுவ அதிகாரிகளுடனும் பேசினேன். இப்பகுதிகளில் ஊடுருவல்களை முறியடிக்கும் வல்லமையை நமது ராணுவம் பெற்றுள்ளது. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு நெடுகிலும் அத்துமீறல் சம்பவங்கள் நடந்தாலும் நமது வீரர்கள் தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர். எல்லையில் எத்தகைய தாக்குதல்களுக்கும் நமது இராணுவம் தயார் நிலையில் இருப்பதாகத் திடமாக நம்புகிறேன். இத்தகைய திருப்தியுடனேயே இங்கிருந்து திரும்புகிறேன்.

எனது பயணத்துக்கு அரசியல் நோக்கம் எதுவுமில்லை. பாதுகாப்பு நிலவரத்தை ஆய்வு செய்யவே இங்கு வந்தேன்.

காஷ்மீர் பண்டிட்கள் மீண்டும் தங்கள் பகுதிக்கு திரும்புவது தொடர்பான மத்திய அரசின் கொள்கை முடிவுகள் இன்னும் சில நாள்களில் அறிவிக்கப்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# உத்தரப் பிரதேசத்தில் பதற்றம்: பொலிஸார் கொல்லப்பட்டதால்

பிரோசாபாத், ஜூன் 17

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பணியிலிருந்த பொலிஸார் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, அங்கு பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள பிரோசாபாத் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையர்களை இரு பொலிஸார் வழிமறித்துள்ளனர். அப்போது அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். சம்பவ இடத்திலேயே பொலிஸார் ஒருவர் உயிரிழக்க, மற்றையவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சம்பவ இடத்தில் திரண்ட ஏராளமான மக்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். நேரம் செல்லச் செல்ல மக்கள் கூட்டம் அதிகமாக திரண்டதால் வீதி மறியலில் ஈடுபட்ட அவர்கள் வாகனங்கள் மீது கல்வீச்சு தாக்குதலை நடத்தினர்.

பொலிஸ் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று பொதுமக்களை சமாதானப்படுத்தி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கடந்த வாரங்களில் பெண்கள் பலர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உத்தரப் பிரதேச அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது கொள்ளையர்களால் பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளமை மேலும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. (ற)



பூட்டான் சென்றிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை விமான நிலையத்தில் வரவேற்கும் அந்நாட்டுப் பிரதமர் ஷெரிங் தோப்கே.

# ரகளை செய்யும் எம்.பிக்கள் மீது இனி கடும் நடவடிக்கை

## சபாநாயகர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 17

மக்களவையில் குழப்பத்தை ஏற்படுத்தும் உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் சுமித்ரா மகாஜன் எச்சரித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சுமித்ரா மகாஜன்,

"நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு மாறாக, அவையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டால், முதலில் அவர்களுடன் பேச்சு நடத்துவேன். அப்படியும் நிலைமை சரியாகவில்லை என்றால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று தெரிவித்தார். (ற)

# இந்தியாவுக்கு எதிராக அனைவரும் திரளுங்கள்

## காஷ்மீர் இளைஞர்களை அழைக்கிறது அல்-குவைதா அமைப்பு

புதுடில்லி, ஜூன் 17

இந்தியாவுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்த காஷ்மீர் இளைஞர்களுக்கு அல் குவைதா அமைப்பு அழைப்பு விடுத்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் மூத்த தளபதிகளில் ஒருவரான மௌலானா ஆசிம் உமர் என்பவர் காஷ்மீர் முஸ்லிம்களுக்கு என்ற தலைப்பில் பேசிய காணொளி ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

இந்த காணொளியில், பாகிஸ்தான் மற்றும் இந்தியா நிர்வாக காஷ்மீர் முஸ்லிம் இளைஞர்கள்அல்குவைதாவில் இணைய வேண்டும். ஈராக்கிலும் சிரியாவிலும் நமது சகோதரர்கள் மேற்கொண்டு வரும் பாதையைப் பின்பற்றி இஸ்லாமிய தேசத்தை காஷ்மீர் முஸ்லிம் இளைஞர்கள் கட்டி எழுப்ப வேண்டும்.

உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் ஆயுதமேந்தி புனிதப் போரை நடத்தி வருகின்றனர். தற்போது நாம் ஆப்கனில் இருந்து இந்தியாவை நோக்கி முன்னேறுவோம்.

புதுடில்லி செங்கோட்டையில் இஸ்லாமிய கொடி பறக்க வேண்டும். பாகிஸ்தான் அளித்த வாக்குறுதியின்படி காஷ்மீர் விடுதலையை அங்கீகரிக்க வேண்டும். இந்தியாவுக்கு எதிராக காஷ்மீர் இளைஞர்கள் புனிதப் போர் நடத்த வேண்டும்"- என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# சொத்துக் குவிப்பு வழக்குக்குத் தடை; 'ஜெ' மனு மீதான வழக்கு இன்று

புதுடில்லி, ஜூன் 17

பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நடந்து வரும் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்கக் கோரிய, முதல்வர் ஜெயலலிதாவின் வழக்கு விசாரணை இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.


இந்நிலையில், சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணைக்குத் தடை கோரி 'லெக்ஸ் ப்ராப்பர்டி' நிறுவனம் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. அதில், வழக்கில் இருந்து தங்களது சொத்துக்களை விடுவிக்க வேண்டும் என்றும், தங்களது மனுவை விசாரிக்கும் வரை பிரதான வழக்குக்குத் தடைவிதிக்கவேண்டும் என்றும் கூறியிருந்தது.

> தங்களது சொத்துக்களை விடுவிக்க வேண்டும் என்றும், தங்களது மனுவை விசாரிக்கும் வரை பிரதான வழக்குக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது

அந்த மனுவை பெங்களூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதைத் தொடர்ந்து முதல்வர் ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அதில், லெக்ஸ் நிறுவன வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்தநிலையில், ஜெயலலிதாவின் மனு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுமீதான விசாரணை இன்று நடை பெறும் என்று நீதிமன்றம் அறிவித்தது. (ற)



ஜெயலலிதா



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஒருபுறம் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் அதற்கெதிராக மேற்கொள்ளப்படும் போராட்டங்களால் போர்க்களமாக மாறியுள்ளது பிரேஸில். வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினைகளை நாடு எதிர்கொண்டிருக்கும் நிலையில், மிகப் பிரமாண்டமான பொருள் செலவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அங்கு ஒரு பகுதியினர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.(ற)

## தத்தளித்த அகதிகளை மீட்டது இத்தாலி

ரோம், ஜூன் 17

இத்தாலிக்கு புலம்பெயர முயன்ற அகதிகளின் படகு லிபிய கடல் பகுதியில் மூழ்கியுள்ளது. அதில் 10 பேர் உயிரிழந்தனர். லிபியாவில் இருந்து 40 கடல் மைல் தொலைவில் படகு மூழ்கியது என்றும், மீட்கப்பட்ட 39 பேரும் இத்தாலிய கப்பலுக்கு மாற்றப்பட்டனர் என்றும் இத்தாலி கடற்படை கூறுகின்றது.

முன்னதாக படகு கவிழ்ந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 700 பேரும் இத்தாலிய கப்பல் மூலமாகச் சிசிலிக்கு கொண்டு வரப்பட்டனர்.

அதேவேளை, ஐரோப்பிய நாடுகளும் கடலில் தத்தளிக்கும் அகதிகளை மீட்கும் பணிகளுக்கு உதவ வேண்டும்என்று இத்தாலி அரசு வலியுறுத்தியுள்ளது. (ற)

## ஈராக்கில் களமிறங்க தயாராகிறதாம் அமெ.

வொஷிங்டன், ஜூன் 17

ஈராக் தலைநகர் பக்தாத்தை நோக்கி முன்னெறிவரும் சதாம் உசைன் ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு அமெரிக்கா தயாராகி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சதாம் உசேன் ஆதரவு படையினர் (ஐ.எஸ்.ஐ.எஸ்) மொசூல், திக்ரித் உட்படப் பல நகரங்களைக் கைப்பற்றியுள்ளனர். தற்போது அவர்கள் தலைநகர் பக்தாத்தை நோக்கி முன்னேறி வருகின்றனர். அவர்களை எதிர்கொள்ள அமெரிக்காவின் உதவியை ஈராக் அரசு கோரியுள்ளது.



தயாராகவுள்ள கப்பல்

இந்தநிலையில் தற்போது அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். ஜார்ஜ் எச். டபிள்யூ புஷ் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் பெர்சிய வளைகுடா பகுதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போர்க் கப்பல் வடக்கு அரபிக் கடல் பகுதியில் தற்போது நிலை கொண்டுள்ளது என்றும், அந்தக் கப்பலில் 50க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## தொலைந்த விமானத்தை கண்டுபிடித்தே தீருவோம்

### மலேஷிய அரசு கூறுகின்றது



விமானம் தொலைந்து 100 நாள்கள் கடந்துள்ளன. அதில் பயணித்தவர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

கோலாலம்பூர், ஜூன் 17

காணாமற்போன விமானத்தை எப்படியும் கண்டுபிடித்தே தீருவோம் என்று உறுதியளித்துள்ளது மலேஷிய அரசு.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த நாட்டின் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஹிசாமுத்தீன் உசைன்,

"அதனைத் தேடுவது உண்மையில் அதிக சவாலான ஒன்றாக உள்ள நிலையில், விமானத்தைத் தேட நாங்கள் மீண்டும் புத்துணர்வுடன் தயாராக உள்ளோம். விமானம் கண்டுபிடிக்கப்படும் வரையில், எங்களால் ஓய்வெடுக்க முடியாது. ஓய்வெடுக்கவும் மாட்டோம். விமானிகள் மற்றும் பயணிகளின் குடும்பத்தினரை நாங்கள் கைவிட்டு விட முடியாது. நாங்கள் மாயமான விமானத்தைக் கடவுளின் ஆசியுடன் கண்டுபிடிப்போம்"- என்று தெரிவித்துள்ளார்.

மலேசிய விமானம் மாயமாகி 100 நாள்கள் கடந்து விட்ட நிலையில் இன்னமும் தெளிவான தகவல்கள் எதுவும் வெளியாக வில்லை. அதேவேளை, மாயமான விமானம் குறித்து நியூ ஸிலாந்து நாட்டை சேர்ந்த எழுத்தாளர்கள் ஈவான் வில்சன் மற்றும் ஜெப் டெய்லர் இருவரும், வில்ரவில் வெளியிட உள்ள தமது புதிய புத்தகம் ஒன்றில், விமானம் விபத்தில் சிக்கவில்லை என தெரிவித்துள்ளனர். அது முன்பே திட்டமிடப்பட்டு, சரியாக கணிக்கப்பட்டு கடத்தப்பட்டு உள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.(ற)

## ரஷ்யத் தூதரகம் மீது உக்ரைனில் தாக்குதல்

கீவ், ஜூன் 17

உக்ரைனில் அமைந்துள்ள ரஷ்யத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்ய ஆதரவாளர்களால் உக்ரைன் இராணுவ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமைக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இது குறித்து தூதரக அதிகாரிகள் தெரிவிக்கையில்,

"உக்ரைனின் தலைநகர் கீவில் அந்நாட்டின் உயர் அதிகாரிகள் மற்றும் ரஷ்ய அதிகாரிகள் எரிவாயு விநியோகம் குறித்து பேச்சு நடத்திக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். அந்தக் கும்பலில் இருந்தவர்கள் ரஷ்யத் தூதரக ஜன்னலை அடித்து நொறுக்கியதுடன், சுவர்களில் பெற்றோல் குண்டுகளை வீசினர். தூதரகம் முன்பு நிறுத்தப்பட்டிருந்த அதிகாரிகளின் கார்களையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடி விட்டனர்" என்று தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ரஷ்யா, தூதரகம்மீது மர்மக்கும்பல் தாக்குதல் நடத்தியபோது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று குற்றம் சாட்டியுள்ளது. (ற)



இங்கிலாந்தின் குட்டி இளவரசர் ஜோர்ஜ் ஆர்வமுடன் கால்பந்தாட்டம் விளையாடியது அனைவரையும் ரசிக்க வைத்தது. இங்கிலாந்து நாட்டில் கிளவுசெஸ்டர்ஷைர் பகுதியில் சைரன்செஸ்டர் பார்க் போலோ என்ற சங்கத்தின் போலோ விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. போட்டியை பார்த்துரசிக்க வில்லியம்சின் மனைவி கேட், குட்டி இளவரசர் ஜோர்ஜுடன் வந்திருந்தார். அப்போது மைதானத்தில் இறங்கிய ஜோர்ஜ், அங்கிருந்த கால்பந்து ஒன்றை வைத்து கொண்டு ஆர்வத்துடன் விளையாடத் தொடங்கினான். அதை அங்கிருந்த அனைவரும் பார்த்து ரசித்தனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். வீட்டில் கலகலப்பான சூழல் ஏற்படும்.



**இடபம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு.



**மிதுனம்**: நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதம் ஏற்படும். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள்.



**கடகம்**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**சிங்கம்**: சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**கன்னி**: குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலை சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.



**துலாம்**: தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.



**விருச்சிகம்**: எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**தனுசு**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.



**மகரம்**: அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும். கோபத்தால் பகை உண்டாகும். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.



**கும்பம்**: எளிதாக முடிய வேண்டிய விடயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். அசதி, சோர்வு வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் ஓரளவு இலாபம் வரும். உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரக்கூடும்.



**மீனம்**: சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## நாளை

**ஆனி-04 புதன்கிழமை | 18.06.2014**

திதி: ஷஷ்டி மு.இ.08.23 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ.04.41 வரை

சுபநேரம்: 04.23-05.53 வரை
இராகுகாலம்: 11.53-01.23 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சுதந்திரமான ஆன்மா

'ஆன்மா ஒவ்வொன்றும் எங்கும் நிறைந்தது, என்பதைச் சாங்கியர்கள் ஒப்புக் கொண்டே தீரவேண்டும் என்பதை நாம் முன்பு கண்டோம். இனி மாற இயலாத நுட்பப் பொருளாக இருப்பதால், ஆன்மாவை எல்லைக்கு உட்படுத்தவே முடியாது. ஏனெனில்காலம்,இடம்,காரணம் என்பவையே எல்லைக்குக் காரணமானவை. ஆன்மா இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. எல்லைக்கு உட்பட வேண்டிய பொருள் இடம் என்பதில், அதாவது உடலில் இருக்க வேண்டும், உடல் இயற்கையிலேயே இருந்தாக வேண்டும். ஆன்மாவுக்கு உருவம் உண்டுஎன்றால் அது இயற்கையாகவே தான் இருக்க வேண்டும்; இயற்கைக்கு மாறுபட்ட ஒன்றாக இருக்க முடியாது. எனவே, ஆன்மா உருவம் இல்லாதது; உருவம் இல்லாத ஒன்றை இங்கோ அங்கோ, எங்கோ ஓர் இடத்தில் இருப்பதாகச் சொல்ல முடியாது. அது எங்கும் நிறைந்ததாகவே இருக்க வேண்டும். இதற்கு அப்பால் சாங்கிய ஆராய்ச்சி செல்லவில்லை.

'இந்த ஆராய்ச்சி முழுமையானதல்ல என்பதே இதற்கு எதிரான வேதாந்திகளின் வாதம். அவர்கள், இயற்கையும் முடிவற்றது. ஆன்மாவும் முடிவற்றது என்று கூறினால் முடிவற்ற பொருள்கள் இரண்டு இருப்பதாக ஆகிறது. எனவே, 'ஆன்மா எங்கும் நிறைந்தது' என்று காட்டப் பயன்படும் நியாயங்கள் இயற்கை எங்கும் நிறைந்தது என்று காட்டவும் பொருந்தும். எனவே, இயற்கையும் காலம், இடம், காரணம் மூன்றுக்கும் அப்பாற்பட்டதாகவே இருக்க வேண்டும். அப்படியானால், இயற்கையிடம் மாறுதலோ தோற்றங்களோ ஏற்பட முடியாது. இத்துடன் முடிவற்ற இரண்டு பொருள்கள் இருப்பதாக ஆகிறது, அது முடியவே முடியாதது.

# பூமிக்கு அடியில் கடல் நீரிலும் பார்க்க அதிக நீர் கண்டுபிடிப்பு



மொத்தக் கடல் நீரை விட 3 மடங்கு அதிக நீர் பூமிக்கு அடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாம் வாழும் பூமியில் நிலப்பரப்பை விட கடல் பகுதி 3 மடங்கு அதிகம் ஆகும். ஆனால் மொத்தக் கடல் நீரை விட 3 மடங்கு அதிக நீர் பூமிக்கு அடியில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புவியியலாளர் ஸ்டீவ் ஜேக்கப்சன் மற்றும் நியூமெக்சிகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நிலநடுக்க ஆய்வாளர் பிராண்ட்சன் சாமண்டிட் ஆகியோர் நடத்திய ஆய்வில், வட அமெரிக்காவில் பூமிக்கு அடியில் 400 மைல் ஆழத்தில் நீர் இருப்பதாகவும், ஆனால் அது வழக்கமான திரவ நிலையில் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

மேல் பகுதியில் உள்ள நீர் பூமிக்குள் இறங்கியதாலும், பூமியின் அடியில் உள்ள பாறைத் தட்டுகள் உருகியதன் காரணமாகவும் இந்த நீர்ப் பகுதி உருவாகி இருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 7 | 4 | 3 | | | 6 | |
| | 5 | | | | | | 7 | 1 |
| 6 | | | | | 9 | | 5 | |
| 5 | | | 9 | | | | 2 | |
| 1 | | 6 | 8 | | 3 | 5 | | 7 |
| | 9 | | | | 2 | | | 3 |
| | 3 | | 6 | | | | | 5 |
| 9 | 7 | | | | | | 3 | |
| | 6 | | | 8 | 7 | 2 | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 5 | 9 | 3 | 2 | 1 | 7 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 7 | 4 | 8 | 6 |
| 7 | 2 | 1 | 6 | 4 | 8 | 9 | 5 | 3 |
| 3 | 7 | 8 | 9 | 5 | 2 | 1 | 6 | 4 |
| 2 | 1 | 5 | 4 | 3 | 6 | 7 | 9 | 8 |
| 4 | 9 | 6 | 7 | 8 | 1 | 3 | 2 | 5 |
| 6 | 4 | 3 | 2 | 1 | 5 | 8 | 7 | 9 |
| 1 | 8 | 7 | 3 | 6 | 9 | 5 | 4 | 2 |
| 9 | 5 | 2 | 8 | 7 | 4 | 6 | 3 | 1 |

CMYK

## ஆஸியில் எம்மவர் வெளியீடான 'தெருத்தேங்காய்' குறும்படம்



சிட்னி, ஜூன் 17

'தெருத்தேங்காய்' என்ற தலைப்பிலான குறும்பட வெளியீட்டு நிகழ்வு ஆஸ்திரேலிய சிட்னி யாழ். நிகழ்வு மண்டபத்தில் நேற்றுமுன் தினம் மாலை 5 மணிக்கு ஈழும் பிறதர்ஸ் தயாரிப்பு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பல தமிழ் சமூக அமைப்புக்களைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். தெருத்தேங்காய் குறும்படத்தை யூ. டினேஷ் என்பவர் இயக்கியது மட்டு மல்லாமல் ஒளிப்பதிவு மற்றும் படத் தொகுப்பையும் அவரே செய்துள்ளார்.

திருமலை சுபா கதை, திரைக்கதை, வசனம் அமைக்க இக்குறும்படத்துக்கான இசையை கோபிதாஸ் நாராயணசாமி வழங்கியிருக்கிறார். முள்ளியவளை சுதர்சன், திருமலை சுபா, ஸ்ரீபாலன், இராஜலிங்கம், கௌதம், தனுன், ரிசி, துளசி, சம்பாடஸ் ஆகியோர் நடித் துள்ளனர். இந்தக் குறும்பட வெளியீட்டின் போது நடன நிகழ்வுகள் கவிதை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# 1,200 இலங்கையர்கள் மீண்டும் சொந்த நாட்டுக்கு

ஆஸ்திரேலியாவிலிருந்து கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் ஆயிரத்து 200 இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குநாடு கடத்தப்பட்டுள்ளதாக அந்தநாட்டின் அகதிகளுக்கான சபையின் தலைவர் பில்கிலென்டனின் தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினம் சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உலகளாவிய ரீதியாக உள்ள 4 கோடியே 37 லட்சம் அகதிகள் குறித்து சர்வதேசத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வாறான, நடவடிக்கைகள் மூலம் உலக சமூகத்திடம் கருணையையும் அனுதாபத்தையும் பெற முடியும் என்று ஐக்கிய நாடுகள் சபை நம்பிக்கை வெளியிட் டுள்ளது.

எப்படியிருப்பினும், ஆஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்து கோரிச் செல்லும் அகதிகள், போர் ஒன்றின் போதான எதிர்த்தரப்பினராகக் கணிக்கப்படுவதாகத் தொண்டு ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவர்கள், தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு, பயங்கரவாதிகள் போல நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாம்களில், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஏற்படும் அநீதியான சம்பவங்களுக்குத் அவர்களால் எதிர்ப்பு வெளியிடப்படும்போது, அவர்கள் கடுமையாக அடக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள் ளது.

அகதி அந்தஸ்து கோருபவர்களில் இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அகதிகள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலும், ஆஸ்திரேலிய அரசு அகதி அந்தஸ்து கோருபவர்களை நாடு கடத்துவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் அகதிகளுக்கான சபையின் தலைவர் பில் கிலென்டனின் கருத்துத் தெரிவிக்கையில்; கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் ஆயிரத்து 200 இலங்கைத் தமிழர்கள் இலங் கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (வ)

# முள்ளிவாய்க்கால் துயரம் சட்ட நடவடிக்கைக்குத் தயார்

### நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் தெரிவிப்பு

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் தாம் சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராவதாக நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு செவ்வியளித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் புதிய மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செய்ட் ராட் செய்ட் அல் ஹூசைன், இலங்கை தொடர்பில் உரிய முனைப்புக்களை மேற்கொள்வார் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண்கள் தொடர்பில்அவரிடம் இருந்து நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இலங்கை மாத்திரமல்ல ஏற்கெனவே ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற விசாரணைக்கு வடகொரியாவும் தமது ஒத்துழைப்பை வழங்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ளப்போகும் ஐக்கிய நாடுகளின் குழுவைப் பொறுத்த வரையில் அது இலங்கையில் வெளியில் இருந்து மேற்கொள்ளும் விசாரணையே நியாயமானதாக இருக்கும்.

ஏனெனில் இலங்கையில் நடைபெறும் எந்தவொரு விசாரணைக்கும் இலங்கை அரசு நிச்சயமாக முட்டுக்கட்டை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

போர்க்குற்ற விசாரணையின் போது சாட்சிகளுக்கான பாதுகாப்பு அவசியமாகும் இந்த நிலையில் இலங்கையில் வெளி யில் இருந்து தரப்படும் சாட்சியமென்றாலும் இலங்கை அரசால் குறித்த சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை கொண்டு வர வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)


## கண்ணீர் அஞ்சலி

**கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு**

**சிவஸ்ரீ சி. தர்மராசாக்குருக்கள்**

இந்தக் கொட்டில் (உடம்பில்) உயிர் இருக்கும் வரை விநாயகருக்கு பூப்போடத் தவறமாட்டேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தீர்கள். உங்கள் கொட்டில் இருந்து உயிர் பிரியும் நேரம் வரை தங்கள் பூசை அலங்காரத்தில் மகிழ்ந்த அரசடியான் தனது பாதாரவிந்தங்களில் உங்களை அணைத்துக் கொண்டார். நாங்கள் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட சமய அறிவுரை களை இனி யாரிடம் கேட்போம் எனக் கலங்கி நிற்கின்றோம். தங்கள் பாதாரவிந்தங்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் மறைவை யொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய அரசடி விநாயகரை வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
அரசடி விநாயகர் ஆலயம்,
கட்டுடை.

(C/14796) (10)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### திருமதி தமிழினி கேதாரகுமார்



கடந்த 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி தமிழினி கேதாரகுமார் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை (திதி: அபரபக்க சதுர்த்தி) காலை 6.00 மணியளவில் பாலியாற்றில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வு 17.06.2014 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னா ரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

A.P.C. வீதி,
துணுக்காய்.

குடும்பத்தினர்
மற்றும் கணவர் கேதா

(49031) (10)




இல. 518,
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சிவன் கோயில் அருகில்),

இல. 770,
கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெரு சந்தி),
யாழ்ப்பாணம்.

(10)

## விற்பனை ஊக்குவிப்பு வெளிக்கள உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன. அனுபவம் உள்ளவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மொழித் தேர்ச்சி விரும்பத்தக்கது.

| | |
|---|---|
| கல்வித்தகைமை | : க.பொ.த. உயர்தரம் |
| சாரதி அனுமதிப்பத்திரம் | : கட்டாயமானது |
| வயதெல்லை | : 20 வயது தொடக்கம் 30 வயதுவரை |

**விண்ணப்ப முடிவுத் திகதி : 25.06.2014**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

வி.இ. 4501,
C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/14795) (10)

## Receptionist Wanted

அலுவலகம் ஒன்றுக்கு வரவேற்பாளர்/ அலுவலக உதவியாளர் தேவை (பெண்கள் மட்டும்). நேர்முகத் தேர்வு எமது அலுவலகத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறுகிறது.

(சி.14793) (45.8.3)

Knowledge Universe
No.626/1/1, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 320 8342

## J.C.B வாடகைக்கு (பைக்கோ)



குறிப்பு:
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு : 077 7712 482
கதிரேசம்பிள்ளை கமலாதேவி
எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S. வீதி, சுன்னாகம்.

(49152) (10)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் திருப்பரங்கிரிநாதன்



யாழ். கோண்டாவில் நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருப்பரங்கிரிநாதன் கடந்த 10.06.2014 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்-சுந்தரம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், உஷாங்ககிரி, நிஷாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன் (இருபாலை, கட்டப்பிராய்), விசுவநாதன் (இருபாலை வீதி, கோண்டாவில்), சிவசண்முகநாதன் (நெட்டிலிப்பாய், கோண்டாவில்), அம்பிகாதேவி திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புஸ்பராணி, கலாறஜனி, சந்திரகலா, விமலேந்திரன், ஜெயமாலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா, வினோதினி, தருணி ஆகியோரின் பெரியப்பாவும், கிஷானி, பிறித்தி, நிஷி, நவீன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2014) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம் நேற்று (16.06.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2014) செவ்வாய்க்கிழமை வெள்ளவத்தையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மு. மாலவன் (மருமகன்) மக்கள் வங்கி.
071 427 0463

(49151) (10)

# கஞ்த்துறை மாவட்டத்தில் வெடித்தது இனக்கலவரம்

## வன்முறைக்கு வித்திட்டது பொது பல சேனா

கொழும்பு.ஜூன் 17

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அளுத்கம, பேருவெல நகரங்களில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சிங்கள பௌத்த அடிப்படை வாத பொதுபல சேனா அமைப்பு நடத்திய பேரணியை அடுத்து, முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களில், முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டதுடன், பலர் காயங்களுக்கும் உள்ளாகினர். இதையடுத்து, அளுத்கம, பேருவெல பகுதிகளில் நேற்று முன்தினம் தொடக்கம் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை குருந்துவத்த சிறி விஜயராம விகாரையின் பிரதம பிக்கு, வண அயகம விஜித தேரரும், அவரது சாரதியும், முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்து, நேற்று முன்தினம் மாலை அளுத்கம நகரில், பொதுபல சேனாவின் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அங்கு உரையாற்றிய, பொது பலசேனாவின் பொதுச்செயலர் கலகொடதத்த ஞானசார தேரர், முஸ்லிம்களுக்கு எதிரான கடுமையான கருத்துக்களை வெளியிட்டதுடன், அவர்களுடன் கூட்டணி வைத்துள்ள இலங்கை அரசையும் கண்டித்துள்ளார்.

எம்மை அவர்கள் இனவாதிகள், மத அடிப்படைவாதிகள் என்கிறார்கள். ஆம், நாங்கள் இனவாதிகள் தான். இந்த நாடு ஒரு சிங்கள பொலிஸ் துறையைக் கொண்டுள்ளது. ஒரு சிங்கள இராணுவத்தைக் கொண்டிருக்கிறது. சிங்களவர் ஒருவர் மீது கைவைத்தால், அதுவே அவர்கள் எல்லோருக்கும் முடிவாக இருக்கும் என்று ஆவேசமாகப் பேசினார். இந்தக் கூட்டத்தில், பெருந்தொகையான சிங்கள மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**கல்வீச்சுடன் தொடங்கியது போராட்டம்**

இந்தநிலையில், தர்கா நகரில், உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது, குண்டர் குழுவொன்று கல்வீசித் தாக்குதல் நடத்தியதாகவும், அதையடுத்தே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், சிங்களவர்கள் மீது கல்வீச்சு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

எனினும் இந்த வன்முறைகளை தொடக்கியது யார் என்பது குறித்து சரியான விவரங்கள் தெரியவரவில்லை.

எனினும், அண்மைக்காலமாக பதற்றம் நிலவிய அளுத்கமவில், பொதுபல சேனாவுக்கு பேரணி நடத்த பொலிஸ் துறை அனுமதி அளித்ததே இந்த வன்முறைக்கு முக்கிய காரணம் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**ஊரடங்கு உத்தரவு**

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவிய வன்முறைகளை அடுத்து, மாலை 6.45 மணியளவில், அளுத்கம நகரில் காவல்துறை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பின்னர், பேருவளையிலும் வன்முறைகள் வெடித்ததால், அங்கும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அளுத்கம நகருக்கு உடனடியாக வரவழைக்கப்பட்ட 1,200 பொலிஸார் மற்றும் 400 சிறப்பு அதிரடிப்படையினர், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வரமுயன்றனர். எனினும், நிலைமையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. முதலில், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும், குண்டர்களைக் கலைக்க மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்க வில்லை.



போராட்டம் இடம்பெற்றபோது....



பாதுகாப்புப் படையினர்

**துப்பாக்கிச் சூட்டில் மூவர் சாவு**

இந்த நிலையில் நேற்று முன்தினம் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். வல்பிட்டிய பள்ளிவாசலுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர், காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், பொலிஸார் இதுவரை அவற்றை உறுதிப்படுத்தவில்லை. இந்த வன்முறைகளின் போது, முஸ்லிம்களின் கடைகள், வீடுகள், பள்ளிவாசல்கள், வாகனங்கள் என்பன தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன. இதனால், நேற்றுமுன் தினம் அளுத்கம நகரில் இருந்து பெரும் புகை மண்டலம் மேல் எழுந்துள்ளது.

**பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் தஞ்சம்**

முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளிவாசல்கள் பல தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அவர்கள் அச்சத்தில், வீடுகளை விட்டு வெளியேறி, பள்ளிவாசல்களில் தஞ்சமடைந்துள்ளனர். எனினும், முஸ்லிம்களை வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று பொலிஸார் கேட்டுள்ளனர். நாடெங்கும் உள்ள முஸ்லிம் மத வழிபாட்டு இடங்களில் பொலிஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். தர்க்கா நகரில் முஸ்லிம்களின் 10 கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. கொட்டப்பிட்டிய, மீரிபென்ன, அதிகாரி கொட பகுதிகளில் உள்ள பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தர்கா நகரில் இடம்பெற்ற வன்முறைகளில் முஸ்லிம்கள் பலர் காயமுற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, நேற்றுமுன் தினம் மாலை தொடக்கம் நடந்து வரும் வன்முறைகளை படம் பிடித்த ஊடகவியலாளர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டு, அவர்களின், ஒளிப்படக்கருவிகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பேருவெல நகரில் நடத்தப்பட்ட பேரணியை அடுத்து, அங்கும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அளுத்கம நகரில், தொலைபேசிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

**டுவிட்டரில் ஜனாதிபதி**

அதேவேளை, அளுத்கம நகரில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிவியாவில் இருந்து டுவிட்டரில் வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளார். எவரும் சட்டத்தை தமது கையில் எடுத்துக் கொள்ள அரசு அனுமதிக்காது என்றும் அவர் கூறியுள்ளார். (ச)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



திருமதி நவமணி சந்திரசேகரம்

(Maths Trained, B.Ed, SLPS-I)



கல்விக்கு கலங்கரை விளக்கமாய்
கடமையிலே கண்ணியமாய்
காலமெல்லாம் உழைத்து
உண்மை, நேர்மை, நியாயம்
என்றும் அழியாது என்பதை
இவ்வுலகிற்கு உணர்த்தி
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில்
அதிபராகக் கடமையேற்ற உங்களை
பாசமுடன் வாழ்த்துகின்றோம்.

புலம்பெயர் மகன்மார்

நா.ரவி B.Sc (Computer Science- Canada).
கி.கிருஷாந் Ph.D Student Electrical and Computer Engineering, MC Master University-Canada.
செ.சுசிந்தன் B.Sc (Eng)-Canada.
சா.சேயோன் A-2, London.

Best Wishes

(49088)(10.6.3)



### பெயர் மாற்றம்

பலாலி மத்தி, வசாவிளானைச் சேர்ந்த
**முத்துக்குமார் முகுந்தநாயகரூபி**
ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை
**முத்துக்குமார் முகுந்தா**
என பெயர் மாற்றம் செய்வதோடு, இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(49089) (12.3.6) முத்துக்குமார் முகுந்தா

### விற்பனைக்கு

Heidelberg (K.O.R.A)
ஓப் செட் மெஷின் 2 சிலின்டர்கள் உண்டு
Size: 22x15 - 12x18
Contact No: 0753209225, 0785180710

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்பு: 077 356 4245 (49085) (7.6.3)



### வேண்டுகோள்

**பன்னையம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம், புலோலி வடக்கு, பருத்தித்துறை.**

மேற்படி ஆலயத்தின் மீது சட்டப்படி உரிமை கொண்டாடுபவர்கள் யாராவது இருந்தால் இந்த விளம்பரத் திகதியிலிருந்து (17.06.2014) 15நாள்களுக்குள் (02.07.2014) நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ, கடிதமூலமோ ஆலய தர்மபரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிநிற்கின்றோம். இந்த கோயிலின் சட்டப்படி உரிமையை நிலை நாட்டுவதற்காகவே இந்த வேண்டுகோளை விடுகின்றோம்.

விலாசம்:
த.சத்தியமோகன்,
பன்னையம்பதி,
பருத்தித்துறை.

த.சத்தியமோகன், தலைவர்,
தர்மபரிபாலனசபை,
பன்னையம்பதி வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

T.P.No: 077 509 8965 (45579) (12.3.6)

### லொறி விற்பனைக்கு

"அசோக்லேலண்ட்" 16 × 13 "ரஸ்க்கர் சுப்பர்"
21' "கன்ரனர் பொக்ஸ்", உற்பத்தி - வருடம் - 2007
வாகன இல. L G XXXX பார்வையிடும் இடம் கிளிநொச்சி

தொடர்பு: 077 740 0800



## தென்மராட்சியில் சிறுவர்களை மகிழ்வூட்டல் நிகழ்வு

வரணி, ஜூன் 17

சிறுவர்களை ஒன்றுகூட்டி அவர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தும் மகிழ்ச்சி ஊட்டும் நிகழ்வு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் 19 கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறுவர் கழகங்களை ஊக்குவித்து அவர்களை ஒன்றுபடுத்தி அரவணைக்கும் ஒன்றுகூடல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளியில் இடம்பெற்றது.

குறித்த நிறுவனத்தின் வளவாளர்கள் கொண்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு விநோதமான நிகழ்வுகளை நடித்துக்காட்டி சிறுவர்களை மகிழ்வித்து ஆற்றுப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக குறித்த நிறுவனத்தினர் மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்பள்ளிகளில் இவ்வாறான நிகழ்வுகளைத் தொடர்ந்தும் நடத்த உள்ளதாக நிறுவனத்தின் வளவாளர் ஒருவர் தெரிவித்தார். (வ-122)

# பகிரங்கமாக ஒப்பந்தம் வழங்காவிடில் குழப்பமானதொரு நிலை உருவாகலாம்

## காற்றின் உதவியுடனான மின்சார உற்பத்தியில்

கொழும்பு, ஜூன் 17

காற்றின் உதவியுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டங்களை பகிரங்க ஏலம் கோரப்படாது உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதால் குழப்பமான நிலையொன்று உருவாகலாமென இந்தத் துறைசார் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பயன்பாட்டிலுள்ள வீதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் காற்றின் உதவியுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு விநியோகிக்க வேண்டிய நிலையில் இலங்கை மின்சாரசபை உள்ளது. இதனால் ஏற்கனவே அதிக மின் கட்டணங்களைச் செலுத்திவரும் பாவனையாளர்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

**125 மெஹாவோற்ஸ் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டமும் பகிரங்க ஏலம் மூலமாகவே விடப்பட வேண்டு மெனவும் இல்லாவிட்டால் அரசியல்வாதிகளுடன் தொடர்புகளை வைத்திருப்ப வர்களே நன்மையடை வார்கள் என்றும் வல்லுநர் கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

இந்த நிலையில் மின் வலு எரிசக்தி அமைச்சர் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். அதில் 375 மெஹாவோற்ஸ் மின்சாரத்தை காற்றின் உதவியுடன் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி நிலையங்களை மன்னாரில் அமைப்பது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

இதில் முதலாவது திட்டம் இலங்கை மின்சார சபை 100 மெஹாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும்.

இரண்டாவதாக பகிரங்க ஏலம் கோரப்படுவதன் மூலமாக 150 மெஹாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும்.

மூன்றாவதாக 125 மெஹாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு முதலில் வருபவர்களுக்கு முதற் சந்தர்ப்பம் என்ற வகையில் பகிரங்க ஏலம் கோரப்படாது உள்ளூர் முதலீட்டாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதாகும்.

இந்த நிலையில் நிலக்கரி மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் காற்றின் உதவியுடன் உற்பத்தி செய்வதைவிட மிகவும் மலிவானதாகவே காணப்படுகின்றது.

ஆகவே கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்றால் 125 மெஹாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டமும் பகிரங்க ஏலம் மூலமாகவே விடப்பட வேண்டுமெனவும் இல்லாவிட்டால் அரசியல்வாதிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பவர்களே நன்மையடைவார்கள் என்றும் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

காற்றின் மூலமாக மின் வளத்தை உற்பத்தி செய்வதில் புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களை விட மன்னார் சிறப்பான இடத்தை வகிக்குமெனவும் கூறப்பட்டுள்ளது. (க)

## தேவன்துறை கண்ணகை அம்மன் திருவிழாவுக்குச் செல்ல அனுமதி

### ஆயினும் 500 பேரே செல்லலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகை அம்மன் கோயிலில் ஒரு நாள் மாத்திரம் வழிபாடுகளை மேற்கொள்வதற்குப் படைத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் திருவிழாவுக்குச் செல்வதற்குப் பொதுமக்கள் விடுத்திருந்த கோரிக்கையை அடுத்தே படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

மயிலிட்டிப் பிரதேச ஆலயங்களின் திருவிழாவுக்குச் செல்வதற்கு கடந்த ஆண்டும் இதே போன்று பொதுமக்களால் அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு அனுமதி வழங்கிய படையினர் பின்னர் 200 பேர் மாத்திரமே உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் செல்ல முடியும் என்று அறிவித்தனர். அதனால் குறித்த திருவிழா நாளில் பொதுமக்களால் வழிபாடு செய்வதற்குச் செல்ல முடியவில்லை.

இந்த நிலையிலேயே இந்த ஆண்டும் திருவிழா தொடர்பில் பொதுமக்களால் இராணுவத்தினரிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது. எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழிபாட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு பொதுமக்கள் படையினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆயிரம் பேர் வரையில் வழிபாட்டுக்குச் செல்வதற்கு அனுமதி கோரியிருந்த நிலையில், 500 பேர் மாத்திரமே வழிபாட்டுக்குச் செல்லலாம் என்று இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். (ற-5)



குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தைக்கு வடக்குப் புறத்தில் பாங்ஷால் வீதியினூடாகச் செல்லும் கழிவுநீர் வடிகால் வீதியின் அருகில் உடைந்த நிலையில் காணப்படுகிறது. இதன் காரணமாக இந்த வடிகாலின் உட்புறத்தில் அமைந்துள்ள கழிவுகளால் துர்நாற்றம் வீசுகிறது. வடிகாலின் உடைவு பெரிதாகி போக்குவரத்து பாதிப்படைவதற்கு முன்னர் அதனைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாநகரசபையை பொது மக்கள் கோரியுள்ளனர். (வ-51)

## குழந்தை அணிந்திருந்த சங்கிலி மாயம்

மினி பஸ்ஸினுள் சன நெருக்கடியில் குழந்தையுடன் பஸ்ஸுக்குள் ஏறிய பெண் சிறிது நேரத்தின்பின் பார்த்த போது குழந்தை அணிந்திருந்த தங்கச்சங்கிலி திருடப்பட்டுள்ளதை உணர்ந்து கூக்குரலிட்டார். இந்தச் சம்பவம் நேற்று பகல் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

அவ்வேளையில் பஸ் நிலையப் பகுதியில் காவல் கடமையில் இருந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பயணிகள் அனைவரையும் சோதனையிட்டும் சங்கிலி கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்குச் சென்ற மினிபஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்ட போதே இந்தத் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (வ-9)

# வவுனியா பிரதேச சபை கலை இலக்கிய போட்டி முடிவுகள்

வவுனியா, ஜூன் 17

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

**பாலர் பிரிவு**
**மொழி மூலம் தமிழ்**
**கையெழுத்துப் போட்டி**

முதலாம் இடம்- தவராசா பைரவி (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.), இரண்டாம் இடம் - தருமராசா பிருத்தி (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.). மூன்றாம் இடம் - தெய்வேந்திர ராஜா கவிஸ்னா (வ/இறம்பைக் குளம் ம.ம.வி.). தி.உருத்திரா (வ.நெளுக்குளம் கலைமகள் ம.வி.)

**கவிதை பாடல் போட்டி**

முதலாம் இடம் - கார்த்திகேயன் ஷயனிகா (வ/தமிழ் மத்திய ம.வி.). இரண்டாம் இடம் - விமலராஜா கீதவர்ஷன் (வ/தமிழ் மத்திய ம.வி.). மூன்றாம் இடம் - சுரேஸ் கர்னி (வ/இறம்பைக் குளம் ம.ம.வி.), பரந்தாமன் ஹரிணி (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.)

**கனிஷ்ட பிரிவு**
**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம் - தர்ஷா சிவபாலராஜா (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.). இரண்டாம் இடம் - விசாகி சிவகுமார் (வ/தமிழ் மத்திய ம.வி.). மூன்றாம் இடம் - இரவீந்திரன் பவகீத்தன் (வ/தமிழ் மத்திய ம.வி.).

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம் -வசந்தகுமார் ஜதுர்சன் (வ/தமிழ் மத்திய ம.வி.). இரண்டாம் இடம் - மயூரி பேரின்பநாயகம் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.), மூன்றாம் இடம் - ஆரபி தசாவதாரன் சர்மா (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.)

**கவிதை பாடல் போட்டி**

முதலாம் இடம் - அஸ்வினி முருகேசப்பிள்ளை (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.), இரண்டாம் இடம் - ஹர்னிகா ரவிசங்கர் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.). மூன்றாம் இடம் - ஜெயச் சந்திரன் வித்தியாதர் (வ/தமிழ் மத்திய ம.வி.), ரவி சங்கர் குகராஜ் (வ/தமிழ் மத்திய ம.வி.)

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம் - ஆன் அஞ்சலா அருள்தாஸ் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.), இரண்டாம் இடம்- மிதுஷா செபமாலை (வ/பூவரசன் குளம் ம.வி.). மூன்றாம் இடம் - சயந்தினி ஆறுமுகலிங்கம் (வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி.)

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம் - வர்ணிகா சண்முகநாதன் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.), இரண்டாம் இடம் - வினோஜினி கிருஷ்ணகுமார் (வ/பூவரசன் குளம் ம.வி.). மூன்றாம் இடம் - துவேந்திகா விக்னேஸ்வரன் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.).

**கவிதைப் பாடல் போட்டி**

முதலாம் இடம்- சிபிஷா நவரட்ணம் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.). இரண்டாம் இடம் - கேதுஜா இராசரட்ணம் (வ/இறம்பைக்குளம் ம.ம.வி.)

**திறந்த பிரிவு**
**பாடல் ஆக்கப் போட்டி**

முதலாம் இடம் - நாகலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம் வவுனியா). இரண்டாம் இடம் - தம்பித்துரை ஜங்கரன் (குருமன்காடு, வவுனியா). மூன்றாம் இடம்-மைதிலி தயாபரன் (வைரவப் புளியங்குளம், வவுனியா)

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

முதலாம் இடம் - ஞா.ஞான லோகேஸ்வரி (வேப்பங்குளம், வவுனியா). இரண்டாம் இடம்- மாணிக்கம் ஜெகன் (கற்குழி, வவுனியா). மூன்றாம் இடம் - நர்கலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம், வவுனியா)

**இலக்கிய விவரணப் போட்டி**

முதலாம் இடம் - தர்மினி பத்மநாதன் (கண்டி வீதி, வவுனியா)
இரண்டாம் இடம் - மாணிக்கம் ஜெகன் (கற்குழி, வவுனியா)

**சிரேஷ்ட பிரிவு - சிறுகதைப் போட்டி**

முதலாம் இடம் - தம்பித்துரை ஜங்கரன் (குருமன்காடு, வவுனியா). இரண்டாம் இடம் - தர்மினி பத்மநாதன் (கண்டி வீதி, வவுனியா). மூன்றாம் இடம் -மைதிலி தயாபரன் (வைரவப் புளியங்குளம், வவுனியா) மாணிக்கம் ஜெகன் (கற்குழி, வவுனியா)

**கவிதை ஆக்கப் போட்டி**

முதலாம் இடம் - தம்பித்துரை ஜங்கரன் (குருமன்காடு, வவுனியா). இரண்டாம் இடம் - ச.சுகந்தினி (வெளிக்குளம், வவுனியா). மூன் றாம் இடம் - நாகலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம், வவுனியா)

**சிறுவர் கதை ஆக்கப் போட்டி**

முதலாம் இடம் - நாகலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம், வவுனியா). இரண்டாம் இடம் - எஸ்.எச்.எச்.நஜீஹா (வ/தேசிய கல்வியியற் கல்லூரி). மூன்றாம் இடம் - ரி.அதிரூபன் (வ/தேசிய கல்வியியற் கல்லூரி).

**மொழி மூலம் - ஆங்கிலம்**
**கவிதை ஆக்கப் போட்டி**

முதலாம் இடம் - நாகலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம், வவுனியா)

**சிறுகதைப் போட்டி**

முதலாம் இடம் - நாகலிங்கம் தியாகராசா (திருநாவற்குளம், வவுனியா)

**மொழி மூலம் - சிங்களம்**
**கவிதைப் போட்டி**

முதலாம் இடம் - திருமதி சந்திமா குமாரி திசாநாயக்க (தேக்கவத்தை கண்டி வீதி, வவுனியா)

# மானியம் வழங்காததால் இலங்கை அகதிகள் சிரமத்தில்

சென்னை, ஜுன் 17
தோப்புக்கொல்லை இலங்கை அகதிகள் முகாமில் மாதாந்த மானியம் வழங்காததால் பொது மக்கள் அவதியுறுவதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் தோப்புக் கொல்லை இலங்கை அகதிகள் முகாம் 1990 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
தற்போது 420 குடும்பங்களைச் சேர்ந்த 1,700 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கு வசித்து வருகின்றனர். அவர்களுக்கு தமிழக அரசு சார்பில் பல்வேறு உதவித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன.
இந்தத் திட்டங்களில் ஒன்றான மானியம் வழங்குதலில் குடும்பத் தலைவருக்கு 1,000 ரூபாவும் 12 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு 750 ரூபாவும் அதற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாவும் (இந்திய ரூபாய்) வருவாய்த் துறை அலுவலர்கள் மூலம் வழங்கப் பட்டு வருகிறது.
முன்னர் இந்த மானியத்தை மாத முதல் அல்லது 2 ஆம் திகதியில் வழங்கி வந்தனர். நாளடைவில் 5 ஆம் திகதி வரை தள்ளிபோய் தற்போது 14 ஆம் திகதி வரை கூட அது வழங்கப்படவில்லை.
இதனால் தனியாக உள்ள வயது முதிர்ந்தவர்கள் மானியமும் கிடைக்கவில்லை மாதாந்த உதவித்தொகையும் கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தில் உள்ளனர் என்று தமிழக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பள்ளிகளுள்

நடக்கலாம் என்ற அச்சம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்றபோதிலும் அதில் எதுவித உண்மையும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.
இந்தப் பேரவலம் தொடர்பான உண்மை நிலையை அறிவதற்காக நாம் மேற்படி இடங்களுக்குச் செல்ல முற்பட்டபோது பாதுகாப்புப் படை யினரால் தடுத்து நிறுத்தப்பட்டோம். இதன் காரணமாக களுத்துறையில் உள்ள சில சகோதரர்களின் உதவியுடன் பள்ளிவாசல்களில் தஞ்சம் புகுந்திருக்கும் சகோதரர்கள் சிலரை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்ட போது அவர்களின் அவலங்கள்ள ஓரளவு எம்மால் அறிய முடிந்தது.
தர்ஹா நகர் சினாவத்தை எனும் இடத்தில் உள்ள பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்துள்ள சில சகோதரர்களைத் தொடர்பு கொண்டபோது அவர்கள் அங்குள்ள பயங்கரமான சூழலை விளக்கிக் கூறினார்கள்.
அந்தவகையில் முஹம்மத் சலீம் என்ற சகோதரர் கூறுகையில்;
"தர்ஹா நகரில் உள்ள பல பள்ளிவாசல்களில் ஒட்டு மொத்த முஸ்லிம்களும் தஞ்சம் புகுந்துள்ளனர். ஓரிரு பொலிஸாரும், ஓரிரு விசேட அதிரடிப் படையினரும் எமது பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். இது உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அல்ல. பேரினவாதிகள் கூட்டம் கூட்டமாக வந்து எம்மைத் தாக்குகின்றனர். பாதுகாப்புப் படையினரின் முன்னிலையில்தான் இது நடக்கின்றது. பள்ளிவாசலில் இருக்கும் எம்மைத் தாக்கவந்தால் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ள ஓரிரு பொலிஸாரால் எதுவும் செய்யமுடியாது; எம்மாலும் எதுவும் செய்ய முடியாது. செத்து மடியவேண்டியதுதான். அல்லாஹ்வே துணை - என்றார்.
அதே பள்ளியில் தஞ்சம் புகுந்துள்ள மற்றுமொரு சகோதரர் கூறுகையில்;
எமது சகோதரர்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுள் பெண் ஒருவரும் அடங்குகிறார். 80இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது. அதேவேளை, பல இளைஞர்களைக் காணவில்லை என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.
இதுவரைக்கும் இந்தப் பள்ளிவாசலில் இருக்கும் எம்மை வந்து பார்ப்பதற்கு - எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. எம்மைப் பார்க்க வருபவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்துகின்றனர். உண்மை நிலைமை வெளியே போய் விடக்கூடாது என்பதற்காக பொலிஸார் ஊடகங்கள் வருவதற்குத் தடைவிதித்துள்ளனர். எந்தவொரு அரசியல்வாதியும் எம்மை வந்து பார்க்கவில்லை. எமது நிலைமை படுமோசமாக உள்ளது. நாம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கின்றோம் - என்றார்.
நாசர் என்ற மற்றுமொரு சகோதரர் கூறுகையில்,
எங்களது கண்முன்னே எமது வீடுகள் உடைக்கப்பட்டு - தீ வைக்கப்பட்டு சொத்துகள் சூறையாடப்பட்டன. வெளியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் தீ மூட்டப்பட்டன. எவற்றையும் எம்மால் தடுத்துநிறுத்த முடியவில்லை.
எம்மைப் பாதுகாக்க எம்மிடம் ஆயுதங்கள் இல்லை. நாம் இந்த அரசையே நம்பியிருந்தோம். இறந்த நால்வரில் இருவர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன்மூலம் விசேட அதிரடிப் படையினர் பேரினவாதிகளின் பக்கமே நிற்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. உண்மையில், பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இல்லையென்றால் நாம் சமாளித்திருப்போம். அவர்கள் பேரினவாதிகளுக்குத் துணை நிற்பதால் தான் எமக்கு இவ்வளவு சேதம் ஏற்பட்டது - என்றார்.
இவ்வாறு பல சகோதரர்கள் தொலைபேசி வாயிலாக நடந்த சம்பவத்தை விவரித்தனர்.
கொல்லப்பட்டவர்களின் ஜனாஸா நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு களுத்துறை, கட்டுக்குருந்தை பெரிய பள்ளிவாசலுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு குளிப்பாட்டி கபனிடப்பட்டன. பிறகு அளுத்கமவிற்கு விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் கொண்டுசெல்லப் பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டன. (ற-சி)

### அமெரிக்கா

சட்ட ஒழுங்கைப் பேணி பொது மக்களின் உயிர்களையும், வழிபாட்டு தலங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்குமாறு இலங்கை அரசிடம் கேட்டுக்கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதேவேளை- தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வன்முறைகளை தவிர்த்து, பொறுமை காத்து, சட்ட ஆட்சியை மதித்து நடக்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்வதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ற)

### எமது நிலம்

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மு.ப. 10.30 மணி வரையில் இடம்பெற்றது.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 'எமது காணி எமக்கு வேண்டும்', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'வளலாய் - மயிலிட்டி - கே.கே.எஸ். எமக்கு வேண்டும்', 'ஆக்கிரமிக்காதே ஆக்கிரமிக்காதே எமது நிலத்தை ஆக்கிரமிக்காதே', 'ஆக்கிரமிப்பு இராணுவம் எமக்கு வேண்டாம்', 'எமது காணியில் உனக்கென்ன வேலை', 'வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு', 'அடக்காதே அடக்காதே தமிழர்களை அடக்காதே', 'வருத்தாதே வருத்தாதே தமிழர்களை வருத்தாதே', 'வாழவிடு வாழவிடு தமிழர்களை வாழவிடு' என்ற கோஷங்களை எழுப்பித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு, 'எமது நிலம் எமது உரிமை', 'தமிழர் வயல்களில் இராணுவம் பயிர்ச் செய்கை', 'அரசு தமிழர்களுக்கு காட்டுவது சுடுகாடு', 'எங்கு வாழ வேண்டும் என்பதை இராணுவம் தீர்மானிக்க முடியாது' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.
இரு மணி நேரம் நடந்த போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி, பிரதேச செயலாளர் ம.பிரதீபனிடம், வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் உள்ளிட்டோர் மனுக் கையளித்தனர்.
இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன், திருமதி அனந்தி சசிதரன், வே.சிவயோகன், எம்.கே.சிவாஜிலிங்கம், க.சர்வேஸ்வரன் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் சி.பாஸ்கரா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ற-5)

### தமிழர்கள்

மக்கள் இங்கே குடியமர்வதை அனுமதிக்க முடியாது" - என்று தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்;
"யாழ். குடாநாட்டிலும் சிங்களக் குடியேற்றத்தை அமைச்சர் விமல் வீரவன்ஸ உறுதிப் படுத்தியிருக்கின்றார். சட்டவிரோதமாக இங்கு குடியேறிய சிங்கள மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கி அவற்றை சட்டபூர்வமாக்குகின்ற நீங்கள், இங்குள்ள எங்களுடைய மக்களை சொந்த நிலங்களிலிருந்து துரத்தியடித்திருக்கின்றீர்கள். இதற்கு அமைச்சரவையில் இருக்கின்ற ஈ.பி.டி.பியின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் துணை நின்றமை ஈனத்தனமான செயல். அரசின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து மக்கள் ஆர்ப்பரித்து வீதிக்கு வர வேண்டும்" - என்று தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கருத்துத் தெரிவிக்கையில், "சொந்தக் காணியில் குடியமர முடியாமல் எமது மக்கள் போராடுகின்ற நிலையில், சிங்கள மக்களை வலுக் கட்டாயமாக இங்கு கொண்டு வந்து குடியேற்றுகின்றார்கள்"- என்று குறிப்பிட்டார். (ற-5)

### குடியமர்த்துவதற்கு

கோரி, கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் கூறும்போது,
'வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நாம் 25 ஆண்டுகளாகி விட்டது. இன்னமும் எமது சொந்த நிலங்களுக்கு செல்ல முடியாதவர்களாக இருக்கின்றோம். எமது வாழிடங்களில் குடியமர இறைவன்தான் வழிகாட்ட வேண்டும் என்று நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) துர்க்கையம்மன் கோயிலில் வழிபாடும் நடத்தினோம்.
மக்கள் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தினாலேயே எமது நிலங்களுக்கு நாம் செல்ல முடியும். மீளக்குடியமர்ந்த மக்களும் எங்களுடன் சேர்ந்து போராட வேண்டும். சகல மக்களும் எமது நிலங்களுக்கு நாம் செல்ல வேண்டும் என்ற வீராப்புடன் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
எமக்கு மாற்றிடங்கள் வேண்டாம். எம்மை எமது சொந்த இடங்களிலேயே குடியமர்த்துங்கள். எம்மை வலி.வடக்கில் குடியமர்த்தாமல் விட்டால் நாம் விரைவில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வெள்ளைக் கொடியுடன் போக வேண்டிவரும் - என்று அவர் தெரிவித்தார்.
போராட்டத்தில் கலந்து கொண்ட, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,
"வளலாய் மக்கள் தமது காணிகளுக்கு உறுதி வைத்திருக்கின்றார்கள். அவர்களது காணிகளில் வேறு எவரையும் குடியமர்த்த முடியாது. அவர்களின் காணிகளில் வலி.வடக்கு மக்களை குடியமர்த்த முன்னெடுக்கும் முயற்சிகள் என்பது கூட, இரு தரப்பு தமிழ் மக்களையும் முரண்பாடு ஏற்படுத்தும் முயற்சியே. இதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும் - என்று தெரிவித்தார்.
மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறுகையில்,
"6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பரப்பை வலி.வடக்கில் சுவீகரித்தது மாத்திரமல்லாமல், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் காணிகளை இராணுவத்தினரின் குடியேற்றங்கள் அமைப்பதற்காகவும், சிங்களக் குடியேற்றங்கள் அமைப்பதற்காகவும் சுவீகரித்துள்ளனர். இஸ்ரேலின் யூதக் குடியேற்றத்தைக் காட்டிலும் மிக மோசமான குடியேற்றங்களையே இலங்கை அரசு செய்து கொண்டுள்ளது."- என்று குறிப்பிட்டார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,
"இந்தப் போராட்டம் சரியானதொரு வேளையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் சபையின் 26 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான விவாதம் முன்வைக்கப்பட்ட வேளையில் இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எமது நிலங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, அந்த நிலங்களில் சிங்கள இராணுவத்தினரும் அவரது குடும்பத்தினரும் வந்து உல்லாசமாக தங்கி விட்டுச் செல்கின்றனர். இலங்கை அரசு தனது அரச இயந்திரத்தை பயன்படுத்தி, அரச அதிபர்கள் ஊடாக இங்கு மீள்குடியமர்வு பூர்த்தியடைந்து விட்டது என்று உலகுக்குச் சொல்லி வந்தது. ஆனால் மக்கள் போராட்டங்கள் மூலமாக அவை பொய்யாக்கப்பட்டதால், தற்போது இங்கு இன்னமும் குறித்த தொகுதி மக்கள் குடியேற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கின்றது. எனவே மக்கள் போராட்டங்கள் மூலமாகத்தான் நாம் சொந்த இடங்களில் குடியமர முடியும்"- என்று தெரிவித்தார்.(ற-5)

### இடம்பெயர்ந்த

பெற்றுள்ளது.
யாழ். நகரில் உள்ள சிவில் பாதுகாப்புத் தலைமையகத்தில் நேற்றுமுற்பகல் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் செய்தியாளர் சந்திப் பில் பலாலி படைத்தலைமையக பிரதான அதிகாரி பிரிகேடியர் வீரமன் மற்றும் மேஜர் ஜெனரல் அஜித்காரிய கரவல உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.
இடம்பெயர்ந்த மக்கள் தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறு கோரி நேற்றையதினம் கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அவர்களது இடத்தில் மீள்குடியேற்றினால், உங்கள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு மக்களிடம் நீங்கள் அழைப்பு விடுக்கும்போது அவர்கள் சந்தோஷமாக வரக் கூடுமே என்று இராணுவத்தினரிடம் கேட்கப்பட்டது.
அதற்குப் பதிலளித்த அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் காணிகள் வழங்கப்படும். அதற்கான திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றனர். அவர்களுக்குச் சொந்தக் காணிகள் வழங்கப் படுமா? என்று கேட்கப்பட்ட போது, அவர்கள் உரிய பதில் அளிக்கவில்லை.
இந்தச் சந்திப்பு தலைமையகம் ஆரம்பித்து 18 வருடங்கள் நிறைவடைவதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளைப் பற்றி அறிவிப்பதே. உங்களுக்கான கேள்விக்கு மற்றொருநாள் நடத்தப் படும் சந்திப்பில் பதிலளிக்கப் படும்என்று அவர்கள் கூறினர்.
தமது ஆண்டு விழா தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்
"1996 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதி பலாலி படைத் தலைமையகம் ஆரம்பிக்கப் பட்டது. நாளைமறுதினம் 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத்தினரால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் இராணுவத்தினர் சிரமதானம், உதவிப் பொருள்கள் வழங்கல் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் மின்சார திருத்த வேலை உள்ளிட்ட வேலைகளையும் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சிவில் பாதுகாப்பில் இணைந்த பெண்களை வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.
இம்முறை மக்களுடன் இணைந்ததாக தாம் 18 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளோம். இராணுவத்தினருக்கு எல்லா வசதிகளும் உள்ளன. தமது செயற்பாடுகளை பொது மக்கள் உணரக் கூடியவகையில் இந்த நிகழ்வைக் கொண்டாடுவதே எமது நோக்கம்"- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

### கோண்டாவிலில்

காயம் ஏற்படவே அவர்களைத் துரத்திச் சென்ற உறவினர்கள் அவர்களில் இருவரைப் பிடித்துள்ளனர். ஏனையோர் தப்பி விட்டனர்.
தப்பிச் சென்றவர்கள் மேலும் பலருடன் கத்திகள், பொல்லுகள் சகிதம் வந்து ரவீந்திரனை வாளால் வெட்டியுள்ளனர். அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது சகோதரனும் சகோதரியும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் அங்கு பிடித்துவைத்திருந்த இரு இளைஞர்களையும் மீட்டுக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.
ரவீந்திரன் செந்தூரன் (வயது-23), ரவீந்திரன் இலக்கியா (வயது-26) ஆகியோரே காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த எம்.நிரோசன் (வயது-23) மற்றும் றொபின்ராஜா (வயது-20) ஆகியோரே சுகிர்தனின் உறவினர்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்று கூறப்படுவதுடன், தற்போது நிரோசன் குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். உயிரிழந்த இளைஞரின் சடலம் தற்போது உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற-86-78-106)

### இனவன்முறை

மதச் சிறுபான்மையினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்." என்று தெரிவித்துள்ள அவர், இந்தக் கலவரம் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் பரவிடக் கூடும் என்பது குறித்து தான் ஆழ்ந்த கவலை அடைகின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
நாட்டில் வன்முறைகளைத் தூண்டும் வகையான எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்த இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்து சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். இருமதத் தலைவர்கள், அரசியல் கட்சிகள், பொதுமக்களுக்கும் இதனூடாக உறுதியான செய்தியை அரசு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (உ)



பாய்ந்து பந்தைப் பிடிக்கும் கோசில்லா

# பொஸ்னியா ஆட்டம் சிறப்பு ஆனால் ஆர்ஜென்ரீனா வெற்றி



பொஸ்னிய வீரர் மிஸிமோவிக்கிடம் இருந்து பந்தைப் பறிக்க முயற்சிக்கிறார் ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்ஸி

## கோசில்லாவை மட்டும் குறை கூறாதீர்கள்

ஸ்பெயின் கால்பந்தாட்ட அணியின் தோல்விக்கு அந்த அணியின் தலைவர் கோசில்லாவை மட்டும் குறை கூறக்கூடாது என்று உருக்கமாகக் கேட்டுள்ளார் அணியின் பயிற்சியாளர். "அது ஒட்டுமொத்த அணியின் தோல்வி" என்றும் அவர் கருத்துரைத்துள்ளார்.

உலகக்கிண்ண கால்பந்து தொடரின் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஸ்பெயின், நெதர்லாந்திடம் 5-1 என்ற கோல் கணக்கில் வீழ்ந்தது.

இந்த மோசமான தோல்வியை தொடர்ந்து பலவிதமான விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

ஸ்பெயின் அணியின் தலைவர் மற்றும் கோல் காப்பாளரானஇகேர் கேசில்லாசின் மோசமான ஆட்டமே தோல்விக்கு வித்திட்டது என பல தரப்பினரிடம் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன.

இதனால் அடுத்த போடியில் அவர் நீக்கப்படுவாரா என்ற கேள்விக்கு அணியின் பயிற்சியாளர் வின்செண்ட் டெல் போஸ்கியூ பதில் கூறுகையில், கேசில்லாசை மட்டும் குறை சொல்ல கூடாது.

ஒரு அணி தோற்கிறது என்றால், வீழ்ச்சிக்கு தனிநபரின் செயல்பாடு மட்டுமே காரணமாக இருக்க முடியாது. ஒட்டுமொத்த அணியும் பலவீனமடைந்ததே தோல்விக்கு காரணம் என்று கூறியுள்ளார். (உ)

## ஒஸ்காரை வென்ற உலகக் கிண்ணம்




உலகக்கிண்ண தொடக்க ஆட்டத்தில் நெய்மர் அடித்த முதல் கோல் பற்றி சமூக வலைதளங்களில் கோடிக் கணக்கில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

தனது முதல் போட்டியில் பிரேஸில் அணி குரோஷியாவை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்தப் போட்டியில் பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் அதிரடியாக தனது முதல் கோல் மூலம் போட்டியை தொடங்கினார்.

இது பற்றி வலைதளங்களில் 5.8 கோடி கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன. இது இந்த ஆண்டில் நடந்த ஆஸ்கார் விருது குறித்து கருத்துகளை பரிமாறியவர்களின் எண்ணிக்கையை விட இது 5 மடங்கு அதிகம்.

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டீனா அணி முதன் முதலாக உலகக் கோப்பையில் விளையாடும் பொஸ்னியா-ஹெர்சகோவினா அணியை 2-1 கோல் கணக்கில் வீழ்த்தி முதல் வெற்றியை ஈட்டியது.

நடுக்களத்தில் 5 வீரர்கள், தடுப்புக் களத்தில் 2 வீரர்கள் முன்களத்தில் 3 வீரர்கள் என்ற கள அமைப்புடன் அர்ஜென்டீனா இறங்கியது. பொஸ்னியா அணிக்கு பிரேஸில் ரசிகர்கள் உரத்த குரலில் ஆதரவு கொடுத்தனர்.

அவர்களை கேலி செய்யும் விதமாக அர்ஜென்டீனா ரசிகர்கள் பீலேயை விட மரடோனா சிறந்த வீரர் என்று பாட்டுப்பாடி வெறுப்பேற்றினர். மரடோனா போல் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மெஸ்ஸி இடைவேளைக்கு முன்பு மிகவும் மந்தமாக ஆடினார். மிகவும் சாதாரணமாக ஆடினார். வரும் பந்தை கோட்டை விடுவது. சோம்பேறித்தனமாக நகர்தல் என்றுதான் மெஸ்ஸி இடைவேளைக்கு முன்புவரை ஆடினார்.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு கோலுக்கு இடப் பக்கத்திலிருந்து 40 அடி தூர 'ஃப்ரீ கிக்' கிடைத்தது. மெஸ்ஸி அதனை அடிக்க மார்கஸ் ரோஜோ அதனை தலையால் முட்டி கோல் கம்பங்களுக்குள் தள்ள முயன்றார். ஆனால் பந்து பொஸ்னியா வீரர் சியாத் கொலாசினாக் காலில் அதுவாகவே பட்டு கோல் ஆனது. அர்ஜென்டீனா அணிக்கு பொஸ்னியா அணி கோல் அடித்துக் கொடுத்த கணக்கில் அர்ஜென்டீனா 1-0 என்று முன்னிலை பெற்றது.

உலகக் கோப்பை கால்பந்து வரலாற்றில் ஆட்டம் துவங்கிய 2 நிமிடங்கள் 8 வினாடிகளில் சொந்த கோல் போடப்பட்டது இதுவே முதல் முறை.

பொஸ்னியா அணி இதற்காக அசந்து போய் விடவில்லை. தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். குறைந்தது 2 அல்லது 3 கோல்களையாவது அவர்கள் அடித்திருக்க வேண்டும். ஆனால் அர்ஜென்டீனா கோல் காப்பாளர் செர்ஜியோ ரொமேரோவின் கைகளுக்கு அவை நேராக அடிக்கப்பட்டதால் தடுக்கப்பட்டன.

இடைவேளைக்குப் பிறகு அர்ஜென்டீன மேலாளர் சாபெல்லோ, அணியின் கள அமைப்பை மாற்றியதோடு, ஹிகுவே, ஃபெர்னாண்டோ கேகோ ஆகியோரைக் களமிறக்கினார். இடைவேளைக்குப் பிறகு பொஸ்னியா அணி சற்றே ஆக்ரோஷத்தைக் கூட்டியது. பொஸ்னிய வீரர் ஹஜோரோவிச் இரு முறை ஆர்ஜென்டீனா கோல் காப்பாளர் ரொமேரோவை அச்சுறுத்தினார்.

சௌாத்லூலிச் அருகிலிருந்து தலையால் முட்டிய பந்து கோல் ஆகிவிடும் என்று எதிர்பார்த்த தருணத்தில் அர்ஜென்டீனா காப்பாளர் ரொமேரோ அருமையாகத் தடுத்தார்.



வெற்றியைக் கொண்டாடும் ஆர்ஜென்ரீனா ரசிகர்கள்

அடுத்தடுத்து பொஸ்னியா வீரர்கள் ஆர்ஜென்டீனா கோல் காப்பாளரின் கைகளுக்குள்ளேயே அடித்தனர். அல்லது 35 அடி அல்லது 40 அடியிலிருந்து கோலுக்கான உதையை ஆடி விரயம் செய்தனர். இப்படியே போய்க்கொண்டிருந்த ஆட்டத்தில் 65ஆவது நிமிடத்தில்தான் உயிர் வந்தது. மெஸ்ஸி மெஸ்ஸி என்று ரசிகர்கள் கோஷம் எழுப்பி கொண்டேயிருந்ததற்கு பலன் கிடைத்தது.

இடைவேளைக்குப் பிறகு மெஸ்ஸியின் ஆட்டம் வேகம் பெற்றிருந்தது. பொஸ்னியா வீரர்கள் புடைசூழ நின்று கொண்டிருந்த மெஸ்ஸி தன்னிடம் தள்ளப்பட்ட ஒரு பந்தை 3 அல்லது 4 பொஸ்னிய வீரர்களைக் கடந்து எடுத்து படுவேகமாக சீறிக்கொண்டு முன்னேறி கோலாக மற்றினார். இதுவே வெற்றிக்கான கோலாகவும் அமைந்தது.

அதன் பிறகு மெஸ்ஸி, அகியுரோ கூட்டணியே பொஸ்னியாவை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் கோல் அடிக்க முடியவில்லை, மாறாக ஆட்டம்முடிய 6 நிமிடங்கள் இருக்கும்போது பொஸ்னியா ஒரு கோல் அடித்தது. அதன் கடின உழப்பிற்கு பலன் கிடைத்தது. மெஸ்ஸி மீது ரசிகர்கள் வைத்திருந்த நம்பிக்கை வீண் போக்வில்லை.

அந்த அணியின் இபிசேவிச் கடைசியில் ரொமேரோவைக் கடந்து கோல் அடித்தார். பொஸ்னியா அணியின் உலகக் கோப்பை முதல் கோல் ஆகும் இது.

இடைவேளைக்குப் பிறகு தாக்குதல் கள அமைப்பை மாற்றி தற்காப்பான 4-3-3 என்ற பழைய நிலக்கு ஆர்ஜென்டீனா திரும்பியது அதன் தன்னம்பிக்கையின்மையையே காண்பிக்கிறது. மெஸ்ஸி ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். (உ)

## ஜப்பானிய ரசிகர்களின் முன்மாதிரி

*பிரேஸிலில் நடைபெறும் உலகக் கோப்பை போட்டியில் ஜப்பான் அணி தோல்வி தழுவினாலும் ரசிகர்கள் அதற்காக வருந்தாமல் மைதான இருக்கைப் பகுதியில் போடப்பட்ட குப்பைகளை அகற்றியுள்ளனர்.*

*ஐவரி கோஸ்ட் அணிக்கு எதிரான போட்டியில் ஜப்பான் 90 நிமிடங்கள் வரை 1-0 முன்னிலை வகித்தது. ஆனால் கடைசி வினாடிகளில் 2 கோல்களை ஐவரி கோஸ்ட் அணி அடித்து 3 புள்ளிகளைத் தட்டிச் சென்றது.*

*இந்த ஆட்டத்தைக் காண சுமார் 100 ஜப்பானிய ரசிகர்கள் வந்திருந்தனர். அவர்கள் தங்கள் அணியை ஊக்கப்படுத்தியதோடு. தோற்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மைதானத்தில் இருக்கைக்கு அருகே போடப்பட்ட குப்பைகளை அகற்றியது பலருக்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*கடைசி விசில் ஊதப்பட்டு ஆட்டம் நிறைவடைந்தவுடன் போட்ட குப்பைகளைக் கண்டு கொள்ளாமல் அப்படியே விட்டுச் செல்லும் பொறுப்பில்லாத்தனத்தையே நாம் இதுவரை மைதானங்களில் கண்டிருப்போம். அதிலும் எம் ஊர் மைதானங்களில் என்றால் போட்டி முடிந்து நான்கு நாள்களானாலும் குப்பைஅப்படியே கிடக்கும். மைதானங்கள் என்று இல்லை, எங்குமே நமக்கு குப்பைகள் பற்றிய சுற் றுச் சூழல் தன்னுணர்வு இருப்பதில்லை. மாறாக சுற்றுச்சூழல் பற்றிய தன்னுணர்வுடன் ஜப்பானிய ரசிகர்கள் குப்பைகளை அகற்றியது அவர்களது தேசத்திற்கு பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த ஒரு நிகழ்வாகியுள்ளது. (உ)*

## பிரான்ஸ் இலகு வெற்றி

ஹொண்டூரஸ் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி கொண்டது பிரான்ஸ் அணி.

பிரேஸிலில் நடக்கும் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தில் இன்று நள்ளிரவு நடந்த 'ஈ' பிரிவு அணிகளின் ஆட்டத்தில் பிரான்ஸ். ஹொண்டூரஸ் அணிகள் மோதின. இதில் முதல் பாதியாட்டம் நிறைவடையும் சந்தர்ப்பத்திலேயே (45ஆவது நிமிடம்) பிரான்ஸ் அணி முதல் கோல் போட்டது. இதை கரீம் பென்ஷெமா அடித்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் முன்னிலைவகித்தது. இரண்டாம் பாதியாட்டத்தில் பிரான்ஸின் நோயல் வல்லாடரஸ் 48 ஆவது நிமிடத்திலும், 72ஆவது நிமிடங்களில் மீண்டும் கரீம் பென்ஷெமா கோல் போட பிரான்ஸ் அணி 3:0 கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கரீம் பென்ஷெமா தெரிவானார்.



பிரான்ஸ் வீரர் கரீம் பென்சிமா கோல் கம்பத்தை நோக்கி பந்தை ஓங்கி உதைக்கிறார்.




# கோமாவில் இருந்து மீண்டார் ஷூமாக்கர்

'ஃபார்முலா வன்' கார் பந்தயத்தின் நட்சத்திர வீரர் மைக்கேல் ஷூமாக்கர் கோமாவிலிருந்து மீண்டு நலமுடன் வீடு திரும்பியுள்ளார்.

இந்தத் தகவலை அவரது குடும்பத்தினர் நேற்று வெளியிட்டனர். மேலும் அவரது ஆரோக்கியம் சீரடைய மறுவாழ்வு சிகிச்சையும் அவருக்கு அளிக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தென் கிழக்கு பிரான்சில் உள்ள க்ரினோபிள் என்ற இடத்தில் அவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றார். ஷூமாக்கருக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர் அவரது குடும்பத்தினர். அவருக்கு இரவும் பகலும் அயராது சிகிச்சை அளித்து மீட்ட மருத்துவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் பிரான்சில் உள்ள மெரிபெல்லில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டபோது கீழே விழுந்து பாறையில் மோதிப் படுகாயமடைந்தார் ஷூமாக்கர். அதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. கோமாவில் வீழ்ந்தார். சுமார் 60கிமீ வேகத்தில் அவர் அன்று சென்றதாக விசாரணையில் தெரிய வந்தது. பாறையில் மோதிய வேகத்தில் அவரது தலைக் கவசம் இரண்டாக உடைந்தது. அவ்வளவுக்கு வேகம். இப்போது அவர் கோமாவிலிருந்து மீண்டு விட்டாலும் பழைய நிலைமைக்கு அவர் திரும்புவதற்கு நீண்ட கால மறுவாழ்வு சிகிச்சை தேவைப்படும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மைக்கேல் ஷூமாக்கர் 1990களில் 'ஃபார்முலா வன்' போட்டியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியவர். ஒன்றல்ல, இரண்டல்ல... 7 முறை பட்டம் வென்று 'ஃபார்முலா வன்' உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ஷூமாக்கர், இன்றளவிலும் உலகின் தலைசிறந்த 'ஃபார்முலா வன்' வீரராகப் போற்றப்படுகிறவர். கண் இமைக்கும் நேரத்தில் கார்கள் கடந்து செல்லும் இந்த 'ஃபார்முலா வன்' போட்டியில் நிகழ்த்தப்பட்டிருக்கும் சாதனைகளில் பெரும்பாலானவை ஷூமாக்கருக்கு சொந்தமானவையே.

## பூசகர் தேவை

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயத்திற்கு நிரந்தரமாக பூஜை செய்வதற்கு பூசகர் தேவை.
(குருக்கள் விரும்பத்தக்கது)

**பூசகருக்கான வீடு உண்டு**
**சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.**

**தொடர்புகளுக்கு :**
ஆலய பரிபாலன சபைத் தலைவர்
**0776328124**

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
**GUNAA BEST PC** 52,Hospital Road,Jaffna.

## மரண அறிவித்தல்



### சிவராம கிருஷ்ணன் வசந்தராஜ்

கோப்பாய் மத்தி காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராமகிருஷ்ணன் வசந்தராஜ் நேற்ற (16.06.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவராமகிருஷ்ணன் - வசந்தி தம்பதியரின் அன்பு மகனும், தமிழ்ச்செல்வி, பிரதீபன், பவிலாதனி, பார்த்தீபன், கௌரிகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காந்தருபன், ஜெனகன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், துவாதயன், லதுமிதன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி நேசமணி தர்மலிங்கம்

புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி தர்மலிங்கம் நேற்று (16.06.2014) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற அப்புத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சியாமளாதேவி (கனடா), உமாதேவி (இந்தியா), சசிதரன், சபேசன் (டென்மார்க்), செந்தீஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தகுமார்(கனடா), ஜெய பாலசிங்கம்(இந்தியா), கவிதா, பிரியா (டென்மார்க்), செல்வி(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தங்கரத்தினம்,காலஞ்சென்ற சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நவக்கிரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை புதன்கிழமை (18.06.2014) முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி, புத்தூர்

**தகவல்**: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி யேற்றூட் அருளானந்தம்



யாழ். இளவாலை பேயிட்டியைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட யேற்றூட் அருளானந்தம் 14-06-2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை- மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோசப்-லூசியா (உயரப்புலம், ஆனைக்கோட்டை) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தத்தின் (இராசரட்ணம், பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், அல்பின் இராசசிங்கம் (ஜேர்மனி), கிறிஸ்ரோபர் பாலசிங்கம் (சுவிஸ்), மார்கரேற் ரஞ்சினி (மோகனா-கனடா), வெரோனிக்கா ரஞ்சிதம் (யோகனா-நீர்கொழும்பு), ரட்ணசிங்கம் (கனடா), மேரி றெஜீனா (கனடா), ஜெயசிங்கம் (கனடா), மரீனா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் சிங்கராசா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரிஸ்ரெல்லா (ஜேர்மனி), சாந்தி (சுவிஸ்), மரியதாஸன் (கனடா), மரியயோசப் (நீர்கொழும்பு), பிரேமா (கனடா), அரசன் (கனடா), விஜயசிறி (கனடா), யோசப் அன்ரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர் களான நவரட்ணம், யேசுரட்ணம், செல்வரட்ணம், பார்பரா, மற்றும் ஏமிபெல் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், டறினா லெனார்ட் (சுரேஸ்-கனடா), நெவில் டயானா (கனடா), கஜீத்தரன் (மாரீசன்கூடல்), ஆன் மயூரி (மாரிசன்கூடல்), கஜேந்தரன் (மாதகல்) சியாமினி (மாதகல்), யூலின் (ஜேர்மனி), சில்வியா ஜெகன் (இலங்கை), திவாகரன் (ஜேர்மனி), விக்டோறியா (ஜேர்மனி), கிளொடியா (இலங்கை), ரொபின் (கனடா), ரோமிளா (கனடா), சொவ்யா (கனடா), மரினா (கனடா), நியான்சன் (கனடா), கபீனா (கனடா), தாட்ஷா (கனடா), கிறிஸ்டி (கனடா), கரிஸ் (கனடா), கிரிஷா (கனடா), ரோஜன் (கனடா), ரொக்ஷன் (கனடா), பிரித்தன் (இலங்கை), சப்ரினா (ஜேர்மனி), சாரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நிருஷா (கனடா), ஜோபன் (கனடா), சுவிர்தன் (இலங்கை), ஜொபிர்தன் (மாரீசன்கூடல்), இவங்கா (கனடா), ஜெகொனதாப் (மாதகல்), யுவானர்தன் (மாரீசன்கூடல்) ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இன்று (17-06-2014) செவ்வாய்க்கிழமை பி.ப 03:00 மணியளவில் இளவாலை லூர்து அன்னை மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
- இலங்கை : +077 7761339
- ஜேர்மனி : +4950675069
- கனடா : +19052941018
  செல்லிடப்பேசி: +15143364799
- சுவிட்சர்லாந்து செல்லிடப்பேசி: +41319926507

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(49154)(10)

## கரப்பந்தாட்டம்:
# வசந்தஸ்ரீ, கலைமதி அணிகள் இறுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழகம் அச்சுவேலி கலைமதி விளையாட்டுக்கழகம் அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
கடந்த சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டதுக்குத் தகுதி பெற்றது. (உ-23)

## கரபந்தாட்ட சங்கம் நடத்தும் கரப்பந்துத் தொடர்
# ஆவரங்கால் மத்தி, இந்து இளைஞர் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன



யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 'ஏ' பிரிவு அணிகளுகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி, ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.
கடந்த சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)

# உதயதாரகை வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 17
பூநகரி அண்ணா இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 4ஆம் கட்டை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சிறந்த ஆட்ட நாயகனாக கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி வீரன் கபில் தெரிவானர். (உ-23)

## உதைபந்து போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
17 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி இம் மாதம் இறுதியில் இடம் பெறவுள்ளது.
எனவே மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள் இணைப்பாளர் பேட்டி பெனிஸ்ரஸூடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (ற-23)

# வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் சென்ஸிரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)

## கற்கோவளம் உதைபந்தாட்டம்: 3 அணிகள் அடுத்த சுற்றுக்கு



கரணவாய், ஜூன் 17
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டத்தில் இமையாணன் மத்திய வி.க., அல்வாய் பாரதி வி.க., உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க. என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.
அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
அதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென். சேவியர்அணியும்மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் நேரம் முடிவுறும் தறுவாயில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 3:1 என்ற அடிப்படையில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும், அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை அபாரமாக விளையாடிய அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் அடிப்படையில் வென்றது.
இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல்கள் அடிப்படையில் வென்றது. (உ-108)

# அராலி ஏ.எல்.,ஊரெழு பாரதி வெற்றி

**அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவையொட்டி வடமாகாண ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
நேற்று திங்கட்கிழமைஇடம் பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது
இதில் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இர்ண்டாவது ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது.
இதில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்17
குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவையொட்டி வடமாகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் 11 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேச பாடசாலை சிவப்பு அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது. (உ-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுருநாதர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாட்ட ரீதியாக மின் னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று செவ்வாய்க்கிழமை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக (வெள்ளை) அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.
பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23-108)



# ஜேர்மனி கோல் மழை போர்த்துக்கல் பரிதாபம்

உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் நேற்றைய முதல் ஆட்டத்தில் ஜேர்மனி 4:0 என்ற கணக்கில் போர்த்துக்கல்லை இலகுவாக வென்றது.

அபாயகரமான ஆட்டக்காரர் என வர்ணிக்கப்படும் ரியல் மட்றிட் கழக நட்சத்திர ஆட்டக்காரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் மாயா ஜாலம் எதுவும் பலிக்காத நிலையில் போர்த்துக்கல் அணி பரிதாபத் தோல்வியைத் தழுவியது.

தோமஸ் முல்லர் ஹற்றிக் கோல்களை அடிக்க ஜேர்மனி அணி இலகுவாகத் தனது முதல் வெற்றியைப் பறித்தது. பலமான போட்டியை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கல் அணி ஆக்ரோஷமாக ஆடியபோதும் சோடைபோனது.

ஜேர்மனி அணியின் பக்கம் அதிர்ஷ்டமும் இருந்தது. ஆட்டம் தொடங்கி சிறிது நேரத்திலேயே தண்டனை உதை மூலம் முதல் கோலைப் பெற்றது ஜேர்மனி அணி. தொடர்ந்து முதல் பாதி ஆட்டத்துக்குள் மேலும் இரண்டு கோல்களும் பெறப்பட்டன. மூலை உதை மூலம் இரண்டாவது கோல் கிடைத்தது. நேரடி உதை மூலம் முல்லர் மூன்றாவது கோலை கம்பங்களுக்குள் தள்ளினார்.

ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் நான்காவது கோல் அடிக்கப்பட்டது. அதனையும் முல்லரே நேரடியாக உதைத்தார்.

போர்த்துக்கலின் தடுப்பு ஆட்டக்காரர் பேப், முதல் பாதி ஆட்டத்திலேயே சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் எஞ்சிய ஆட்டம் முழுவதையும் 10 பேருடனேயே ஆடவேண்டிய நிர்ப்பந்தம் போர்த்துக்கல் அணிக்கு ஏற்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக போர்த்துக்கல் அணி மிக மோசனமான ஆட்டத்தை வெளிப்படுத்தியமை ரசிகர்களைக் கோபமடைய வைத்துள்ளது. (உ)

# நம்பிக்கை நட்சத்திரம் ஸ்டெர்லிங்



உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் இங்கிலாந்து அணிக்காக கலக்கலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இளம் வீரர் ரஹீம் ஸ்டெர்லிங் இளம் வயதிலேயே எவ்வளவு கெட்ட பெயர் எடுக்க வேண்டுமோ அவ்வளவு கெட்ட பெயரை சம்பாதித்தும் இருக்கிறார்.

ரஹீம் ஸ்டெர்லிங், ஜமைக்கா நாட்டைச் சேர்ந்தவர். அவர் 5 வயதில் தனது தாயாருடன் இங்கிலாந்தில் குடியேறினார். வடமேற்கு லண்டனில்உள்ளஆரம்பபள்ளிக்கூடம்ஒன்றில் ரஹீமை அவரது தாயார், சேர்த்துவிட்டார். ஆனால் அது சிறிது காலம்தான்.. அவரது நடவடிக்கைகள் மிக மோசமாக இருந்ததால் பள்ளியில் இருந்து இடைவிலக்கப்பட்டார். அப்போது அவரது ஆசிரியர் ஒருவர் சொன்ன வாசகம் இதுதானாம்.. "ஜெயிலு அல்லது புட்பாலு. இது மாதிரி நடந்து கிட்ட.. 17 வயசிலேயே ஜெயில்ல இருப்ப.. இல்லைன்னா இங்கிலாந்து கால்பந்து அணிக்காக விளையாடி கிட்ட இருப்ப.." என்பதுதான்.

**அடிதடி வழக்கு**

அந்த ஆசிரியர் சொன்னபடியே, ரஹீம் ஜெயிலுக்குப் போவதற்கான வாய்ப்புகள் வந்தன.. பெண்கள் இருவரை தாக்கியதாக 2 வழக்குகள் போடப்பட்டன. ஆனால் போதுமான சாட்சியங்கள் இல்லாததால் தப்பிவிட்டார்.

**16 வய்தில் அப்பா**

இதில் மிக முக்கியமானது ரஹீமுக்கு இப்போது 2 வயதில் மகள் இருக்கிறார் என்பது. 16 வயதிலேயே ரஹீம் அப்பாவாகிவிட்டார்.

லிவர்பூல் அணி இங்கிலாந்தின் லிவர்பூல் உள்ளூர் அணிக்காக விளையாடிக் கொண்டிருந்தார் ரஹீம். இங்கிலாந்து அணி அதனைத் தொடர்ந்து இங்கிலாந்தின் 16 வயதுக்குட்பட்டோர் அணி, 17 வயதுக்குட்பட்டோர் அணி, 21 வயதுக்குட்பட்டோர் அணிகளில் இடம் பிடித்தார். தற்போது இங்கிலாந்து நாட்டு அணிக்காக பிரேஸிலில் கலக்கிக் கொண்டிருக்கிறார். பிரேஸிலில் கலக்கல் இத்தாலிக்கு எதிரான ஆட்டத்தின் போது இங்கிலாந்து ஒரு கோல் அடிக்க ரஹீம் ஸ்டெர்லிங்தான் காரணமாக இருந்தார். மிகவும் ஆக்ரோஷமாக பந்தை அவர் தட்டிச் செல்லும்போதும் பாஸ் செய்யும் போதும் லாவகமான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார் ரஹீம். இப்போது இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரர்களில் ஒருவராக உருவெடுத்திருக்கிறார் ரஹீம் ஸ்டெர்லிங்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
THE OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTER

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

⇒ கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கீகரிக்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே 136+ நாடுகளில் 1040+ (இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை மேலும் 1976 முதல் யாழில்) கிளை நிறுவனங்களுடன் சர்வதேச வலையமைப்பை கொண்டு FRENCH EMBASSY இன்கீழ் இயங்குகின்றது.
⇒ எமது உயர் தகைமையுடைய பல ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சு ஆற்றலை விரைவாக உறுதிப்படுத்துகிறார்கள்.
⇒ வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராட்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள்.
⇒ Certificates & International Diplomas (DELF A1, A2...)

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093
குறிப்பு: இவ்வீதியில் புகையிரத பாதையை அடுத்துள்ள சந்தியில்.

தேவை

அலுவலகப் பாவனைக்கென 5000-6000 ச.அடி பரப்பளவினை உடையதும் 5 வாகனங்கள் தரிப்பிடத்தைக் கொண்டதுமான யாழ் நகரிலிருந்து சுமார் 2 கி.மீற்றர் சுற்று வட்டத்திற்குள்ளதுமான வீடு தேவைப்படுகிறது. (49088) (7,6,3)

தொடர்புகளுக்கு : 077 354 0471 அல்லது 077 354 0470

புதிய முறையிலான
தேசிய ஆங்கில டிப்ளோமா




ஷாம்சனின் 20 புத்தகங்கள் கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி அனைவரும் இணையமுடியும்
வீட்டிலிருந்தபடியே ஒவ்வொரு புத்தகத்திலுமுள்ள 250 பயிற்சிகளைசெய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது.
பயிற்சிநெறி முடிவில் அனைவராலும் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும் என்பதை எமது 20 வருட மொழிஆராய்ச்சியின் மூலம் உறுதிசெய்துள்ளோம்.
பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வீட்டுப்பெண்கள் ஆங்கிலம் பேசவிரும்புவோர், வெளிநாடு செல்வோருக்கானது.
20.06.2014 இற்குமுன் பயிற்சியில் இணைவோருக்கு பயிற்சி கட்டணம் ரூபா 3000.00 மட்டுமே!
பயிற்சிநெறி முடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.
[ இலங்கை பூராகவுமுள்ள எவரும் இணையமுடியும்]

SAAMSON LANGUAGE SCHOOL
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 33 13
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.